ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோமணியாகிய

புகழேந்திப்புலவர்.

திருவாய்மலர்ந்தருளிய

செஞ்சிமாநகரம்

# தேசிங்குராஜன்கதை.

இஃது

சிதம்பரம்.

குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

நுங்கம்பாக்கம்

அருணகிரிமுதலியார்

அவர்களது

அம்பாள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

க அ௯ உ

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# தேசிங்குராஜன்கதை.

காப்பு

### விநாயகர் தோத்திரம்,

மேதினியரசரெல்லாம் வியப்புடன்புகழ்வதாக
நீதியுநெறியுஞ்செங்கோல் நிலமையுந்தருமமுற்று
தீதிலாதென்றுங்காக்குந் தேசிங்குராஜனற்சீர்க்
காதையையெடுத்துரைக்கக் கணபதிகாப்புதானே.

### முருகர்தோத்திரம்.

ஜெயங்கொள்தேசிங்குராஜன் சீர்கதையதனைச்சொல்ல
வயங்கொண்மாமயிலேறி வருந்திருமுருகர்தூய
நயங்கொள்பாதத்தையுந்தா ளையிமார்கள்சீரார்
வியங்கொள்பாதத்தையுந்தான் விரும்பியேவணங்குவோமே.

### சிவன்தோத்திரம்.

தஞ்சமென்றோரைக்காக்குந் தயாளதேசிங்குராஜன்
எஞ்சலில்கதையைச்சொல்ல வெந்தையாஞ்சுந்தரேசர்
செஞ்சரணத்தையுந்தன் றேவிபார்வதியாள்பாகங்
கொஞ்சுமாவடியையுங்கை கூப்பியேவணங்குவோமே

### விஷ்ணுதோத்திரம்.

சங்குசக்கரகோதண்டந் தண்டுவாள்கரத்திற்கொண்ட
செங்கண்மால்பதமுஞ்சீரார் திருவின்பொற்பாதம்நாளும்
பொங்கமாயிறைஞ்சியுன்னிப் புகழுந்தேசிங்குராஜன்
துங்கமாங்கதையைச்சீராய் சொல்லுவோம்புவியினோர்க்கே

### சரஸ்வதிதோத்திசம்,

பலகலைகளுணர்ந்தேத்திப் போற்றுகின்ற
பாவாணர்க்குதவிசெய்து பாதுகாக்கும்
நிலைமையுள்ளதவளநிற முடையாள்வாசம்
நிகழுஞ்சரஸ்வதியுபயத் தாளிறைஞ்சி
அலையெறியுங்கடல்சூழும் புவியோர்மெச்சும்
அளங்கனுக்கண்டச்சங்கொள் ளழகுறைந்த
விலையிலாமணிமுடித்தே சிங்குராஜன்
வியன்றருசீர்ச்சரிதைதனை விளம்புவோமே

## தேசிங்குராஜன்கதை,

### அவையடக்கம்

முத்தமிழின்பயனுணர்ந்த புலவோர்முன்னே
மூடனடியேனுயேன் பிதற்றுகின்ற
பத்திரமிகுத்தெழிற்செங்கோல் செலுத்துகின்ற
பராக்கிரமனதிவீர ராமனென்றே
எத்திசையும்புகழுந்தேசிங்குராஜன்
எழிற்கதையின்சொற்குற்றம் பொருட்குற்றந்தான்
மெத்தவிருக்கினுங்குதலைக் சொல்லைப்போலே
வியன்கொள்வார்பாராட்டி நயங்கொள்வாரே

### நாட்டுச்சிறப்பு

சீருஞ்சிறப்புமுள்ள தேசிங்குமகாராஜன்
பேரும்பிரபலமும் பெருகிவரும்படியாய்
செந்நெற்கதிர்பருத்துச் செழித்துவளர்கிறதும்
கன்னற்கொழித்துக் காட்டைமறைப்பதுவும
வனபுலியும்பசுவும் மருவியேவாழ்கிறதும்
தென்புடனேயானை செழித்துத்திரிகிறதும்
காடைகவுதாரி காட்டுப்புறாகூவுறதும்
பேடைமயில்கூடிப் பிரியமடைகிறதும்
புன்னைபலாச்சோலை பொருந்திநிறைந்திடலும்
தென்னைமரம்வாழைமரம் செறிந்துநிறைந்திடலும்
சந்தனச்சோலைகளும் சாதிமல்லிபூத்திடலும்
மந்தாரைகோங்கு மல்லிகைப்பூச்சோலைகளும்
தாமரைப்பொய்கைகளுந் தடாகமுள்ளஏரிகளும்
வாமமுறுங்கான்யாறும் வாய்ப்புகளுமென்னசொல்வோம்

### நகரச்சிறப்பு

செஞ்சிநகர்சீரைச் சிலவற்றையெடுத்துரைப்போம்
எஞ்சலில்லாவீதிகளு மெழிற்றோரணநிறையும்
வாழைக்கமுகளெங்கும் வளமாகக்கட்டியதும்
ஏழையரைக்கூவியன்னம் இட்டுவருகுவதும்
இந்திரலோகம்போ லிருக்குமரண்மனையும்
கந்தமின்னார்களிட கற்பின்துரைமகளும்
வேதியர்கள்கூடி வேதம்படிப்பதுவும்
நீதிதவறுமல் நிகழ்புலவோராவதும்
பொன்னகரின்தன்னைப்போல் பொருந்திநின்றுவதும்
மன்னவன்கீர்த்திதன்னை வாழ்த்திவருகிறதும்

## கதையின் வரலாறு

வடக்கேவெகுதூரமிருக்குதுபாரு மகமேருசாரலொன்று
அந்தமகமேருசாரலில்தபங்கள்செய்கிறார் வர்னலட்சம்ரிஷிகள்
கர்த்தனைநோக்கித்தபங்கன்செய்கிறார் கனத்த்தேசரிஷிகள்
சிவசிவாவென்றசத்தமுமங்கே தெய்வலோகங்கேட்கும்
அரகராவென்றசத்தமுமங்கே ஆகாயமட்டுமெட்டும்
கோவிந்தாவென்றசத்தமுமங்கே கொடிமுடிதான்கேட்கும்
மாயவாவென்றசத்தமுமங்கே வைகுந்தந்தான்கேட்கும்
துலுக்கனொருவன்கர்த்தனைநோக்கித் தேடிதவஞ்செய்தான்
பகவானைநோக்கிதுலுக்கனொருவன் பாரதவஞ்செய்தான்
மந்திரவித்தைதந்திரவித்தை மகாவித்தைதானறிவான்
இந்தப்படியாய்ரிஷிகளெல்லா மிருந்துதவஞ்செய்தார்

## குதிரையின்பெருமை.

அப்போ-தெய்வலோகத்தில்பிறந்தகுதிரை திசைதப்பிவருகுதுபார்
இரங்கர்கிருபையால்திசைதப்பிகுதிரை நடனமாகுதுபார்
உச்சிமலையில்புல்லுகள்மேய்ந்து ஒதுங்கிவருகுதுபார்
சாரலோரமாய்ப்புல்லுகள்மேய்ந்து சாய்ந்துவருகுதுபார்
கோடிசூரியனுதித்தாற்போலக் குலுங்கிவருகுதுபார்
தங்கமயமானகுதிரையைக்கண்டான் தவஞ்செய்யுந்துலுக்கன்
குதிரையைக்கண்டு ஓடிவருகிறான் தோங்குதேசத்துலுக்கன்
துலுக்கனைக்கண்டுகர்ச்சனைசெய்தது தெய்வமேகக்குதிரை
அஞ்சனம்போட்டுக்குதிரைவலிமை யறிந்துமேகொண்டானும
மந்திரவலையைவிசிறிப்போட்டு மடக்கிபிடித்தானும்
தந்திரவலையைவிசிறிப்போட்டுத் தடவிப்பிடித்தானும்
மந்திரத்தாலேகுதிரைப்பாகரை வரிசையாய்வைத்தானும்
நாலாயிரம்பேர்குதிரைப்பாகரை நடுவாகவைத்தானும்
குதிரைமேலேகூடாரம்போட்டுக் கொண்டுமேவாரானும்
ஐந்துநாழிவழிதூரமிருந்து அதட்டியேவாரானும்
தூரத்திலிருந்துகுதிரைப்பாகருஞ் சூழ்ந்துமேவாராரும்
தகத்தகாயமாய்நடுவிலிருந்து தாண்டுதுமுன்னாலே
மந்திரவலையிலகப்பட்டகுதிரை வருகுதுமுன்னாலே
மந்திரத்தாலேமாயாபக்கிரி மடக்கிக்கொண்டுவாறான்
டில்லிக்குவெகுமதிகொடுப்போமென்று சேரக்கொண்டுவந்தான்
வெகுமதிசெய்யப்பாராசாரியை வெளியில்கொண்டுவநதான
வெளியில்நிறுத்திப்பக்கிரியவனும் வேலையென்னசெய்தான்

குதிரையைச்சுற்றிக்கூடாம்போட்டுக் கொடியகாவல்வைத்தான்
யானைசங்கிலிபோட்டுமடக்கினா னந்தகுதிரையைத்தான்
மந்திரத்தாலேசங்லிமாட்டி மடக்கிநிறுத்தினானும்
மந்திரவலையைக்கவித்துவிட்டான் மாயாபக்கிரியும்
மயக்கந்தெளிந்துகண்ணாலேகண்டது வர்னமேகக்குதிரை
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே யலறிக்கனைத்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போலே குலுங்கக்கனைத்ததுபார்
டில்லிபட்டணமைங்காதவழியும் சேரநடுங்குதுபார்
கூடகோபுரமாடமண்டபம் குலுங்கநடுங்குதுபார்
பட்டணமுள்ளஜெனங்களெல்லாம் பதறிவிழுந்தார்கள்
பாட்சாதகத்துநடுங்கிபவனும் பதறிவிழுந்தானும்
மூன்றரைநாழிமூர்ச்சையாயினார் முழுதும்ராசாக்கள்
பட்டணத்திலுள்ளஜெனங்களெல்லாம் பதறிமூர்ச்சையானார்
டில்லிமதுரையுமூர்ச்சைதெளிந்து திகைத்துஎழுந்தானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
இதுஎன்னவதியசமென்னவதிசயம் ராஜலிங்கபாபு
அண்டமிடிந்துவிழுந்ததோசொல்லும் ராசலிங்கபாபு
ஏழுமேகமுங்கூடிவந்ததோ இவ்வுலகிலேதான்
ஜலுதியிலோடிசுற்றிப்பாரும் ராசலிங்கபாபு
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ராசலிங்கபாபு
ஒற்றைக்குதிரைக்காரனையா ராசலிங்கபாபு
ஓடியேசுற்றிப்பார்த்தானையா ராசலிங்கபாபு
வடக்குதிசையில்மின்னுதுபார் வர்னமேகப்புரவி
மின்னலைக்கண்டுகுதிரையைவிட்டான் ராசலிங்கபாவு
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் கோங்குபக்கிரியும்
எதிரிலேவந்துசலாஞ்செய்தா னிருந்தபக்கிரியும
பதில்சலாமுங்கொடுத்தானையா ராசலிங்கபாபு
சலாம்செய்துகுதிரையைக்கண்டான் ராசலிங்கபாவு
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தான் ராசலிங்கபாபு
ஐயாகேளுமையாகேளும் கோங்குபக்கிரியே
எந்ததேசத்திலிருந்தகுதிரை யிங்கேகொண்டுவந்தீர்
தெரியவென்னக்குச்சேதிசொல்லுந் தேசத்துபக்கிரியே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் கோங்குபக்கிரியும்
ஐயாகேளுமையாகேளும் ராசலிங்கபாபு
இந்தவுலகத்தில்பிறந்ததல்ல யிந்தபுரவியுந்தான்
அந்தபேச்சைக்காதிலேகேட்டது குதிரையானாலும
கோபம்வந்துமூண்டுகொண்டது குதிரைக்கானாலும
கடகடகடகடகூடவென்று கனைத்துநின்றதுவே
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை சொர்னமேகக்குதிரை
பன்னிரண்டுவயதுஆச்சுதுபாரு பாராசாரிகுதிரை
வெள்ளிக்கிழமையில்பிரந்தகுதிரை வேகமானகுதிரை

ஒருவருமண்டக்கூடாதுபாரு யுயர்ந்தமேசக்குதிரை
இந்தவுலகத்திலொருவருமில்லை யிந்தகுதிரையே
மனதுதுணிந்துஏறினாரானால் மாண்டுபோய்விடுவார்
தைரியங்கொண்டுஏறினாரானால் சதைந்துபோய்விடுவார்
தெய்வவரத்தினால்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
வரத்தினாலேபிறந்தபிள்ளை வந்துயேறவேணும
பூமிபாரந்தீர்க்கப்பிறந்தவன் இப்புரவியேறவேணும்
தேவரடியிற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
அந்தசொல்லைக்கேட்டவுடனே அலறிவிழுந்தார்கள்
டில்லிபதுரைக்குஎணுங்கொடுக்க தேடிவந்தேனென்றான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராசலிங்கபாபு
கேட்டவுடனேமனதுகலங்கிக் கீழேவிழுந்தானாம்
விழுந்தவுடனேதைரியங்கொண்டு மெள்ளவெழுந்தானாம்
எழுந்தவுடனேராசதுரைக்கு எழுதியேவிட்டானாம்
ஓலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் டில்லிபதுரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
அண்ணவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
தெய்வலோகத்துப்புரவியொன்று தேடியேவந்துதாம்
குதிரையேறிச்சவாரிசெய்துநான் கொண்டுவரவேண்டும்
சல்திசல்திகுதிரைகொண்டுவா அர்க்காருபாப்பையா
பட்டத்துயானையைக்கொண்டுவாடா அர்க்காருபாப்பை
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
தண்டுக்குச்சைகையூதினானையா அர்க்காருபாப்பையன்
பட்டத்துயானைவந்துநின்றது ராசன்முன்னாலே
யானையின்பேரிலேறினானையா டில்லிபதுரைதானும்
முதல்மந்திரிராஜலிங்கனும் முன்னேபோயிருந்தான்
மற்றமந்திரிபிரதானிகளும் வரிசையாய்நடந்தார்கள்
பேட்டிக்குவந்தராசதுரைகள் தன்பின்னேநடந்தார்கள்
நாலாயிரந்துருப்புகுதிரை நடந்ததுமுன்னாலே
காலாள்சேனைகளையாயிரம்பேர் கடுகநடந்திடவே
திமிதிமிதிமிதிமிதிமிதிமியென்று சேனைநடந்திடவே
சேனைவருவதைக்கண்ணாலேகண்டது தெய்வலோகக்குதிரை
கிடுகிடுகிடுகிடுகிடுகிடுவென்று கெர்ச்சனைசெய்ததுவே
கெர்ச்சனைசெய்தசத்தத்தினாலே கீழேவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே யலறிவிழுந்தார்கள்
ஆனைசேனைகுதிரைகளெல்லா மங்கேவிழுந்திடவே
டில்லிபதுரையும்யானையின்மீதில் திடுக்கிட்டுவிழுந்தானாம்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் துள்ளிவிழுந்தாராம்
மூலைக்குமூலைதுருப்புகுதிரைகள் முறிந்துகொண்டோடுதுபார்
அவ்வதிசயத்தைக்கண்ணாலேகண்டான் டில்லிபதுரைதானும்
அண்ணவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு

வந்ததொருமந்திரிமாரும் நடுங்கியேயோடிவந்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இதுஎன்னவதிசயமென்னவதிசயம் ராசலிங்கபாபு
இத்தனைநாளுமிந்தகுதிரையை யெங்கும்பார்த்ததில்லை
டில்லிவந்ததைகண்ணாலேகண்டான் தேசபக்கிரியும்
முழங்கால்சீலைபோட்டேயவனும் முன்னேசலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிபதுரைதானும்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழ்ந்துசலாஞ்செய்தார்
பேட்டிக்குவந்தராசதுரைகள் பெரியசலாஞ்செய்தார்
ஐயாகேளுமையாகேளும் கோங்குபக்கிரியே
இந்தப்புரவியெங்கேபிறந்தது எனக்குச்சொல்லுமையா
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ
தெய்வலோகத்தில்பிறந்தகுதிரை தேடிக்கொண்டுவந்தேன்
எனும்கொடுக்ககொண்டுவந்தே னிந்தப்புரவியைத்தான்
இந்தப்புரவியேறுகிறராஜா இந்தவுலகிலில்லை
இதற்கென்றுபிள்ளைபிறக்கப்போகிறா னிந்தவுலகிலேதான்
அந்தமட்டுக்கும்பாராசாரியை யடக்கிவையுமையா
குதிரைசேதியைசொல்லிநின்றான் கோங்குபக்கிரியும்



கோங்குபக்கிரி டில்லிபாட்சாவுக்கு குதிரைகொடுத்து,
வெகுமதிபெற்றுக்கொண்டது,

அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சந்தோஷமாகிப்பக்கிரியவனைத் தழுவிக்கொண்டானும்
என்னுடன்கூடடில்லியில்நீயு மிருந்துபோகவேண்டும்
விருந்துபொசித்துஎனும்கொடுப்பதை வேண்டிபோகுமையா
ஆனால்நல்லதாகட்டுமென்றா னந்தப்பக்கிரியும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு

குதிரைகொட்டடிகொண்டுபோய்வையும் ராசலிங்கபாபு
கொள்ளுபுல்லுதண்ணீர்கூசாமல்வையும் ராசலிங்கபாபு
அந்தப்படிக்குத்தாரங்கொடுத்தான் டில்லிபதுரைதானும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ராஜலிங்கபாபு
அண்ணாவாடாதம்பிவாடா அர்க்காருசின்னையா
சல்திசல்திதயார்செய்யடா அர்க்காருசின்னையா
ஆனால்நல்லதாகட்டுமென்றா னர்க்காருசின்னையன்
கோடிப்பாகரைக்கூப்பிட்டழைத்தான் அர்க்காருசின்னையன்
குதிரையைக்கொண்டுகொட்டடிசேர்த்தான் அர்க்காருசின்னையன்
கோடிப்பாகரைக்கொலுவாகவைத்தான் அர்க்காருசின்னையன்
கொள்ளுபுல்லுதண்ணீர்கூசாமல்வைத்தா னர்க்காருசின்னையன்
சுற்றிலுந்துருப்புசிப்பாய்வைத்தான் அர்க்காருசின்னையன்
பந்தோபஸ்தாயிருக்குதுபாரு பாராசாரிகுதிரை
டில்லிபதுரையும்பக்கிரியவனை சேரக்கொண்டுவந்தான்
விருந்துசெய்துசந்தோஷமாக மெச்சியென்னசெய்தான்
ஊறுபதிகள்நாங்கெல்லா முறுதியாய்த்தான்கொடுத்தான்
வேண்டியமட்டுந்திரவியங்கொடுத்து வேண்டிக்கொண்டானும்
தங்கமயமாய்சாலுவையொன்று தலைக்குக்கொடுத்தானும்
அந்தவெகுமதிபெற்றுக்கொண்டா னந்தபக்கிரியும்
அந்தநாள்சென்றுமறுநாளுதய மாச்சுதையாவே
தங்கத்தகத்திலிருந்து அரசு தனியாய்செய்கிறானும
பொன்னின்தகத்திலிருந்து அரசு பொறுமையாய்செய்கிறானும்
தகத்திலிருந்துயோசனைசெய்தான் டில்லிபதுரைதானும
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
இந்தப்புரவியேறுகிறராச னிந்தஉலகிலுண்டோ
இந்த-பாராசாரியேறுகிறராசன் பத்துதிக்கிலுண்டோ
இந்தப்-புரவியேறுகிறராசதுரையைநான் புகழ்ந்துகாணவேணும்
யோசனைசெய்துதெரியச்சொல்லும் என்னுடனேபாபு
அந்தப்பேச்சுகாதிலேகேட்டா ரந்தமந்திரிமாரும்
எல்லோருங்கூடியோசனைசெய்தா ரந்தசபையிலேதான்
முதல்மந்திரிராசலிங்கனு முன்னேயோடிவந்தான்
முழங்கால்மண்டிபோட்டுமவனு முன்னேசலாஞ்செய்தான்
ஐயாகேளுமையாகேளும டில்லிபதுரையேநீ
ஐம்பத்தாறுதேசராஜரை அறிந்துசொல்லுகிறேன்கேள்
எட்டுதிசையிலுள்ளராச ரிதற்குதவமாட்டார்

கோடிராஜரிருக்கிறாரையா குதிரையேறமாட்டார்
தெரிந்தமட்டுஞ்சொல்லுகிறேன் டில்லிபதுரையேநீர்
தெற்கேவெகுதூரமிருக்குதுபாரு செஞ்சிகோட்டை துருகம்
செஞ்சிதுருகத்திலரசுப்பண்ணினான் சூரசிங்குராசன்
சூரசிங்குகுமாரனையா தேரணிமகாராஜன்
தேரணிராசன்தம்பியையா தரணிசிங்குராசன்
அண்ணனுந்தம்பியுமாளுறாரையா அந்தக்கோட்டையைத்தான்
சேதமில்லாமலாளுகிறாரையா செஞ்சிக்கோட்டையைத்தான்
அவருக்குமிஞ்சியொருவருமில்லை அந்தக்குதிரையேற
பத்துத்திக்கிலுமொருவருமில்லை பாராசாரியேற
செஞ்சிராசரையழைத்திரானால் தேசியேறிடுவார்
புருஷசிங்கத்தையழைத்திரானால் புரவியேறிடுவார்




டில்லிபாட்சா ஓலையெழுதிதேரணிமகாராசனையழைத்தது.

அந்தப்பேச்சுக்காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
நீயேவாடாநீயேவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்கு பெரியகணக்கப்பிள்ளைவாளும்
செஞ்சிக்கோட்டைக்குஓலையெழுதும் கணக்கப்பிள்ளைநீதான்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ரங்கப்பிள்ளைதானும்
சலாமையாசலாமையா தேரணிமகாராஜா
டில்லிபதுரையும்ஓலையெழுதுகிறான் தேரணிமகாராசா

அண்ணவாடாதம்பிவாடா அர்க்காருபாப்பையா
ஓலையைக்கொண்டுசெஞ்சிக்குப்போடா அர்க்காருபாப்பையா
செஞ்சிசேதிதெரிந்துவாடா அர்க்காருபாப்பையா
ஐந்நூறுக்காதவழியேயுண்டு அந்தசெஞ்சிக்குமிதற்கும்
ஐந்நூறுகுதிரைதபால்வையடா அர்க்காருபாப்பையா
இருபதுநாளையில்சேதிசொல்லடா எந்தனுக்காகிலும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
அன்றிருந்துவெளிப்பட்டானையா அர்க்காருபாப்பையன்
தபால்மார்க்கமாய்தனியேபோகிறான் அர்க்காருபாப்பையன்
பத்துநாளையில்புதுஞ்செஞ்சிசேர்ந்தான அர்க்காருபாப்பையன்
புதுசெஞ்சியில்அரசுபண்ணுகிறான் தேரணிமகாராஜன்
அரசுமுகத்தில்வந்துநின்றானே அர்க்காருபாப்பையன்
முழங்கால்மண்டிபோட்டுஅவனும் முன்னேசலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா தேரணிமகாராஜன
வந்ததூதரைவரிசையாய்ப்பார்த்தான் தேரணிமகாராசன்
எங்கேயிருந்துஇங்கேவந்தீர் எனக்குச்சொல்லுமையா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அர்க்காருபாப்பையன்
சலாமையாசலாமையா தேரணிமகாராசா
டில்லியிலிருந்துவந்தேனையா தேரணிமகாராசா
பாட்சாஉனக்குஓலையெழுதினான் பாருமையாவே
ஓலையைக்கொண்டுகையிலேகொடுத்தான் அர்க்காருபாப்பையன்
தம்பிவாடாதம்பிவாடா தரணிசிங்குராசா
டில்லியிலிருந்துசேதிவந்தது தரணிசிங்குராசா
ஓலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் தரணிசிங்குராசன்
டில்லிசேதியைத்தெரியச்சொன்னான் தரணிசிங்குராசன்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தேரணிமகாராசன்
கலகலவென்றுசிரித்தானையா தேரணிமகாராசன்
அண்ணவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
டில்லிபாட்சாவைக்காணப்போகிறேன் மந்திரிதுரைமாரே
ஆயிரங்குதிரைதபால்வையுமே மந்திரிதுரைமாரே
அரசுபத்திரம்பார்த்துக்கொள்ளும் மந்திரிதுரைமாரே
அன்றாடஞ்சேதி அடிக்கடியெழுதும் மந்திரிதுரைமாரே
என்னிடசேதிஎழுதியனுப்புகிறேன் எந்தன்மந்திரிமாரே
அரண்மனைபத்திரம்ஆஸ்தானம்பத்திரம் ஐயாமந்திரிமாரே

அந்தப்பேச்சுகாதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றார் அந்தமந்திரிமாரும



தேரணிமகாராஜன் மனைவியிடத்திற்குப்போய்
விடைபெற்றுக்கொள்ளுதல்-

அரசுகடந்துஅரண்மனைபோனார் அண்ணனுந்தம்பியுமாய்
இராணிவாசத்தில்நடந்தாரையா நல்லதுரைமார்கள்
தேரணிராசன்பெண்சாதியையா தெய்வராம்பாயி
பத்துமாதங்கெர்ப்பமையா பத்மராம்பாயி
பூரணகெர்ப்பமானாளையா புண்ணியராம்பாயி
புருஷனைக்கண்டுபூசைபண்ணினாள் புண்ணியராம்பாயி
பெண்சாதிமுகத்தைகண்ணாலேகண்டான் தேரணிமகாராஜன்
மனதுகலங்கிஎதிரிலேநின்றான் வந்தமகாராசன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணயராம்பாயி
டில்லியிலிருந்துசேதிவந்தது தெய்வராமபாயி
நான்-போய்விட்டுவாரேன்போய்விட்டுவாரேன் புண்ணியராம்பாயி
அநதப்பேச்சுகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
இன்றோநாளையோகெர்ப்பமென்று இருக்குதேஎன்துரையே
என்னைவிட்டுநீரெப்படிபோகிறீர் எனதுபிராணநாதா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அந்தமகாராசன்
பெண்சாதிமுகத்தைப்பெருமையாய்ப்பார்த்தான புண்ணியமகாராசன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி
சலுதியிலென்னைவரவேயெழுதினான் தகத்துமகாராசன்
சீக்கிரமென்னைவரவேயெழுதினான் டில்லிமகாராசன்
போகாதேபோனால்பிழைகள்வருமே புண்ணியராம்பாயி
மூன்றுமாதத்தில்வந்துசேருகிறேன் முத்துராம்பாயி
ஒன்றுக்குமஞ்சவேண்டாம்பெண்ணே உத்தமராம்பாயி

தோழியும்நீயும்சுகமாயிருங்கள் சொருசுராம்பாயி
பாங்கியும்நீயும்பதனமாயிருங்கள் பத்மராம்பாயி
நான்போனவுடனேஓலையெழுதுகிறேன் பொன்னுராம்பாயி
இவ்விடத்துசேதியெனக்குதெரியநீ எழுதுப்பெண்மயிலே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அந்தராமபாயி
போய்விட்டுவாரும்போய்விட்டுவாரும் புருஷசிங்கமேநீர்

## தேரணிமகாராசன் டில்லிபட்டணம்வந்து டில்லிபதுரையைக் கண்டது.

ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறந்தானடந்தார்
செஞ்சியைவிட்டுபுறப்பட்டானையா தேரணிமகாராசன்
அண்ணனுந்தம்பியுங்கூடநடந்தார் அந்ததேசமவிட்டு
தபால்மார்க்கமாய்வாறுரையா தம்பியும்அண்ணனுமாய்
அதற்குமுன்னமேஎழுதிவிட்டார்கள் அந்தந்ததேசத்திற்கு
தேசராசர்கள்வரவேயெழுதினான் டில்லிபதுரைதானும
ஐம்பத்தாறுதேசராசர்கள் அடங்கலும்வந்தார்கள்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழவேவந்தார்கள்
டில்லிபட்டணமுழுதிலும்ராசர் சூழவிருந்தார்கள்
கொலுவுநிறைந்துயிருக்கிறாரையா கோடிதுரைமார்கள்
டில்லியைத்தேடிவாறுரையா தேசதுரைமார்கள்
வரிசையாகவேடில்லிபட்டணம் வந்துபுகுந்தார்கள்
டில்லிதகத்தின்முன்னேவந்தார் தேரணிமகாராசன்
முழங்கால்மண்டிபோட்டுஅவரும் முன்னேசலாஞ்செய்தார்
பதில்சாலாமுங்கொடுத்தானையா டில்லிபதுரைதானும
வந்தராசனைக்கண்ணாலேகண்டு வாரும்வாருமென்றான்
சிம்மாதனத்திலிருமென்றானே டில்லிமகாராசன்
சிம்மாதனத்திலுட்கார்ந்தாரையா தேரணிமகாராசன்
அந்தநாழிகைக்குயோசித்தானும் டில்லிபதுரைதானும்
அண்ணமாரேதம்பிமாரே ராசதுரைமாரே
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் ராசதுரைமாரே
உலகத்திலில்லாகுதிரையென்னண்டை திசைதப்பிவந்தது
ஐம்பத்தாறுதேசராசர்கள் அடங்கலும்வந்தீர்கள்
குதிரைசவாரிசெய்யவேண்டும் கோடிதுரைமாரே
சவாரிசெய்துயெதிரிலேவந்தால் தழுவிக்கொள்ளுவேனான்
ஏழுகளஞ்சியதிரவியமுமக்கு எடுத்துக்கொடுப்பேனான்
புரவியுமக்குஎனும்கொடுக்கிறேன் புண்ணியதுரைமாரே
ஏறினராசன்வுரையவர்க்கு எனுங்கொடுப்பேனான்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருந்தானெழுந்தார்
தேரணிராசனேறுகிறேனென்று திடுக்கிட்டுதானெழுந்தார்
ஏறுவோமென்றுதயிரியமாக எல்லாருந்தானெழுந்தார்

சந்தோஷமாகவெழுந்தராசரை தைரியமாய்ப்பார்த்தான்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இன்னொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் எந்தன்துரைமாரே
புரவியைக்கண்டுபயப்பட்டீரானால் பிடித்துகொள்ளுவேனன்
தேசியைக்கண்டுபயப்பட்டீரானால் சிறையிற்போடுவேனன்
ஏழுவருஷம்பந்தேகானாவில் இருந்துபோகவேணும்
இநதப்படிசம்மதியிருந்தால் எல்லோரும்வாருமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவரும்சம்மதித்தார்
சந்தோஷமாகவெளியேவந்தார் சகலதேசத்தாரும்
சிம்மாசனம்விட்டுக்கீழேகுதித்தான் டில்லிமகாராசன்
முதல்மந்திரிராசலிங்கனும் முன்னேநடந்தானும்
மற்றமந்திரிதந்திரிகளும் கூடநடந்தாரும
குதிரைகொட்டடிவந்துநின்றார்கள் கோடிதுரைமார்கள்
குதிரையைச்சுற்றிப்பார்த்தாரையா கோடிதுரைமார்கள்
வந்தராசரைக்கண்ணாலேகண்டது வர்னமேகக்குதிரை
பார்த்துராசரைக்கனைத்ததுபாரு பாராசாரிகுதிரை
கடகடகடகடகடகடவென்று கனைத்துகுதிக்குதுபார்
குதிரைகனைத்தசத்தத்தினாலே கொல்லென்றுவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அலறிவிழுந்தார்கள்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போல குப்புறவிழுந்தார்கள்
முன்னேயிருந்தராசதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தார்கள்
பின்னேயிருந்தராசதுரைகள் புரண்டுவிழுந்தார்கள்
தேரணிராசன்கண்ணாலேகண்டு திகைத்திருந்தானும்
தாணிசிங்குமேகுதிரையைக்கண்டு தலையைக்குனிந்தானும்
குதிரையைப்பார்த்துப்பெருமூச்செறிந்தார் கோடிதுரைமார்கள்
தலையைக்குனிந்துயெதிரிலேநின்றார் சகலதேசத்தாரும
எதிரிலேநின்றராஜதுரைகளை எறிட்டுப்பார்த்தானும்
கலகலவென்றுநகைத்தானையா டில்லிபதுரைதானும்
ஐயாகேளுமையா கேளும் ராசதுரைமாரே
குதிரையேறுவோமென்றுசொல்லி குதித்துஓடிவந்திர்
குதிரையைக்கண்டுவிழுந்தசேதி கூவிச்சொல்லுமையா
அநதவார்த்தையைக்காதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஐயாகேளுமையாகேளும் தகத்துராசாவே
ஊரிலிருக்குங்குதிரையென்று ஓடிவந்தோமையா
தேசத்திலிருக்குமபுரவியென்று தேடியோடிவந்தோம்
தெய்வலோகத்துபாராசாரிமேல் தேவர்களேறவேணும்
இந்தலோகத்துராசனேறினால் இறந்துபோய்விடுவார்
தப்பித்தவறியேறினானால் சதைந்துபோய்விடுவார்
குதிரையைப்பார்த்தால்குடல்நடுங்குது கோசலதேசராசா
தேசியைப்பார்த்தால்திக்குமுக்காடுது டில்லிமகாராஜா
பாராசாரியைப்பார்த்தவுடனே பலனுமொடுங்குது பார்

என்னஆக்கினைசெய்தாலும்நாங்கள் ஏறமாட்டோமையா
உயிருடனுங்கள்தப்பிப்பிழைக்க வுத்தாரந்தாருமையா
கோவென்றசத்தமிட்டாரையா கோடிதேசத்தாரும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லிமகாராசன்

## இராஜாக்கள் குதிரையேறாததினால் சிறையிலடைத்தது.

நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் ராசகோடிதுரைமாரே
ஐந்துவருஷம்என்னண்டைநீங்கள் அடிமைசெய்யவேணும்
ஏழுவருஷமென்னண்டைநீங்கள் இருந்துபோகவேணும்
அந்தப்பேச்சையழித்தீர்களானால் அரசுக்கீனமையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருஞ்சம்மதித்தார்
அன்பத்தாறுதேசராசரும் அனைவருமென்னசெய்தார்
டில்லியில்நடந்தசேதியெல்லாம் தெரியவெழுதினார்கள்
அந்தந்ததேசம்ஓலைவந்ததை அறிந்துமேகொண்டார்கள்.
ஓலையைப்பார்த்துவிசனமடைந்தார் உத்தமஸ்திரீகளெல்லாம்
பார்த்துமனதுகலங்கியழுதார் பட்டபுஸ்திரீகளெல்லாம்
அந்தப்படியேவிசனமடைந்தார் அந்தந்ததேசத்திலே



## தேசிங்குராஜன்பிறந்தது

செஞ்சியில்நடந்தசேதியெல்லாம் தெரியச்சொல்கிறேன்கேள்
தேரணிராசன்போனஏழாநாள் செல்வனுந்தான்பிறந்தான்
பட்டணத்தில்பிள்ளைபிறந்தசேதியை பலருமறிந்தார்கள்
பிள்ளைபிறக்கசெஞ்சிஜனங்கள் புகழ்ச்சியடைந்தார்கள்
மைந்தன்பிறக்கமந்திரிமாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்
குழந்தைபிறந்தநாளுலக்கணம் குறிப்பாயறிந்தார்கள்
குறிப்பையறிந்துசந்தோஷமானார் கொலுவுமந்திரிமாரும்

சந்தோஷமாகதானங்கொடுத்தார் சகலதேசத்தார்க்கும்
வண்டியில்சர்க்கரைவைத்துவழங்கினார் வந்ததேசத்தார்க்கு
ஊதுகள்பதிகள்பிராமணாளுக்கு உறுதியாய்தானங்கொடுத்தார்
நல்லனாள்கொண்டுதொட்டிலுமிட்டார் ராசனுக்கானாலும்
தொட்டிலுமிட்டுப்பேருங்கொடுத்தார் தெய்வலோகமறிய
தேசிங்குபாலனென்றுசொல்லி திருஷ்டிகழித்தாரும்
தேசிங்குபிறந்தஇருபதுநாளில் சேதிவந்ததுபார்
சேதியைக்கண்டுதிகைத்தழுகின்றாள் தெய்வராம்பாயி
மந்திரிமாருஞ்செஞ்சிசெனமும் மனதுகலங்கினார்கள்
அரண்டுபுரண்டு அலறியழுதாள் அந்தராம்பாயி
குழந்தைமுகத்தைநீர்காணாமலிப்போ கொடியதேசம்போனீர்
மைந்தனழகைக்கண்டுநீரு மகிழ்ச்சியடையாமல்
டில்லியில்சேர்ந்துசிறையிலகப்பட்டாய் தேசிகனேசுவாமி
இரங்கர்கிருபையிப்படியிருந்தால் நானென்னசெய்வேனையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அம்மனுமென்னசெய்தாள்
மைந்தன்பிறந்தசேதியெல்லாம் வரிசையாய்த்தானெழுதி
தேசிங்குபிறந்தசேதியெல்லாம் தெரியவேதானெழுதி
ஓலையெழுதியனுப்பினாளையா உத்தமியம்மாளும்
தோரணிராசனைத்தேடியுமங்கே சேதியும்வந்ததுபார்
சேதியைக்கண்டுதிகைத்துநின்றானே தோரணிமகாராசன்
ஓலையைக்கண்டுவொடுங்கிநின்றானோ தோரணிமகாராசன்
இரங்கரைநோக்கிவிசனமடைந்தான் நல்லமகாராசன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அங்கேதானிருந்தார்
செஞ்சியில்பிறந்ததேசிங்குபாலன் சேதியைச்சொல்லுகிறேன்கேள்
பாலன்பிறந்தமூன்றுமாதம் பதைத்துவிழுந்தானும்
குழந்தைபிறந்தஏழாமாதம் குலுங்கவிழுந்தானும்
தொட்டிலைவிட்டுக்கீழேயிறங்கி துள்ளிவிழுவானும்
தங்கத்தொட்டிலைஎட்டியுதைத்து தரையில்விழுவானும்
பத்தாமாதம்தவழ்ந்துநடந்தானபலநமதியவேதான்
அன்னம்புசிக்கஆடையுடுக்க அப்பவேதானறிந்தான்
தாயின்மடியில்வந்துவிளையாடி தகப்பனெங்கேயென்பான்
பள்ளிக்குப்போகப்படிக்கவெடுக்கப் பாலனுமறிந்தானும்
கொட்டடிசென்றுகுதித்துவிளையாடி தகப்பனெங்கேயென்பான்
கூடவிருக்குந்துரைகளோடே குதிரையேறிப்போவான்,
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்க அடிப்பானும்
குதிரையேறிசவாரிசெய்து கோட்டையில்வருவானும்
இரங்கரைக்கண்டுபூசைகள்செய்து நாணயமாய்வருவான்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயாரெடுத்துமடியில்வைத்து சாந்திகழிப்பாளாம்.
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேஊட்டுவாளாம்
கொஞ்சிகொஞ்சிசாப்பிடுவானையா குழந்தைதேசிங்கு

சாப்பிட்டிளைப்பாறிவெளியேவந்து சாடைகள்செய்வானும்
கூடப்படித்தமோவுத்துகாரனை கூப்பிட்டழைப்பானும்
இருவருங்கூடி குதிரையேறியே எங்குந்திரிவார்கள்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கஅடிப்பார்கள்
புலிகள்கரடிசிங்கத்தைக்கண்டால் புகுந்துவெட்டுவார்கள்
வேட்டையாடிவெளியேவந்து வெற்றிகொண்டோமென்பார்
சங்கராபரணிகரையிலேவந்து தாண்டிகுதிப்பாராம்
குதிரைவிட்டுக்கீழேகுதித்து குஸ்திகள்செயவாராம்
ஒருவர்க்கொருவர்உயர்ந்தமேடையில் உதும்பியேதான்குதிப்பார்
மலைகளைத்தூக்கியெறிகிறேனென்று வந்துமோதுவார்கள்
சையத்சாகிபைசலாஞ்செய்து தாண்டிவிழுவார்கள்
மண்டிபோட்டுமலைகளைத்தூக்கி வாரியெடுப்பாராம்
மலைகளைபோங்கிகுத்தினாரானால் மருந்துபுகைகவ்வும்
செடிகளையோங்கிகுத்தினாரானால் சிதைந்துமுறிந்துபோகும்
பத்துபனைமரம்உயரங்கிளம்பி பல்டியடிப்பாராம்
மூச்சுப்பிடித்துகிளம்பிவிழுவார் மூன்றரைநாழிவழி
ஆகாசமார்க்கம்அந்தர்பல்டி அடித்துவிழுவாராம்
குன்றுகளேறிகுதித்தாரானால் குழிபள்ளமாகும்
பனைமரங்களைத்தூக்கியெடுத்துப் பந்துசெண்டாடுவார்
தேறித்தெளிந்தான்வித்தைகளாடி தேசிங்குமகிபாலன்
கப்படியேஐயந்துவருஷம் ஆடித்திரிந்தானும்
பலண்டுகோட்டையில்வந்தான் அந்தபாலகனும்
ண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
ரெடுத்துமடியில்வைத்து சாந்திகழித்தாளே
னிசர்க்கரைபாலமுதுடனே முன்னேஊட்டினளாம்
பிட்டிளைப்பாறித்தாயார்முகத்தைத் தனியாய்ப்பார்த்தானும்
ட்சுமிமுகங்கள்கலங்கியிருப்பதை நன்றாய்ப்பார்த்தானும்
மாகேளும்அம்மாகேளும என்னைப்பெற்றதாயே
ளிடமனதில்என்னவிசனம் ஒளியாமல்சொல்லுமென்றான்
ஊரிலிருக்கும்பிள்ளைகளுக்கு உதவிமெத்தவுண்டு
தாய்தகப்பனுமிருக்கிறாரம்மா தாயெபெற்றவளே
என்தாயிருக்கவென்னிட தகப்பன் எங்கேயென்றுகேட்டான்
சத்தியெனக்குத்தெரியச்சொல்லும் தாயேபெற்றவளே
அந்தப்பேச்சுக்காதிலேகேட்டாள் அவனைப்பெற்றதாயும்
வாரியெடுத்துமடியில்வைத்து மகனைமுத்தமிட்டாள்
உச்சிமுகர்ந்துதிருஷ்டிகழித்தாள் உத்தமிபெற்றவளும்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
ஐம்பத்தாறுதேசராசர்க்கும் அதிபதிதுரைதானும்
டில்லியிலிருக்கும்பெரியபாட்சா சேதியனுப்பினார்
சேதியறிந்துஉன்னிட தகப்பன் தேரணிமகாராசன்

தம்பிதாணிசிங்குராசனைத் தனியேயழைத்தாராம்
இருவருங்கூடிப்போனாரப்பா எந்தன்கண்மணியே
போனவிடத்தில்புரவியொன்று புதிதாய்வந்துதாம்
தெய்வலோகத்துப்புரவியொன்று திசைதப்பிவந்துதாம்
ஐம்பத்தாறுதேசராசரும் அடங்கலும்வந்தாராம்
தெய்வலோகத்துப்புரவியேறவே சேதிகள்சொன்னாரும்
ஏறுவோமென்றுதைரியமாக எல்லோரும்வந்தாராம
கண்ணாலேகண்டுடில்லிபதுரையும் கடினமாய்சொன்னாராம்
ஏறாமற்போனாலேழுவருஷம் இடுவேன்சிறையிலென்றான்
புரவியைப்பார்த்துபயப்பட்டீரானால் போடுவேன்சிறையிலென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருஞ்சொன்னாராம்
அந்தப்படியேசத்தியபண்ணி அனைவரும்போனாராம்
குதிரையைச்சுற்றிப்பார்த்தவுடனே கொல்லென்றுவிழுந்தாராம்
பாராசாரியைப்பார்த்தவுடனே பதைத்துவிழுந்தாராம
முன்னேயிருந்தராசதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தாராம்
பின்னேயிருந்தராசதுரைகள் புரண்டுவிழுந்தாராம்
மூர்ச்சைதெளிந்துராசதுரைகள் முன்னேயோடிவந்தார்
இந்தக்குதிரையேறினோமானால் இறந்துபோய்விடுவோம்
ஏழுவருஷஞ்சிறையிலிருந்து எங்களூறுபோறோம்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டு டில்லிபதுரைதானும்
ஆனால்நல்லதாகட்டுமென்று அருஞ்சிறைவைத்தானாம்
ஐந்துவருஷஞ்சென்றதுபாரு அருமையானமகனே
இன்னம்-இரண்டுவருஷம்சென்றதேயானால் நிமிஷமிருக்கார்கள்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அலறஞ்சிங்கம்போல
பல்லைப்படபடவென்றுகடித்துப் பதறியெழுந்தானும்
கண்கள்நெருப்புப்பொறிகள்பறக்க கனைத்துமிகவெழுந்தான்
கோபத்தினாலேநெருப்புப்பொறிகள் குப்பென்றெழுந்ததுபார்
தாயாரைச்சுற்றிவலமாகவந்து சரணங்கள்செய்தானும்
கும்பிட்டெழுந்தெதிரிலேநின்று கூசாமல்சொல்லலுற்றான்
எனக்குநல்லவரந்தரவேணும் என்னைப்பெற்றதாயே
எட்டுகாலையிலிங்கேவாறேன் என்னைப்பெற்றதாயே
சனுதியிலென்னையனுப்பிடவேண்டுந் தாயேபெற்றவளே
அனுப்புமென்றசேதிகேட்டு அலறிவிழுந்தாளாம
இனியென்னசெய்வேனென்கண்மணியேயென் றேங்கிவிழுந்தாளாய்
கைதனைநெரித்தவயிற்றைப்பிசைந்து கண்ணீர்சொரிந்தாளாம்
போகிறேனென்றசேதிகேட்டுப் பூமியில்விழுந்தாளாம்
மகனிட்டகோபந்தானேயறிந்து மண்மேல்விழுந்தாளாம்
பூமியில்விழுந்துமூர்ச்சையானாள் புண்ணியராம்பாயி
இங்கேயிருந்தாலனுப்பமாட்டாள் என்னைப்பெற்றதாயும்
பூமியில்விழுந்ததாயைப்பார்த்து பின்னிட்டுநடந்தானும்
சங்காபரணியில்ஸ்நானம்பண்ணியே சனுதியோடிவந்தான்

இரங்கர்கோவில்புகுந்தானையா ராசாதேசிங்கு
இரங்கரைச்சுற்றிவலமாகவந்தான் ராசாதேசிங்கு
கும்பிட்டெழுந்துளதிரிகின்றான் குழைந்தைதேசிங்கு
சவாரிசெய்யபடில்லிக்குப்போறேன் சுவாமிரங்கநாதா
கூடவிருந்துசவாரிசெய்து கொண்டுதிருப்புமையா
உன்குழந்தைநானூருக்குப்போறே னுடனேவாருமையா
சல்திசல்திவாருமையா சுவாமிரங்கநாதா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டா ரிரங்கநாதசுவாமி
ஆனால்நல்லதாகட்டும்வாரே னருமைக்கண்மணியே
போய்விட்டுவாடாபோய்விட்டுவாடா புத்தியுள்ளமகனே

## தேசிங்குராசனும் மோவுத்துக்காரனும் டில்லிபட்டணம் வந்தது.

அந்தப்பேச்சுக்காதிலேகேட்டு அடியில்பணிந்தானும்
கும்பிட்டெழுந்துவெளியிலேவந்தான் குழந்தைதேசிங்கு
மோவுத்துக்காரனேகூப்பிட்டழைக்க முன்னேவோடிவந்தான்
அண்ணவாடாதம்பிவாடா மோவுத்துக்காரா நீ
தெய்வலோகத்துப்புரவியொன்று டில்லியிருக்குதாம்
பாராசாரிகுதிரையொன்று பக்கத்திலிருக்குதாம்
எனதுதகப்பன்தோரணிராசன் அங்கேயிருக்கிறாராம்
குதிரையேறிச்சவாரிசெய்து கொண்டுவரவேணும்
சல்திசல்திபுறப்படுமென்றான் மோவுத்துக்காரா நீ
ஆனால்நல்லதாகட்டுமென்று அதட்டியெழுந்தானும்
கொட்டடிசென்றுகுதிரையிரண்டு கொண்டுமேவந்தானும்
வழிச்செலவுக்குவர்னலட்சம்பொன் மடியிலேவைத்தானும்
சல்தியாகவேகொண்டுநிறுத்தினான் தபால்குதிரைகளை
குதிரையைக்கண்டுசந்தோஷமானான் குழந்தைதேசிங்கு
கோவிந்தாவென்றுகுதிரையேறினா ரிருவருமப்போது
அரிகரியென்றதட்டியேறினா ரிருவருமப்போது
ஏறினவுடனேவெள்ளிக்குறடா எடுத்துஅடித்தார்கள்
அடித்தவுடனேயைந்துநாள்பயண மதிரநடந்ததுபார்
பத்துநாளையில்வந்துசேர்ந்தார் பாலரிருவருந்தான்
டில்லியில்சேர்ந்துதெருவில்நடந்தார் தேசிங்குபாலகனும்
கோட்டைகொத்தளம்தாண்டியேவாரான் குழந்தைதேசிங்கு
சிங்காரமாலிலேவந்துசேர்ந்தான் சிங்ககுட்டிபோலே
அந்தவேளையிலென்னசெயகிறான் டில்லிபதுரைதானும்
தங்கத்தகத்திலிருந்தேயராசு தனியாய்செய்கிறானும்
பொன்னின்தகத்திலிருந்தேயரசு பொறுமையாய்ச்செய்கிறானும்
சுற்றிலும்ராசதுரைகள்கோடி சூழவிருந்தார்கள்
ஐம்பத்தாறுதேசராசரு மருகிலிருந்தார்கள்
சிறையிலிருக்கும்ராசதுரைகள் சேரவிருந்தார்கள்

தேரணிரசன் தரணிசிங்குமே சேர்ந்திருந்தார்கள்
கொலுநிறைந்தராசதுரைகள் கொல்லென்றிருந்தார்கள்
அந்தச்சமயம்வந்துபுகுந்தான் அலருஞ்சிங்கமபோலே
பாலசூரியனுதித்தாற்போலப் பளிச்சென்றுசாய்தானும்
கோடிசூரியனுதித்தாற்போலக் குப்பென்றுசாய்ந்தானும்
வானத்திலிருக்குஞ்சூரியனைப்போல் வந்துநுழைந்தானும்
கோடிமன்மதனறையிலிருந்து கொலுவுக்குவந்தாற்போல்
நிறைந்தகொலுவில்வந்துநின்றனே ராசாதேசிங்கு
கொலுவிலிருக்குமராசதுரைகள் குப்பென்றெழுந்தாராம்
சபையிலிருக்குமராசதுரைகள் சட்டென்றெழுந்தாராம்
தகத்திலிருக்குமடில்லிபதுரையும் தானுமெழுந்தாராம
எழுந்தராசனைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு



தேசிங்குராசனும் மோவுத்துக்காரனும்
டில்லிபதுரையைக் கண்டது.

சலாமையாசலாமையா டில்லிபதுரையேகேள்
உன்தேசத்திலுயர்ந்தபுரவி யுன்னண்டையிருக்குதாம்
பாராசாரியைச்சவாரிசெய்யப் பாலன்வந்தேனென்றான்
ஏறிச்சவாரிசெய்வதற்காக இங்கேவந்தேனென்றான்
புரவியேறிச்சவாரிசெய்துநான் போகவேணுமென்றான்
வானமிடிந்துவிழுந்தாற்போலே மைந்தன்சொல்லிநின்றான்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அவனுஞ்சொல்லிநின்றான்
சொன்னசொல்லைக்காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சுற்றிலுமிருந்தராசதுரைகளைச் சுற்றியேபார்த்தானும்
சித்திரப்பதுமைபோலேயிருக்கிறார் தேசராசரெல்லாம்
ஒருவர்முகத்தையொருவர்பார்த்தே யொதுங்கியிருந்தார்கள்
டில்லிபதுரையுங்கண்ணாலேகண்டு சேதிசொல்லலுற்றான்
எதிரிலிருக்குந்தேசிங்குபாலனை யேறிட்டுபார்த்தானும்
மன்மதன்போலேயழகுகுழந்தையை மண்மேற்பார்த்தானும்

## டில்லிபதுரை தேசிங்குராஜனுடைய வளப்பத்தைக்கேட்கல்.

ஐயாகேளுமையாகேளு மறியாதபாலகனே
எந்ததேசத்திலிருந்துநீயு மிங்கேதேடிவந்தாய்
உந்தனூரும்பேருநாடு உன்தகப்பன்பேரும
தவமாய்ப்பெற்றதாயின்பேரும் சல்திசொல்லுமென்றார்
அந்தவார்த்தைகாதிலேகேட்டா னலறுஞ்சிங்கம்போலே
சொல்கிறேன்கேளும்சொல்லுகிறேன்கேளும டில்லிபதுரையேகேள்
தெற்கேவெகுதூரமிருக்குதுபாரு செஞ்சிகோட்டைநகர்
செஞ்சிக்கோட்டையாளுமராசன் தோரணிமகாராஜன்
தோரணிராசன்குமாரனென்றான் தேசிங்குமகிபாலன்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்
குதிரையேறவலிமையில்லாமல் கொலுவிலிருக்கிறாராம்
குதிரையேறிச்சவாரிசெய்துகொண்டுபோகவந்தேன
சல்திசல்திகுதிரைகொண்டா டில்லிபதுரையேநீ
கொல்லுஞ்சிங்கக்குட்டியைப்போலே சீறியேநின்றானும்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் டில்லிமகாராஜன்
தோரணிராசனைத்திரும்பியேபார்த்தான் டில்லிபதுரைதானும்
தோரணிராசன்காதிலேகேட்டுத் தேடியேவந்தானும
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேடியேடிவந்தார்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
சந்தோஷமாகத்தழுவியெடுத்து சாந்திகழித்தாரும்
சேர்த்துத்தழுவிமகனையெடுத்துத் திருஷ்டிகழித்தானும்
ஐம்பத்தாறுதேசராசர்க ளதிசயப்பட்டாரும்
டில்லிபதுரையுஞ்சந்தோஷமாகச்சேரவோடிவந்தார்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
மைந்தன்சொல்லைக்கேட்டுநாங்கள் மகிழ்ச்சியடையாமல்
உந்தன்மகிமைசொல்லக்கேட்டு வுள்ளமிகமகிழ்ந்தேன்
பெற்றதாயுமுன்னைப்பிரிந்துபின்னுயிர்வைப்பாளா
அரசனைக்கேட்டுசெஞ்சிக்குப்போவோ மருமைக்கண்மணியே
மனுவுகேட்டுவருகிறேனப்பா வாருங்குழந்தையென்றான்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டா னழகுபாலகனும
கலகலவென்றுசிரித்தெழுந்தான் கதும்புஞ்சிங்கம்போலே
ஐயாகேளுமையாகேளு மென்னைப்பெற்றராசாவே
குதிரையேறப்பயப்பட்டுநீங்கள் கொடியசிறையிருந்தீர்
பாராசாரியேறப்பயந்து பாரசிறையிருந்தீர்
ஏறிசவாரிசெய்துநானுமே யிட்டுப்போகிறேன்பார்.
குதிரையேறிச்சவாரிசெய்துநான் கொண்டுபோவேனென்றான்
சற்றுநேரத்தில்சவாரிசெய்து சிறையைமீட்டுப்போறேன்
போகாமற்போனானுந்தன்வயிற்றிற் பிறந்ததென்னத்திற்கு
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அலறிவிழுந்தாராம்



தேசிங்குராசன் குதிரையேறுதல்,

கனைத்துக்கதும்பிவெளியிலேவந்தான் காளைசிங்கம்போலே
குதிரையிருக்குங்கொட்டடிதேடிக் குதித்தோடிவந்தான்
ஓடிவநகிரராசனைக்கண்டு உதம்பியெழுந்ததுபார்
தேடிவந்தராசனைக்கண்டு திகைத்துகனைத்ததுபார்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே அலறிகனைத்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போலக்குலுங்கக்கனைத்ததுபார்
நாற்றிசையிலுங்கலங்கிபங்கே நடுக்கங்கொண்டதுபார்
ஐம்பத்தாறுதேசராசர்க ளதிர்ந்துவிழுந்தார்கள்
குழந்தைகுழந்தையென்றுசொல்லி கூவியழுதார்கள்
டில்லிபதுரையுந்தேரணிராசனுந் திகைத்துவிழுந்தாராம்
விழுந்தவுடனேகுழந்தையென்று ஓடிபேவாரார்கள்
அந்தவேளையிலென்னசெய்கிறான் ராசாதேசிங்கு
கனைத்தகுதிரையைக்கண்ணாலேகண்டு கடுகவோடிவந்தான்
குதிரையைத்தட்டிசலாமவாங்கினான் கொல்லுஞ்சிங்கம்போலே
அண்ணாவாடாதம்பிவாடா மோவுத்துக்காராநீ
கால்கயிற்றையக்கழுத்துகயிற்றைக் கடுக அவிழுமென்றான்
அந்தசொல்லைக்காதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
சொன்னவுடனேசல்தியாய்ப்பாய்ந்து சுறுக்காயறுத்தானும்
தங்கத்தாலேசீனிபோட்டுத் தடவிக்கொடுத்தானும்
அந்தக்குதிரையைக்கண்ணாலேகண்டு அகமுமகிழ்ந்தானும்
அரியரிபரந்தாமாவென்று அலறியெழுந்தானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணாவென்று கும்பிட்டெழுந்தானும்
பாராசாரியைச்சலாமவாங்கிப் பாய்ந்தேயேறினானும்
புலிக்குட்டிபோல்பாய்ந்துமவனும் புரவிஏறினானும்
ஏறினவுடனேபாராசாரியு மென்னசெய்யுதுபார்

டதடதடதடவென்று தவிக்குதுபார்குதிரை
கிடகிடகிடகிடவென்று கிளம்பிக்குதிக்குதுபார்
னையிழுத்துக்கையிலேபிடித்தான் ராசாதேசிங்
ஐ கேளுமையாகேளு மென்னைப்பெற்றவரே
புர யேறிசாரிபோறேன் பெற்றவனேயையா
தப்பித்தவறிவந்தேனானால் தழுவிக்கொள்ளுமையா
மாண்டுமடிந்துபோனேனானால் மனதுகலங்காதே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு இருக்குதுதலைமேலே
என்றைக்கிருந்தாலுமண்ணுக்கிறையே யிந்தசென்மமையா
ஒன்றுக்கும்நீரஞ்சவேண்டாம் உறுதிகொள்ளுமையா
சொன்னசொல்லைக்காதிலேகேட்டார் தேசராசாக்கள்
ஐம்பத்தாறுதேசஜனமு மடங்கலும்கேட்டார்கள்
மகனேமகனேயென்றுசொல்லி வந்துவிழுந்தார்கள்
டில்லிபதுரைதரணிசிங்குமே தேங்கிவிழுந்தாராம்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேங்கிவிழுந்தாராம்
மகனேயென்னசெய்வோமென்று வயிற்றைப்பிசைந்தார்கள்
போகாதேபோகாதேமகனே புரவிகொண்டுபோமே
இந்தலோகத்துப்புரவியல்லவே யெந்தன்கண்மணியே
தெய்வலோகத்துப்புரவியாச்சே தேசிங்கென்மகனே
உயிருடனுன்னைவிட்டுப்பிரிந்து வுலகத்திலிருப்போமோ
பிறந்தபோதேயிறந்துபோனால் பெரியதுக்கமில்லை
ஐந்துவருஷம்வளர்த்தமாதா அலைந்துமேதான்சாவாள்
அதற்குமுன்னமேயெந்தனுயிரு மனல்போலுருகுதப்பா
குதிரையைப்பார்த்தால்பயங்காணுதே குழந்தையென்மகனே
என்னுயிர் பூமியில்தரித்திருக்கா யிரங்கிவாசுதனே
அந்தமொழியைக்காதிலேகேட்டா னதிரூபதேசிங்கு
கோவிந்தாகோவிந்தாவென்று குதிரையைத்தட்டிவிட்டான்
அரிஅரிஸ்ரீமுகுந்தாவென்று அஸ்வத்தைத்தட்டிவிட்டார்
தட்டினதட்டிற்குதிரைகிளம்பித் தரையில்நில்லாமல்
ஆகாசமார்க்கம்வந்துபாயுது அந்தமேகக்குதிரை
ஆகாசமார்க்கத்தையண்ணாந்துபார்த்தார் ராசர்களெல்லாரும்
சூரியன்போலத்துலங்குதுபாரும் சொர்ணமேகக்குதிரை
கண்டதூரம்பார்த்துராசாகள் கலங்கிநின்றார்கள்
பாய்கிறகுதிரையைக்கண்ணாற்கண்டு பரதவித்திட்டார்கள்
மேகமண்டலந்தாவிவருவதைப் பார்த்தான்தேசிங்கு
லகானையிழுத்துச்சிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
சிமிட்டாகொடுத்தவேகத்தினாலே சீறிப்பாய்கிறது
கோபம்வந்துமூண்டுகொண்டது குதிரைக்கப்போது

காடுமலைகள்செடிகளெல்லாங் கலங்கிநடுங்கிடவே
மலைகளேரிகள்தாண்டிகுதிரை விரைவாம்போவதினால்
மலைகளிடிந்துதவிடுபொடியாய் மண்மேல்விழுந்திடவே
குன்றுகள்கற்கள்தாண்டிகுதிரை குதித்தேறிப்போகிறதாம்
குன்றுகளெல்லாம்பொடிப்பொடியாகக் குலுங்கக்கவிழ்ந்ததுபார்
குதிரைபோகும்வேகத்தினாலே குன்றுமலைகளெல்லாம்
குப்பென்றுஐங்காதவழியில்சென்று கொண்டுசாடுகிறதாம்
ஆறுகுளங்கள்மடுக்களெல்லா மதிரநடுங்குதுபார்
ஐங்காதவழிக்குஅப்புறமிருக்குது அழகுள்ளகுதிரையும்
ஐங்காதவழிதாண்டிகுதிக்குது அந்தமேகக்குதிரை
குதிரைதாண்டினவேகத்தாலே குழந்தைதேசிங்கு
குலுங்கநகைத்துசிமிட்டாகொடுத்தான் குதிரைக்கானும்
நிமிஷநாழிகைக்குஐந்நூறுகாதம் நிலையாய்ப்பறக்குதுபார்
ஆகாசம்போகும்வேகத்தாலே அலைபுதலமெல்லாம்
மேகங்கிளம்பிவாயைத்திறந்து மின்னலைக்கக்குதுபார்
மின்னல்வெளிச்சந்தன்னிற்பாயுது வேகமானகுதிரை
தேவர்களெல்லாம்மனதுபயந்து திகைத்திருந்தார்கள்
இருந்தவிடத்தைவிட்டேயவர்க ளிறங்கியோடிவிட்டார்
உயர்ந்தமண்டபம்விட்டேயவர்க ளொதுங்கியோடினார்கள்
வடக்கேவெகுதூரம்மகமேருசாரலில் வந்துபாய்ந்ததுபார்
குதிரைபோகும்வேகத்தாற்பூமி குலுங்கநடுங்குதுபார்
பர்வதங்கள்படபடவென்று பதறிநடுங்குதுபார்
சாரலோரமுள்ளமலைகள் சதைந்துநடுங்குதுபார்
மகம்மேருசாரல்நாற்றிசைதன்னில் வந்துபாயுதுபார்
அங்கிருந்துமேகுதிரைத்திரும்பினா னந்தபாலகனும்
தெற்குமைநாகபர்வதத்தைத் தேடியோடுதுபார்
லங்கையைநாலுசுற்றுசுத்தா னடத்திக்கொண்டுவாரான்
நாற்றிசைகளும்சக்கரம்போலே நடுங்கக்கொண்டுவாரான்
பூமியிலுள்ளசெந்துக்களெல்லாம் பொறிகலங்குதுபார்
வானத்திலிருக்கும்மேகபந்திகள் மதிமயங்குதுபார்
மேற்கேவெகுதூரந்திரும்பி மேலண்டைகொண்டுவாரான்
ஐந்துநாளுமிராப்பகலாக அதிரவேகொண்டுவாரான்

குதிரை தேசிங்குராசனை மோசஞ்செய்தது

பாராசாரிமனமுங்கலங்கிப் பார்த்துதிமிர்ந்ததுபார்
என்னுயிர்வாங்கவந்தபாலக னெந்தேஜென்மிதநாளோ

இங்கேயிருந்தாலிரண்டு நாழிகையிலிறக்கவடிப்பானே
பூமியிலிருந்தால்சீவனிப்போ பிரிந்துபோய்விடுமே
உற்பாதபிண்டம்தேசிங்குபால னோட்டியேகொல்லுவானே
செவ்வென்றெழும்பித்தெய்வலோகம் தேடியேபோகுதுபார்
ஆகாய மார்க்கமட்டுங் கிளம்பிப்போகுதந்தகுதிரையும்
புரவிபோகும்வேகமறிந்தான் புலிக்குட்டிதேசிங்கு
தெய்வலோகம்தன்னிலடைக்கத் தேடிப்போகுதென்று
ஆகாசமார்க்கங்கொண்டடக்க அதிரப்போகுதென்று
லகானிழுத்துச்சிமிட்டா கொடுத்தான்ராசாதேசிங்கு
இடதுகாலுக்கிரண்டுசிமிட்டா இடுக்கிக்கொடுத்தானும்
சிமிட்டாகொடுத்தவேகத்தினாலே திகைத்துநின்றதுபார்
இடித்தஇடியில்மனதுகலங்கி யிருந்துமேயாடுதுபார்
ஆகாசமார்க்கந்தத்தளிக்குது அந்தமேசக்குதிரை
அந்தநாட்டையிந்தநாட்டை யசையாமலேபிடித்து
நாலுதிக்குந்திரும்பிப்பார்த்தான் ராசாதேசிங்கு
ஊ நபதிகள்நாடுகளெல்லாம் மொன்றுந்தெரியவில்லை
அன்னம்புசித்துஐந்துநாளாச்சுது அந்தபாலகனும்
ஆகாயம்பூமியொன்றாயிருப்பதை யறிந்தபாலகனும்
கனைகள்வந்துசூழ்ந்தவுடனே கண்டுமேயேதுசெய்தான்
கடிவாளக்கயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்துக் கவிழ்ந்துபடுத்தானும்
குதிரைக்கயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்துக் குப்புறப்படுத்தானும்

தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதரை நினைத்தல்.





அரி அரிபரந்தாமாவென்று அலறியழுதானும்
கோவிந்தா ஸ்ரீகிருஷ்ணாவென்று கூப்பிட்டழுதானும்
ஆபத்பாந்தவா அனாதரட்சகா ஆதிமூலப்பொருளே
அடியேனைவந்துரட்சியுமையா ரங்கநாதாவென்று
அலறியழுதுகவிழ்ந்துபடுத்தான் அந்தக்குதிரைமீதில்
கண்ணைமூடிக்கவிழ்ந்துபடுத்தான் ராஜாதேசிங்கு

### ஸ்ரீரங்கநாதர் தேசிங்குராசனிடத்தில் வந்தது

அழுதவுடனேஸ்ரீரங்கநாதர் அருகில்வந்துநின்று
கடிவாளத்தின்கயிற்றைப்பிடித்துக் கன்னத்திலறைந்தாரும்
குழந்தையைக்கொண்டு ஆகாசமார்க்கங்கொல்லநினைத்தாயே
இன்றையவரையிலாகாசமார்க்கம் எழும்பிப்போகவேண்டாம்
கூடயிருந்துதேசிங்குபாலனைக் கொலுவில்கொண்டுவாரும்
கொஞ்சநாளையில்மோட்சமுனக்குச் சனுதிதாரோமென்றார்
குழந்தையுடனேமோட்சமுனக்கு கூடதாரேமென்றார்
அந்தமொழியைக்காதிலேகேட்டு அடிபணிந்ததுபாரும்
சந்தோஷமாகஐயனைக்கண்டு சாஷ்டாங்கமாகுதுபார்
சேதிகள்சொல்லியாகாசமார்க்கஞ் சேரக்கொண்டுவந்தார்
டில்லிக்குநேரேகொண்டுநிறுத்தினார் தேசிங்குபாலகனை
குழந்தையைஎடுத்துக்குதிரைமீது கூசாமல்வைத்தாராம்
அஸ்தம்படவேகளைகள்தெளிந்து அதட்டியெழுந்தானும்
களைகள்தெளிந்துகண்ணைவிழித்துக் கர்த்தனைப்பார்த்தானும்
பார்த்தவுடனேயானந்தமாகப் பதறியழுதானும்
ஆபத்பாந்தவா அநாதரட்சகா ஆதிமூலமேசீ
அடியேனைவந்துரட்சித்தீரே ஐயாரங்கநாதா
இனிநடக்கும்புத்தியென்னமோ எனக்குச்சொல்லுமையா
அந்தவார்த்தைகாதிலேகேட்டா ரிரங்கநாதசுவாமி
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
டில்லிக்குநேரேயிருக்குதுபாரு தெய்வலோகப்புரவி
குதிரையிரங்கிச்சந்தோஷமாக கோட்டைக்குவாருமென்றார்
தேசிங்கிரங்கிவெகுமதிபெற்றுச் செஞ்சிக்குவந்துசேரும்
போய்வாரேன்போய்வாரேனிப்போ புத்தியுள்ளமகனே
ஆனால்நல்லதாகட்டுமென்று அடியில்பணிந்தானும்
பணிந்தவுடனேமாயமாய்ரங்கர் பரவியிருந்தாராம்

### தேசிங்குராசன் குதிரையைடில்லியிற் கொண்டுவந்து இறங்கியது .

போனவுடனேதேசிங்குபாலன புரவியையென்னசெய்தான்
மெள்ளசிமிட்டாகொடுத்துக்கொண்டு மெதுவாய்வாரானே
பக்கஞ்சிட்டாகொடுத்துத்துக்கொண்டு பாலன்வாரானே
கலகலகலகலகலகலவென்று சனைத்துவருகுதுபார்

கனைத்தசத்தந்தனைக்காதிலேகேட்டார் கன்னடதேசத்தாரும்
ஐம்பத்தாறுதேசராசரு மாகாயமேபார்த்தார்கள்
சூரியனைப்போற்றுலங்கிவருகுது சொர்னமேகக்குதிரை
சந்திரனைப்போலதகதகவென்று சாரிவருகுதுபார்
வருகிறபாலனைக்கண்ணாற்கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தேரணிராசனும்டில்லிபதுரையுந் தேடிபோடிவந்தார்
ஆனந்தக்கண்ணீர்புட்பமாரியா யலறியழுதார்கள்
சந்தோஷம்கூந்துமூண்டுகொண்டது சகலதேசத்தார்க்கும்
அந்தச்சமயத்தில்வந்துநிறுத்தினு னறியாதபாலகனும்
பாராசாரியைக்கொண்டுநிறுத்தினான் பாலசூரியன்போல்
நிறுத்தினவுடனேபுட்பமாரிகள் நிலைபாய்ப்பொழிந்தாராம்
தேவர்களெல்லாம்சந்தோஷமாக தேண்மாரிபொழிந்தார்கள்
தோரணிராசன்தரணிசிங்கு ம தேடியோடிவந்தார்
வீந்தமகனைக்கண்ணாலேகண்டு வாரியெடுத்தானும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டான்
தேசிங்குபாலனைமடிமேல்வைத்து திஷ்டிகழித்தாளும்
சந்தோஷமாகமகனையெடுத்துச் சாந்திகழித்தாளும்
ஐம்பத்தாறுதேசராசரு மாலாத்தியெடுத்தாளும
மங்களம்பாடிவ ழ்த்தியெடுத்து மைந்தனைமுத்தமிட்டான்
டில்லிபதுரையும்தேசராசரும் சேரஓடிவந்தார்
முழங்கால்மண்டிபோட்டேயவர்கள் முன்னேசலாஞ்செய்தார்
ராமூராமூரேசீத்தாராமூரே ராசாதேசிங்கு
பதில்சலாமுங்கொடுத்தானையா பாலனெழுந்திருந்து
ஊருங்குடித்தனமுமாகவந்து உகந்துசலாஞ்செய்தார்
கையமர்த்திமரியாதைசெய்தான் காளைகுழந்தையவன்
எல்லாருமகூடி அரண்மனைவந்தார் யேககாலத்தில்
வந்தவுடனேவிருந்துகளுண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
குதிரைக்குவேண்டியபுல்லுந்தண்ணீர் கூசாமல்வைத்தார்கள்
சபையில்வந்துநிறைந்துகொண்டார்கள் சகலதேசத்தாரும்

### டில்லிராசன் தேசிங்குராசனுக்கு வெகுமதிகொடுத்தல்

டில்லிபதுரையுந்தேசிங்குராசனைச் சேர்த்தணைத்தெடுத்து
உயர்ந்தசிம்மாதனத்தில்வைத்து ஒதுங்கிப்பக்கம்நின்றான்
அண்ணாவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு
பத்துகளஞ்சியப்பணத்தையெடுத்து பகுதிகட்டுமென்றான்
குதிரையாயிரம்யானையாயிரங் கொண்டுநிறுத்துமென்றான்
கணக்கில்லாதசேனைதளத்தைக் கடுகநிறுத்துமென்றான்
தேசிங்குக்கேற்றமாணிக்கவுடுப்பு தேடிக்கொண்டுவாரும்
மாணிக்கமாலைமுத்தாரங்கள் வரிசைகொண்டுவாரும்
தெய்வலோகத்துபாராசாரியைத் தேடிக்கொண் வாரும்
தேசத்தார்க்குவெகுமதிசெய்யத் தேடிக்கொண்டுவாரும்
நானேறுபுரவிநீலவேணியைத் துரத்திவாருமென்றான்

அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான் ராசலிங்கபாபு
சொன்னநாழிக்குத்தயாராச்சுது குழந்தகொலுவினிலே
தயாரானதைக்கண்ணாலேகண்டு டில்லிபதுரைதானும்
முத்தாரமுமரத்னாரமும் முன்னேகழட்டிபோட்டான
தேசிங்குக்கேற்றவெகுமதியெல்லாஞ் சேர்த்துக்கொடுத்தானும்
தேரணிராசனுந்தரணிசிங்குமே தேடியோடிவந்தார்
அவரவர்க்கேற்றவெகுமதியெல்லா மன்பாகத்தான்கொடுத்தான்
அன்பத்தாறுதேசராசர்க்கு அடங்கலுந்தான்கொடுத்தான்
தேசிங்குஅருகிலிருக்குமவனைத் திருஷ்டித்துப்பார்த்தானும்
மோவுத்துக்காரனைக்கண்ணாலேகண்டு முன்னேயோடிவந்த ன்
முத்தாரங்கள்ரத்னாரங்கள் முன்னேகழுத்திற்போட்டான்
அவனுக்கேற்றவெகுமதியெல்லா மங்கேகொண்டுவந்தான்
அய்யாகேளுமையாகேளு மோவுத்துக்காரனே
நானேறும்புரவிநீலவேணியை நீயேறவேணுமென்றான்
ஐம்பத்தாறுதேசத்திலுள்ள அரசருமேறமாட்டார்
ஏறினால்நீயேறவேணு மென்னென்றுநீகேளாய்
உன்சூரத்தறிந்தானம்மா யுனக்குதந்தேனென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென் றவனுமொத்துக்கொண்டான்
தேசிங்குபாலனைக்கண்ணாலேகண்டு சேதியென்னசொல்லுகிறான்
ஐம்பத்தாறுதேசத்தரசர்க்கும் அதிபதிநான்தானே
எனக்குமிஞ்சின அதிபதியாக விருந்து அரசுசெய்யும்
என்மகளைராணியபமாளை இங்கேதந்தேனென்றான்
கல்யாணஞ்செய்தராசமுகத்தைக் காத்துக்கொள்ளுமென்றான்
எப்போயிஷ்டமோ அப்போகலியாணஞ் செய்துபோமென்றான்
நீயிட்டவேலைதலையால்செய்வேன் நிச்சயமாகவையா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான அறியாதபாலகனும்
கோவிந்தாகோவிந்தாவென்று குப்பென்றெழுந்தானும
டில்லிபதுரையைச்சேர்த்தணைத்து சேதியென்னசொல்வான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ
சமஸ்தானத்தையறியாதவனும் தாங்குவேனோவையா
அம்மொழியைக்காதிற்கேட்டான் தேரணிராசனும்
ஐயாகேளுமையாகேளும டில்லிபதுரையேநீ
ஐந்துவருஷம்பாலனாச்சுதே அறியாதயென்குழந்தை
இப்போதுகல்யாணஞ்செய்ய எனக்குச்சம்மதியில்லை
இருபதுவயதில்கலியாணஞ்செய்து இட்டுக்கொண்டுபோறேனென்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமேசம்மதித்தான்
செஞ்சியைவிட்டு ஆறுமாதமாச்சுது செலவுதாருமையா
அம்மொழியைக்காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்

அண்ணுவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு
திவ்வியசேனையானைகுதிரை செஞ்சிகொண்டுசேரும்
என்றைக்குஞ்செஞ்சிதோப்புரூபணமும் யில்லையென்றுசொல்லும்
அன்பத்தாறுதேசராசரனைவரையும்பார்த்து
செஞ்சிராசனால்சிறைமீண்டுபோங்கள் தேசராசர்களே
போய்வாரோம்போய்வாரோம்நாங்கள் புண்ணியதுரைமாரே
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவரும்வந்தாரும்

## தேசிங்குராசன் செஞ்சிகோட்டைவந்து சேர்ந்தது

தேரணிராசனும்சிற்றப்பதுரையும் தெருவிலேவந்தாரும்
மோவுத்துக்காரன்நீலவேணிமேல் முன்னேவந்துநின்றான்
தேரணிராசனும்சிற்றப்பதுரையும் தேசியேறினார்கள்
பிறகேயிருந்தராசதுரைகள் புரவியேறினார்கள்
அவரவர்களுடையதேசத்தினிலே அவரவர்போய்ச்சேர்ந்தார்
செஞ்சிகோட்டையில்வந்துசேர்ந்தார் தேசிங்குபாலகனும்
வருமுன்னமேசேதியறிந்து வருந்தியேபெற்றவளும்
ஆயிரந்தோழிமார்களுடனே அங்கேவந்துநின்றாள்
வந்தவுடனேதாயைக்கண்டு வணங்கிநமஸ்கரித்தான்
வந்துபணிந்தமகனையெடுத்து வாரியேமுத்தமிட்டாள்
ஆயிரந்தாதிகள்வந்தேமுத்து ஆலத்தியெடுத்தார்கள்
திருஷ்டிகழித்துமங்களதிருஷ்டி தெருவிலெறிந்தார்கள்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேவட்டித்தாள்
மகனையெடுத்துமடிமீதில்வைத்து மகிழ்ச்சியடைந்தார்கள்
என்னைவிட்டுநீஎப்படிபோனாய் எந்தன்கண்மணியே
போனநாள்முதலின்றையவரையில் பொசிப்பெடுத்ததில்லை
தாயுந்தகப்பனுமைந்தனைப்பார்த்து சந்தோஷமானார்கள்
ஏழுவருஷஞ்சந்தோஷமாக யிருந்தரசுசெய்தார்
ஏழுவருஷங்களானபின்பு இளவரசுதான்தரித்தார்
பட்டங்கட்டினமூன்றுமாதம் பாலனைப்பெற்றவளும்
பரமபதத்தைபோயடைந்தாள் பாக்கியராம்பாயி
தேசிங்குதித்தவெட்டாம்வருஷம தேரணிமகாராசன்
பரமதியானமசெய்தேயவரும் பரகதியைச்சேர்ந்தார்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே செஞ்சியையாண்டிருந்தார்
பதினெட்டுவயதுபாலனானான் ராசாதேசிங்கு
கலியாணஞ்செய்யயெத்தனித்தார் கண்மணிபாலனுக்கு
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேடியென்னசெய்தார்
டில்லிக்குச்சென்றுராணியம்மாளை செஞ்சிக்குகொண்டுவந்தார்



## தேசிங்குமகாராசனுக்கு திருக்கலியாணஞ்செய்தல்,

ராணிதேவியைக்கலியாணம்பண்ணி ராசமுடிதரித்தார்
திரைகட்டிகலியாணஞ்செய்தார் செஞ்சிகோட்டையினில்
பெண்சாதிமுகத்தைப்பார்த்தறியான் புலிகுட்டிதேசிங்கு
புருஷன்முகத்தைப்பார்த்தறியாள் புண்ணியராம்பாயி
ஆறுமாதமாய்க்கலியாணம்பண்ணி அறையில்வைத்தார்கள்
இரங்கரைநோக்கிபூசைசெய்தாளாம் ராணியம்மாளும்
மூன்றேமுக்கால்நாழிபூசைகள்செய்து முழுதுமஆண்டிருந்தாள்
இப்படி-பன்னிரண்டுவயதுவரைக்கும் ஏகசக்கிரமாண்டாள்
செஞ்சிதேசத்தையாண்டிருந்தான் சிங்கக்குட்டிபோலே
அந்தமட்டோடேயாச்சுதுபாரும் அந்தசெஞ்சிசேதி

## டில்லிராசன் நவாப்பினிடத்தில பகுதிக்கனுப்புதல்.

டில்லியிலிருக்கும்டில்லிபதுரையும் சேதியென்னசொல்வான்
அண்ணவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு
அம்பத்தாறுதேசராசநும் பகுதிகட்டுகிறார்
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்கும் எசமானனும்
ஆற்காட்டையாளும்நவாப்புசைதுல்லா அவனுங்கட்டினன
சல்திசல்திசேதிசொல்லும் ராசலிங்கபாபு
அந்தசேதியைக்காதிலேகேட்டான் ராசலிங்கபாபு
முழங்கால்சீலைபோட்டுமவனு முன்னேசலாஞ்செய்தான்
அய்யாகேளுமையாகேளும் லில்லிபதுரையேநீ
அம்பத்தாருதேசராஜநும பணமுங்கட்டினார்கள்
ஆர்க்காடாளும்நவாப்புசைதுல்லா அவனுங்கட்டவில்லை

பன்னிரண்டுவருஷந்தோப்பரூப்பகுதி பணமுங்கட்டவில்லை
அந்தசொல்லைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
அண்ணவாடாதம்பிவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆர்க்காடாளும்நவாப்புசைதுல்லா அறியவெழுதுமென்றான்
ஐயாகேளும்ஐயாகேளும் நவாப்புசைதுல்லா
பன்னிரண்டுவெருஷதோப்ரூப்பகுதி பணமுங்கட்டவில்லை
நூற்றெழுபத்திரண்டுபாளயப்பட்டு வுனக்கேயானாலும்
தேசத்துபணமும்வுன்னிடபணமும் டில்லியில்வரவில்லை
எட்டுநாளையில் அனுப்பினாலாச்சுது யிந்தபணத்தையெல்லாம்
இல்லாதேபோனால்நவாப்பைபிடித்து இடுவேன்சிறையிலென்றான்
சிறையிற்போட்டுமானபங்கஞ் செய்து அனுப்புவேனென்றான்
அந்தப்படிக்குயெழுதிமுடித்தான் அந்தவோலையைத்தான்
நீயேவாடாநீயேவாடா ஆர்க்காருபாபையா
ஐம்பதுபேர்டலாய்த்துமாரை அதிரக்கொண்டுபோயி
அரிக்கத்துபண்ணிபணத்தைவாங்கடா ஆர்க்காருபாபையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவாரான்
பத்துநாளையிலார்க்காடுதேசம் பகுதிகேட்கவாரான்
சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
ஓலையைப்பிரித்துவாசித்துப்பாரும் நவாப்புசைதுல்லா
வாசித்துப்பார்த்துசேதியெனக்கு வகுத்துசொல்லுமென்றான்
அந்தவார்த்தைகாதிற்கேட்டான் நவாப்புசைதுல்லா
டில்லிபேச்சைக்காதிலேகேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
அண்ணவடாதம்பிவாடா ரங்கநாதபிள்ளை
ஓலையைப்பிரித்துவாசித்துச்சொல்லும் ரங்கநாதபிள்ளை
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ரங்-நாதபிள்ளை
ஓலையைப்பிரித்துசேதியுரைத்தான் ரங்கநாதபிள்ளை
கேட்டவுடனேமனதுகலங்கி கீழேஓடிவந்தான்
கஜானாதிறந்துதிரவியமெல்லாங் கண்ணாலேதான்கண்டான்
அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
களஞ்சியபணமும்டில்லிபணமும் கட்டிபோடுமென்றான்
அதிகமாமோகுறையுமோ நீ அறிந்துசொல்லுமென்றான்
அந்தப்பேச்சைச்காதிலேகேட்டான் பங்காருநாய்க்கனும்
களஞ்சியப்பணத்தைகண்ணிற்கண்டு கடுகசொல்லுமென்றான்
ஐயாகேளுமையாகேளும நவாப்புசைதுல்லா
டில்லிபட்டணத்துக்களஞ்சியபணமும் சேனைகுறையுமையா
கணக்கைப்பார்த்துதோப்புரூபணத்தை சலுதியிலழையுமென்றான்
இருபதுநாளில்டில்லிப்பணத்தை யெடுத்தனுப்புமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும ஆர்க்காருபாபையா
கணக்கைசோதித்துடில்லிபணத்தைக் கடுககொண்டுவாரேன்
சலாஞ்செய்துபாட்சாபணத்தை சலுதிகொண்டுவாரேன்

இருபதுநாளில்பாட்சாபணத்தை யெடுத்துகொண்டுவாறேன்
அப்படியேபோய்வா நம்சனுதியில் ஆர்க்காருபாப்பையர்
ஆனால்நல்லதாகட்டுமென்று ஆர்க்காருபாப்பையன்
அந்தமட்டோடேநவாப்புசைதுல்லா அரசுசெய்யலுற்றான்
கோபம்பிறந்துசைதுல்லாவும குரூமாயழைத்தானும்
அண்ணவாடா தம்பிவாடா பங்காருநாயக்கா நீ
பெரியகணக்குரங்கநாதபிள்ளையைப் பிடித்துவாருமென்றான்
நல்லதென்றுபங்காருநாய்க்கன் நடியோடிவந்தான்
சல்திசல்தியோடிவாடா நீ ரங்கநாதபிள்ளை
ஸ்நானம்செய்துபூசைமுடித்துச் சாப்பிட்டிளைப்பாரி
அதிகசந்தோஷங்கொண்டேயிருக்கும் அருமைகணக்கப்பிள்ளை
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் ரங்கநாதப்பிள்ளை
கணக்கையெடுத்துச்சலாஞ்செய்து கடுகயோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் ரங்கநாதப்பிள்ளை
நாற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு நமக்கேயானாலும
நிலுவையொன்றுமில்லாதவர்கள் நிலையாய்கட்டுவாரு
கட்டாதிருக்கும்ராசதுரைகளைக் கடுகச்சொல்லுமென்றான்

## இராசாக்கள் பகுதிகட்டும்விபரம்.

தேசத்துராசதுரைகளையும் தெரியச்சொல்லுமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமேசொல்லலுற்றான்
அய்யாகேளுமையாகேளும நவாப்புசைதுல்லா
சேத்துபட்டுதாவுத்துக்காரனும் திறைபணங்கட்டிவாரான்
கள்ளக்குறிச்சிகானுசாயப்பு கட்டிவாரான்பணத்தை
மதுரைசீமைமலையாளத்தானும் வாய்தாபணங்கட்டுகிறான்
திண்டிக்கல்லுகொலுமுகத்தானும் திறைபணங்கட்டுகிறான்
அரியலூர்பெரியதுரையும் பணமுங்கட்டிவாரான
ஆரணிகோட்டைரங்கராவும பணமுங்கட்டிவாரான்
சங்கிலிபட்டுக்குஜமேதாரும பணமுங்கட்டிவாரான்
எட்டியாபுரத்துபாளையக்காரன் பணமுங்கட்டிவாரான்
திமிரிக்கோட்டைஷேக்முகம்மது பணமுங்கட்டிவாரான்
நாற்றெழுபத்திரண்டுபாளையக்காரரும் பணமுங்கட்டிவாரார்
இன்றையவரைக்குந்தோப்புறுபணமும் நிலுவையொன்றுமில்லை
நானொருமொழிசொல்லுகிறேன்கேள் நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையாளுகின்ற தேரணிமகாராஜன்
தேரணிராசன்குமாரனையா தேசிங்குமகிபாலன்
சிம்மாதனத்திலரசுசெய்கிறான் சிங்கக்குட்டிபோலே
அந்தசெஞ்சிதுருகத்திலிருக்கிறானையா தீரன்தேசிங்கு
அந்தசெஞ்சியாளுமதேசிங்குராசன் பணமுங்கட்டவில்லை
பன்னிரண்டுவருஷம்தோப்புறுபணமும் செஞ்சியில்வரவேணும்
தோப்புறுபணம்நிலுவையிலிருக்குது பழஞ்செஞ்சியிலே

இருபத்திரண்டுவருஷதோப்புருபணமும்செஞ்சியில்வாவேணும்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான்நவாப்புசைதுல்லா

## நவாப்பு ஆலோசனைசெய்து தேசிங்கின்பேரில் கோபங்கொள்ளல்.

கோபம்வந்துமூண்டுக்கொண்டதுநவாப்புக்கானாலும்
நானொருவார்த்தைசொல்லுகிறேன்கேள்பங்காருநாய்க்கா நீ
நூற்றெழுபத்திரண்டுமுகாணிருக்குதுநமக்கேயானாலும்
அந்த-எழுபத்திரண்டிற்சேர்ந்ததையாசெஞ்சிகோட்டையும்
செஞ்சிக்குப்போகத்தோன்றமல்லனைக்கொண்டுவாருமென்றான்
கோபத்தினாலேதோன்றமல்லனைக்கொண்டுவாருமென்றான்
சொன்னவுடனேதோன்றமல்லனுந்துரிதமாயோடிவந்தான்
முழங்கால்சீலைபோட்டவனும்முன்னேசலாஞ்செய்தான்
அண்ணாவாடாதம்பிவாடாதோன்றமல்லண்ணா
பனிரண்டுவருஷந்தோப்புருபணமுஞ்செஞ்சியில்வாவேணும்
வாய்தாபணமும்வேறேயிருக்குதுபழஞ்செஞ்சியிலே
தோப்புருபணத்துக்குப்போய்வாடாநீதோன்றமல்லண்ணா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்தோன்றமல்லண்ணன்
நானொருமொழிசொல்லுகிறேன்கேள்நவாப்புசைதுல்லா
துருப்புகுதிரைமுன்னூறெனக்குத்துரிதமாய்த்தரவேணும்
சாரிமூங்கில்சவாரிசண்டாதரவேணுங்கூடவேதான்
கோபுரவண்டிகுலாருவண்டிகூடவேதரவேணும்
இந்தப்படிக்குக்கொடுத்தாயானால்நவாப்புசைதுல்லா
செஞ்சிக்கோட்டைக்குப்போய்விட்டுவாரேன்நவாப்புசைதுல்லா
போனநாழியிற்செஞ்சிராசனைப்பிடித்துக்கொண்டுவாரேன்
வாராமற்போனால்செஞ்சிராசனைமடக்கிக்கொண்டுவாரேன்
கசானாபணத்தைக்கொடாமற்போனால்கழுவில்போட்டுவாரேன்
பகுதிபணத்தைக்கட்டாமற்போனால்பாராசிறையிட்டுவாரேன்
சிறையினில்வைத்துஅரிக்கத்துபண்ணிசேரக்கொண்டுவாரேன்
அந்தப்படிக்குஉத்தாரங்கொடுத்தால்அங்கேபோரேனென்றான்
அந்தவார்த்தைகாதிலேகேட்டான்நவாப்புசைதுல்லா
கேட்டபடிஉத்தாரங்கொடுத்தான்நவாப்புசைதுல்லா
சலாம்வாங்கித்திரும்பினானையாதோன்றமல்லோஜி
அரண்மனைக்குள்ளேசென்றானந்ததோன்றமல்லோஜி
ஸ்நானஞ்செய்துசாப்பிட்டானையாதோன்றமல்லோஜி
தலைக்குந்தலைப்பாபோட்டேயவனுஞ்சலுதியென்னசெய்தான்
அங்கியுருமால்போட்டானையாதோன்றமல்லோஜி

## தோன்றமல்லன் செஞ்சிக்குப்போகுதல்.

அரண்மனைவிட்டுவெளியிலேவந்தான்தோன்றமல்லனும்
அதற்குமுன்னமேதயாராச்சுதுபட்டத்துயானையும்
யானைகொம்புக்குகத்திகட்டினான்தோன்றமல்லோஜி

யானைமுடிக்குச்சிலைபோட்டான்தோன்றமல்லோஜி
நாராயணாகோவிந்தாவென்றுயானையேறினானும்
செஞ்சிக்கோட்டைக்குப்பயணமானான்தோன்றமல்லனும்
கணகணகணகணகணகணவென்றுகத்திகள்மின்னுது
பளபளபளபளபள்பளவென்றுபட்டாக்கள்மின்னுது
தடதடதடதடதடதடவென்றுகுதிரைகள்நடக்குது
அங்கேபோட்டநகாருசத்தந்திமிரியிற்கேட்டது

## தோன்றமல்லனை ஷேக்குமுகம்மது காணல்.

அந்தவேளையிலென்னசெய்கிறான்ஷேக்குமுகம்மதையா
எதிரியேவனோவந்தானென்றுஷேக்குமுகம்மதையா
முன்னூறுகுதிரைக்குத்தயார்பண்ணினான்ஷேக்குமுகம்மதையா
முன்னூறுதுருப்புக்குதிரையுடனேமுன்னேயோடிவந்தான்
தோன்றமல்லனைக்கண்ணாலேகண்டான்ஷேக்குமுகம்மதையா
கண்ணாலேகண்டுசலாமவாங்கினான்ஷேக்குமுகம்மதையா
பதில்சலாமுங்கொடுத்தானையா தோன்றமல்லனும்
எங்கேயிருந்துஎங்கேபோறீர்தோன்றமல்லண்ணா
இங்கேவந்தவயணமென்னதோன்றமல்லண்ணா
நேற்றியநிலுவைபைசாபணமுங்கட்டியனுப்பினேனான்
இன்றையநிலுவைபைசாபணமுங்கட்டப்போறேனான்
எஞ்சிமையிலேநகாருபோட்டவயணமென்னவையா
அந்தவார்த்தைக்குஎன்னசொல்லுகிறான்தோன்றமல்லோஜி
சண்டைக்குவரவில்லைஜ டிக்குவரவில்லைஷேக்குமுகம்மதையா
செஞ்சிகோட்டைக்குபணத்துக்குப்போறேன்ஷேக்குமுகம்மதையா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்ஷேக்குமுகம்மதையா
நானொருவார்த்தைசொல்லுகிறேன்கேளுங்தோன்றமல்லண்ணா
அவனுமராசனைபாராசாதேசிங்கு
செஞ்சிக்கோட்டைக்குசிப்பாயைய ராசாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்மகனும்ராசாதேசிங்கு
அவன்-கண்ணையுருட்டிப்பார்த்தானேயானால்சிப்பாய்தேசிங்கு
கால்பிலங்களும்கைபிலங்களும்கதறியோடுமேதான்
டாறுடாறாய்த்தீர்த்துப்போடுவான்ராசாதேசிங்கு
சண்டைசெய்துஜெயிக்கமாட்டாய்தோன்றமல்லண்ணா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்தோன்றமல்லோஜி
என்னபேச்சுபேசினாயடாஷேக்குமுகம்மதையா
அவனிடசூரத்தெனக்குத்தெரியும்ஷேக்குமுகம்மதையா
செஞ்சிக்குச்சென்றுயென்தன்வலுமையைத்தெரியக்காண்பிக்கிறேன்
போய்வாரோநான்போய்வாரோநான்ஷேக்குமுகம்மதையா
கட்டியிருந்தகுதிரையெல்லாம்நடக்குதுபாளையமும்
போடுபோடென்றுபோறானையா தோன்றமல்லனும்
ஆரணிகோட்டைக்கிரண்டுநாழிவழியில்நகாருபோட்டானும்
இங்கேபோட்டநகாருசத்தம்ஆரணியில்கேட்டது

## தோன்றமல்லனை வெங்கடராயர்சாணுதல்

ஆரணிகோட்டையாளுகின்றவெங்கடராயரும்
வெங்கடராவுசீனிவாசராவுசந்திரமகாராவும்
சதுர்திர்ந்தேயுட்கார்ந்திருக்கிறார்மூன்றுதுரைமாரும்
கார்பார்பண்ணுகிறவெங்கடராயர்காதில்விழுந்திடவே
எதிரியெவனோவந்தானென்றுவெங்கடராயரும்
கோட்டையிலிருந்துவெளியில்வந்தார்வெங்கடராயரும்
ஆயிரங்குதிரைதயார்பண்ணிஞர்வெங்கடராயருந்
துருப்பிலுள்ளஆயிரங்குதிரையைத்தூரத்தியோடிவந்தார்
தோன்றமல்லனைக்கண்ணாலேகண்டுவெங்கடராயரும்
சலாமையாசலாமையாதோன்றமல்லோஜி
பதில்சலாமுங்கொடுத்தானையாதோன்றமல்லோஜி
எங்கிருந்துநீரெங்கேபோரீர்தோன்றமல்லோஜி
நீ-இங்கேவந்தவயணமென்னதோன்றமல்லோஜி
நேற்றியதிலுவைபைசாபணமுங்கட்டிஅனுப்பிவைத்தேன்
இன்றையதிலுவைபைசாபணமுங்கட்டிஅனுப்பிவைத்தேன்
என்சீமையிலேங்காருபோட்டவயணமென்னவையா
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேள்வெங்கடராயரே
செஞ்சிகோட்டைக்குப்பணத்துக்குப்போறேன்வெங்கடராயரே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்வெங்கடராயரும்
நானொருவார்த்தைசொல்லுகிறேன்கேள்தோன்றமல்லண்ணா
அவனிடசேதியெனக்குத்தெரியும்தோன்றமல்லண்ணா
அவன்பிறந்தவேழாம்வருஷந்தாயார்சென்றுபோனாள்
தேசிங்குபிறந்தவெட்டாம்வருஷந்தகப்பன்சென்றுபோனான்
சிற்றப்பதுரைதரணிசிங்குமெடுத்துவளர்த்தாராம்
பதினெட்டுவயதில்கலியாணம்பண்ணிஞர்சிற்றப்பராசாவும்
கலியாணம்பண்ணிநாலுவருஷங்காளைகுழந்தையவன்
இப்போ-இருபத்திரண்டுவயதுள்ளபாலன்ராசாதேசிங்கு
ஐந்துதுலாமபரிசைகத்திஅவனிடகத்தியும்
ஏழுதுலாம்பரிசைபாலாஅவன்கைபாலாவும்
அவனுக்கேற்றதெய்வலோகப்பாராசாரிகுதிரை
பாராசாரியேறினானானால்ராசாதேசிங்கு
பட்டாவுருவிகையிலேபிடித்தால்ராசாதேசிங்கு
இணையொருவரொங்குமில்லாதராசாதேசிங்கு
பாற்சமுத்திரம்போலேதுரைகள்படைகளெதிர்த்தாலும்
பத்துநாழியிற்கண்ணாலேகண்டபழஞ்செஞ்சிபோவான்
சிங்கம்போலேவந்துவெட்டுவான்சிப்பாய்தேசிங்கு
புலியதுபோலவந்துபாய்வான்ராசாதேசிங்கு
மாறுமாறென்றுதீர்த்துப்போடுவான்ராசாதேசிங்கு
அவனைச்செயிக்கவொருவருமில்லைதோன்றமல்லண்ணா

சண்டைபண்ணிசெயிக்கமாட்டாய்தோன்றமல்லண்ணு
சமாதானமாய்பேசவேணும்தோன்றமல்லன்று
சமாதானத்திற்குட்படமாட்டான்ராசாதேசிங்கு
அந்தப்பேச்சக்காதிலேகேட்டான்தோன்றமல்லோஜி
இனிஇல்லாதபயம்பிடித்ததுதோன்றமல்லனுக்கு
கையுங்காலுமுதரலெடுத்துக்கலங்கியிருந்தானும்
மனதில்மெத்தவிசனங்கொண்டுவாடியிருந்தானும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறார்வெங்கடராயரும்
மெத்தசூர்த்துக்காரனவனும்ராசாதேசிங்கு
பணமென்றசேதிகாதிலேகேட்டால்பாய்ந்துகுத்திடுவான்
சல்-மெத்தகெட்டிக்காரனையாராசாதேசிங்கு
அவனும்-விஷ்ணுபக்திக்காரனையாராசாதேசிங்கு
இரவும்பகலுமரங்கநாதனைஎண்ணியிருப்பவன்தான்
நாமத்தைக்கண்டால்பயப்படுவானையாராசாதேசிங்கு
அந்தசேதியைக்காதிலேகேட்டான்தோன்றமல்லோஜி
சந்தோஷமாகவெங்கடராயனைத்தழுவியணைத்தானும்
இனிமேலெனக்குபயமில்லையென்றுஇறுமாந்துசொன்னானும்
நாமத்தைப்போட்டுசெஞ்சிராசனைநடத்திக்கொண்டுவாரோன்
எந்தவிதமுஞ்செஞ்சிராசனைஇடுவேன்சிறையிலென்றான்
ஆற்காடுதேசங்கொண்டேயவனைஅடக்கிப்போடுவேனபார்
செய்யாமற்போனாலெனதுபேரும்தோன்றமல்லனல்ல
போய்வாரேன்பேய்வாரேநானும்வெங்கடராயரே
கட்டியிருக்குதிரையெல்லாங்கடந்ததுபாளையமும்
போடுபோடென்றுபோறானையாதோன்றமல்லனும்
செஞ்சிகோட்டைமண்ணைமிதித்தான்தோன்றமல்லனுஞ்
செஞ்சிக்கோட்டைக்கைத்தூரம்வழிதேவனூர்பேட்டை
தேவனூர்பேட்டையோரத்திலேசங்கராபரணியாறு
ஆற்றங்கரையில்வந்தேயவனும்பாளையம்போட்டானும்
மூன்றுநாள்வரைக்கும்சத்தபண்ணமல்முழித்திருந்தானும்
நாலாநாள்காலமேயங்கேநகாருபோட்டானும்
இங்கேபோட்டநகாருசத்தஞ்செஞ்சியில்கேட்டதுபார்
புதுசெஞ்சியில்பூசைபண்ணுகிறார்ராசாதேசிங்கு
பழஞ்செஞ்சியில்கார்பார்பண்ணுகிறார்சிற்றப்பராசாவும்
கார்பார்பண்ணுகிறசிற்றப்பராசாகாதில்கேட்டிடவே
என்றுமில்லாதநகாருசத்தம்இன்றுவந்ததென்ன
அலங்கத்துமேலேயேறிப்பார்த்தான்சிற்றப்பராசாவும்
ஆற்றங்கரையில்வந்திருக்குதுநவாப்புபாளையமும்
கண்ணாலேகண்டுமனதுகலங்கிகடுகியென்னசெய்தான்
ஒற்றைக்குதிரைபோட்டுமேயேறிவுடனேயோடிவந்தான்
அந்தவேளைக்குப்பூசைபண்ணுகிறான்ராசாதேசிங்கு
அரிநமோநாராயணாவென்றுபூசைபண்ணுகிறான்

ஸ்ரீகிருஷ்ணஅரிகோவிந்தாவென்றுபூசைபண்ணுகிறான்
மாயவாவைகுந்தாவென்றுபூசைபண்ணுகிறானும்
செஞ்சிகோட்டைஸ்ரீரங்கநாதனைத்தியானஞ்செய்கிறானும்
பூசைமுகத்திலேவந்துநின்றான்சிற்றப்பராசாவும
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்சிற்றப்பராசாவும்
என்னபூசைபண்ணினாயடாமகனேதேசிங்கு
சேவனூரிலேகணகணவென்றுநகாருமுழங்குகிப்போ
பாளையமவந்துநெருங்கியிருக்குதுமகனேதேசிங்கு
நாலுமூலையுப்நவாப்புபாளயமநாடியிருக்குதுபார்
ஆற்றங்கரையில்நவாப்புசேனைமுமஅண்டியிருக்குதுபார
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டாராசனதேசிங்கு
கண்ணைமுழித்துப்பார்த்தானேயாராசாதேசிங்கு
ராமுராமுனோதேவாவுமக்குசிற்றப்பராசாவே
என்னபேச்சுபேசினீரையாசிற்றப்பராசாவே
இதற்குநானும்பயப்படுவேனோசிற்றப்பராசாவே
கலகலவென்றுசிரித்தானேயாராசாதேசிங்கு
கோபங்கொண்டுநகைத்தவனுங்கொல்லுஞ்சிங்கம்போலே
ஐயாசேளும்ஐயாகேளும்சிற்றப்பராசாவே
பனிரண்டுவருஷந்தோப்புருபணமும்நம்மண்டையிருக்குது
பனிரண்டுவருஷத்துக்குண்டுமருந்துநம்மண்டையிருக்குது
நம்மிடகோட்டைக்குபயமுமில்லைநமக்கேயானாலும்
ராமாராமாவென்றுநாமும்ராச்சியமாளுகிறோம்
ராஜகுலத்தில்நானும்பிறந்தேனசேஷங்காருக
எதிராளியானநவாப்புதண்டுளகிரில்விழுந்தகாம்
பகையாளியானநவாப்புதண்டுபக்கத்தில்விழுந்ததுவோ
தேசமெல்லாம்சோர்ந்துவந்ததோசிற்றப்பராசாவே
இன்னம்-அரைக்கால்நாழிபொறுத்துக்கொள்ளும்சிற்றப்பராசாவே
டாருடாருய்த்தீர்த்துப்போடுகிறேனசிற்றப்பராசாவே
டில்லிபாட்சாவைக்கண்டுகட்டிவருகிறேனசிற்றப்பராசாவே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுசிற்றப்பராசாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குதுசிற்றப்பராசாவே
வந்தவனொன்றுகேட்டுவாருஞ்சிற்றப்பராசாவே
பூசைமுகத்தைக்கெடுக்கவேண்டாமசிற்றப்பராசாவே
ஆனால்நல்லதாகட்டுமென்றானசிற்றப்பராசாவும்
அந்தவேளையில்பூசைசெய்கிறான்ராசாதேசிங்கு
சிற்றப்பராசாதாணிசிங்குசொல்லுக்குவந்தாராம்
இரண்டுபேர்ஆர்க்காருமாரைத்தயார்பண்ணினானாம்
அஞ்சல்மேலேஅஞ்சல்போகுதுதோன்றமல்லனுக்கு
தோன்றமல்லனைகிட்டிவந்தார்ஆர்க்காருமார்களும்
வந்தவனைத்தான்கண்ணாலேபார்த்தான்தோன்றமல்லனும்
ராமுராமுராமுராமுராமுராமுரோஆர்க்காருமாரோநீர்

என்னைத்தேடிவந்தகாரியமெனக்குசொல்லுமையா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார் அர்க்காருமார்களும்
எங்களையாளுந்தேசிங்குராசன் உங்களையழைக்கச்சொன்னார்
சல்திசல்திபுறப்படுமென்றார் அர்க்காருமார்களும்
இந்தச்சேதிகாதிலேகேட்டானே தோன்றமல்லனும்

## தோன்றமல்லன் தேசிங்குராசனிடம் வருதல்.

கால்நடுங்கக்கைநடுங்கியானையேறினானும்
கண்ணும்பெடுத்தெச்சிலையுமிழ்ந்துநாமத்தைப்போட்டானும்
யானையைக்குத்திரத்தையெடுத்துநடுவிலேபோட்டானும்
பட்டைநாமம்போட்டானையா தோன்றமல்லனும்
அந்தவேளைக்குயென்னசெய்கிறான்ராசாதேசிங்கு
பூசைமுழுதும்முடிந்தையாராசாவுக்கானும்
பூசைவிட்டுவெளியேவந்தான்ராஜாதேசிங்கு
சிங்காரமாவில்வந்தானையாராசாதேசிங்கு
திருமண்பெட்டியைக்கையிலெடுத்தான்ராசாதேசிங்கு
ராமாராமாவென்றுதிருமணிநெற்றியில்விட்டானும்
சரிகைமுண்டாசுதலையில்தரித்தான்ராசாதேசிங்கு
[illegible]த்துக்கட்டினானையா கதுப்புஞ்சிங்கம்போலே
இடுப்புக்கச்சைஇழுத்துக்கட்டினானெதிர்க்குஞ்சிங்கம்போலே
தமாஷெனடுத்துக்காலிலேபோட்டான்ராசாதேசிங்கு
அங்கியெடுத்துமேலேபோட்டானண்ணல்தேசிங்கு
கைக்குச்சீராகட்டிக்கொண்டான்ராசாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசைகத்திகையில்பிடித்தானும
எழுதுலாம்பரிசைபாலாஎடுத்துபிடித்தானும்
எமன்போலேயுட்கார்ந்தானையாராசாதேசிங்கு
மன்மதன்போலேயுட்கார்ந்தானையாராசாதேசிங்கு
அருகிலிருந்தஅர்க்காருமாரைதட்டிகூப்பிட்டான்
கூப்பிட்டழைத்துச்சேதிசொன்னான்சொல்லுஞ்சிங்கம்போலே

## தேசிங்குபாளயப்பட்டாரைக்கொலுவுக்கு வரவழைத்தல்.

செயராமுவைகெங்காராமுவைக்கொலுவுக்குவரச்சொல்லும்
நத்தர்சிங்குசோபால்சிங்குவரச்சொல்லும்கொலுவுக்கு
ராமுசிங்குலட்சுமணசிங்கைநமதுகொலுவிலழையும்
ராமதாரியைலட்சுமணதாரியைக்கொலுவுக்குவரச்சொல்லும்
மாலசிங்குகிரிபுசிங்குவரச்சொல்லும்கொலுவினிலே
திரணிவல்லிஉசேனிசாயபைகொலுவுக்குவரச்சொல்லும்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனைக்கொலுவுக்குவரச்சொல்லும்
சிற்றப்பதுரைதாணிசிங்குவைகொலுவுக்குவரச்சொல்லும்
சல்திசல்தியென்றுசொன்னான்ராசாதேசிங்கு
சலாம்வாங்கிதிரும்பினாரையா அர்க்காருமார்களும்
சொன்னநாழிக்குநிறைந்தகொலுவில்சூழவேவாடிவந்தார்

...விதமாயிருக்குதங்கேசெஞ்சிகோர்ட்டையிலே
...கவேளைக்குஎன்னசெய்கிறான்தோன்றமல்லனும்
...ானையைவிட்டிக்கீழேகுதித்தான்தோன்றமல்லனும்
...ாராயணகோவிந்தாவென்றுகோட்டைக்குள்வந்தான்
...ருமுன்னுக்குவந்தானையாதோன்றமல்லனும்
...மழங்கால்சிலேபோட்டுஅவனுமுன்பாய்சலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையாராசாதேசிங்கு
கண்ணாலேகண்டுதோன்றமல்லனைகடுச்சொல்லலுற்றான்
நீ-இங்கேவந்தவயணமென்னதோன்றமல்லண்ணா
எனக்குஇருபத்திரண்டுவயதுஇப்போதாச்சுது
இத்தனைநாளாய்நவாப்புஜெனங்களிங்கவந்ததில்லை
உயிர்கொடுக்கச்செஞ்சிகோட்டையுள்ளேவந்தீரோ
தைரியங்கொண்டுசெஞ்சிகோட்டையில்சார்ந்துவந்தீரோ
எஞ்சிமையில்நகாருபோட என்னவலுமைகொண்டீர்
சல்திசல்திசொல்லுமென்றானாராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான்தோன்றமல்லனும்
கால்நடுங்கிகைநடுங்கிகாலில்விழுந்தானும்
சலாமையாசலாமையாராசாதேசிங்கு
நான்-சண்டைக்குவரவில்லைசாடிக்குவரவில்லைராசாதேசிங்கு
கோபமில்லாமலென்னிடபேச்சைக்கேளுமையாவே
சந்தோஷமாகவென்னிடபேச்சைசற்றேகேளுமையாவே
நூற்றெழுபத்திரண்டுபாளைவப்பட்டுநவாப்புக்காணுலும்
நூற்றெழுபத்திரண்டில்சேர்ந்ததையாசெஞ்சிக்கோட்டையும்
இந்த செஞ்சிக்கோட்டைப்பணமும்வரவில்லைராசாதேசிங்கு
இருபத்திரண்டுவருஷத்தோப்புருப்பணமுஞ்செஞ்சியில்வரவேணும்
தோப்புரும்பணம்வேறேகிடக்குதுபழஞ்செஞ்சியிலே
தோப்புருநிலுவைக்குவந்தேனையாராசாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்சிப்பாய்தேசிங்கு



தேசிங்கு தோன்றமல்லன்மீது கோபித்தல்.

# தேசிங்குராஜன்கதை.

பல்லைப்படபடவென்றுகடித்தானையாராசாதேசிங்கு
கையைத்தூக்கிகனைத்துதட்டினான்ராசாதேசிங்கு
இனியில்லாதகோபமாச்சுதுராசாவுக்கானாலும்
கோபத்தினாலேகட்டினவாளைக்கொல்லவெடுத்தானும்
பார்த்தவுடனேதோன்றமல்லனும்பதைத்துவிழுந்தானும்
விழுந்தவுடனேசலாஞ்செய்துவேண்டிக்கொள்ளலுற்றான்
தலையைசைத்துதோளைநெறித்தான்தாவுஞ்சிங்கம்போலே
கண்ணைபுருட்டிக்கதம்பினானையாகாளைசிங்கம்போலே
அடா-என்னபேச்சுபேசினாயடாதோன்றமல்லனே
நீவந்தாற்போல்நவாப்புவந்தால்நிமிஷமிருக்கமாட்டான்
பணமென்றசேதிகாதிலேகேட்டால்பாய்ந்துவெட்டுவேனான்
நாளைக்குவருகியநவாப்புசாகிபைஇன்றைக்குவரச்சொல்லும்
ரோஷக்காரனானால்நவாப்பைநொடியில்வரச்சொல்லும்
ஆண்பிள்ளையானால்நவாப்புசாகிபைசண்டைக்குவரச்சொல்லும்
மீசையுள்ளவனானால்நவாப்பை விளாவில்வரச்சொல்லும்
தைரியமுள்ளவனானால்நவாப்பைசலுதியில்வரச்சொல்லும்
கருவாடுவிற்கிறலப்பைபயலுக்குகிஸ்திகட்டுகிறதா
கத்தியெடுத்தசிப்பாய்களெல்லாந்தோப்புருகொடுக்கிறதா
கத்திமுனையில்பணமுந்தாரேனவாப்புக்கானாலும்
பரிசமுனையில்பணமுந்தாரேனவாப்புக்கானாலும்
போனவருஷத்துக்கிக்கவருஷம்வரகுவிளைந்தது
வரகுவைக்கல்மெத்தக்கிடக்குவாரிப்போகச்சொல்லும்
கோட்டைவெளியில்மணல்கிடக்குதுகொண்டுபோகச்சொல்லும்
ஒட்டையாயிரம்யானையாயிரம்வோட்டிவரச்சொல்லும்
பொதிகளைபோட்டுநவாப்புசாயபைபோகச்சொல்லுமென்றான்
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்தோன்றமல்லனும்
கால்நடுங்கிகைநடுங்கிகளைத்துவிழுந்தானும
செத்தபிணம்போலேயிருந்தான்தோன்றமல்லனும்
மூர்ச்சைதெளிந்துஎழுந்தானையாதோன்றமல்லனும்
பார்க்கப்பார்க்ககோபமூளுதுராசாவுக்கானாலும்
கோபம்வருவதைக்கண்ணால்கண்டான்தோன்றமல்லனும்
ரங்கநாதனைவேண்டிக்கொள்ளுகிறான்தோன்றமல்லனும்
தெரியாமற்படிக்குசெஞ்சிக்குவந்தேன்ரங்கநாதரே
என்னுயிர்கொண்டுஆர்க்காடுபோனால்ரங்கநாதரே
ஆயிரம்பேருக்குஅன்னங்கொடுக்கிறேன்ரங்கநாதரே
வஸ்திரதானம்வகைவகையாகவந்தவர்க்குக்கொடுப்பேன்
மங்களமாகக்கலியாணங்கள்பகிழ்வாய்செய்துவைப்பேன்
ஜோகிஜங்கமரோவர்வந்தாலுஞ்சொர்னதானங்கொடுப்பேன்
வேதவேதியர்கேட்கும்வகைகளைவிருப்பமுடன்றருவேன்
இப்போதென்னுயிர்பிழைக்கவேணுமையாரங்கநாதசுவாமி
அந்தச்சொல்லைக்காதில்கேட்டான்ராசாதேசிங்கு
கலவென்றுசிரித்தானையாராசாதேசிங்கு

நானொருசங்கதிசொல்லுகிறேன்கேள்தோன்றமல்லண்ணா
நீவந்தாப்போல்நவாப்புவந்தால்குத்திப்போடுவேன்நான்
உங்கள்-நவாப்புக்கிப்போபயப்படவில்லைதோன்றமல்லண்ணா
உன்-நெற்றிநாமத்தைக்கண்டுபயந்தேனடாதோன்றமல்லண்ணா
சங்கர்வார்த்தையைக்கண்டுபயந்தேன்தோன்றமல்லண்ணா
உன்னுயிர்பிழைக்கவேண்டுமோடாதோன்றமல்லண்ணா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்தோன்றமல்லனும்
ராமுராமுரோராமுராமுரோராசாதேசிங்கு
என்தன்மேலேகோபம்வேண்டாம்ராசாதேசிங்கு
நானிப்போதேஓடிப்போகிறேன்ராசாதேசிங்கு
சலாஞ்செய்துதிரும்பினானையாதோன்றமல்லனும்
கோட்டைக்குவெளியில்வந்தானையாதோன்றமல்லனும்
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும்சமேதாருமாரே
நான்-ஆனையின்மீதிலேறமாட்டேன்சமேதாருமாரே
குதிரையின்மீதிலேறமாட்டேன்சமேதாருமாரே
தண்டுக்குள்ளேபடுத்துக்கொள்ளுகிறேன்சமேதாருமாரே
நாம்-சீக்கிரமாகவூணுநான்பயணஞ்செஞ்சிக்குவந்தோமே
இன்றையராத்திரிஆற்காடுக்குக்கொண்டுபோகவேணும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார்சமேதாருமாரும்
கட்டியிருந்தகுதிரையுஞ்சேனையுஞ்சடுதியில்நடந்ததுவே
காற்றுபோலேபறக்கிறானாயாசமேதாருமாரும்
ஆற்காடுவீதியில்நகாருஅன்பாயடித்தானும்
அங்கேபோட்டநகாருசத்தம்நவாப்புகேட்டானும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்நவாப்புசைதுல்லா
அண்ணுவடாதம்பிவாடாபங்காருநாய்க்காநீ
சல்-செஞ்சிக்கோட்டைபணமும்வருகுதுபங்காருநாய்க்காநீ
சதுருசமக்காளம்போடச்சொன்னான்நவாப்புசைதுல்லா




### நவாப்பினிடத்தில் தோன்றமல்லன் வந்து சொல்லல்.

சாப்புபெட்டியையழைக்கச்சொன்னான்நவாப்புசைதுல்லா
தூங்காவிளக்கைவைக்கச்சொன்னான்நவாப்புசைதுல்லா
பணமும்வாங்கத்தயார்பண்ணினான்நவாப்புசைதுல்லா
சதுருதீர்ந்தேயுட்கார்ந்திருந்தான்நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்தோன்றமல்லனும்
நவாப்புமாளில்வந்தானையாதோன்றமல்லனும்
சலாமுஞ்செய்துயெதிரிலேநின்றான்தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையாநவாப்புசைதுல்லா
கொள்ளுகுத்தினஉலக்கைபோலமுன்னேநின்றானும்
தோன்றமல்லனைக்கண்ணாலேகண்டான்நவாப்புசைதுல்லா
அடா-என்னகாரியம்பண்ணினாயடாதோன்றமல்லண்ணா
பணமுமெங்கேகாசுமெங்கேதோன்றமல்லண்ணா
ஐயா-பணமுங்காணேன்காசுங்காணேன்நவாப்புசைதுல்லா
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்குநானேபோயிருக்க
இத்தனைநாளுமிவனைப்போலநானும்பார்த்ததில்லை
இனியில்லாதபாடுபடுத்தினான்ராசாதேசிங்கு
ராசாபடுத்தினபாடுகையாநவாப்புசைதுல்லா
செத்துப்போனவன்திரும்பிவந்தேன்நவாப்புசைதுல்லா
வாயினாலேசொல்லமாட்டேன்நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையான்ஓலையெழுதினான்நவாப்புசைதுல்லா
ஓலைமுகத்தைக்கண்ணாலேபாரும்நவாப்புசைதுல்லா
ஓலையெடுத்துயெதிரிலேவைத்தான்தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்நவாப்புசைதுல்லா
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்குப்பெரியகணக்கப்பிள்ளைவாரும்
ஓலையைபிரித்துப்பாருமையாபெரியகணக்கப்பிள்ளை
ஓலையைபிரித்துப்பார்த்தானையாரங்கநாதப்பிள்ளை
வாசித்துப்பார்த்துதலையைக்குனிந்தான்ரங்கநாதப்பிள்ளை
என்னகாரியம்பண்ணினாய்ரெங்கநாதப்பிள்ளை
இரண்டுநாழியில்விடித்துப்போடுகிறேன்செஞ்சிகோட்டையைத்தான்
எதிர்த்துவந்ததேசிங்குராசனைகுத்திப்போடுவேனான்
ஆண்சிறைபெண்சிறைதள்ளிபிடிக்கிறேன்செஞ்சிகோட்டையை
உண்டானசேதிவெளியில்சொல்லும்ரங்கநாதப்பிள்ளை
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்ரங்கநாதப்பிள்ளை
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்நவாப்புசைதுல்லா
நாளைக்குவருகிறநவாப்புசாயப்பைஇன்றைக்குவரச்சொல்லும்
ஆண்பிள்ளையானால்நவாப்புசாயப்பைசண்டைக்குவரச்சொல்லும்
சல்-பெண்பிள்ளையானால்நவாப்பைபிழைத்தோடிபோகச்சொல்
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால்சண்டைக்குவரச்சொல்லும்
கத்திமுனையில்பணமுந்தாரேன்நவாப்புக்கானாலும்
ஈட்டிமுனையில்பணமுந்தாரேன்நவாப்புக்கானாலும்

போனவருஷத்துக்கிந்தவருஷம்வரகுமெத்தவிளைவாம்
வரகுவைக்கல்மெத்தகிடக்குதுவாரிப்போகச்சொல்லும்
கோட்டையின்மேல்கல்லுகிடக்குதுகட்டிபோகச்சொல்லும்
இத்தனைசமர்த்துமிருந்ததேயானால்இங்கேவரச்சொல்லும்
திராணியில்லாதபெண்பிள்ளையானால்அங்கேயிருக்கச்சொல்லு
இந்தப்படியாயெழுதியிருக்குதுஇந்தஓலையிலே
இந்தசேதிகாதிலேகேட்டான்நவாப்புசைதுல்லா
கேட்டவுடனேவயெரியுதுநவாப்புக்கானாலும்
கோபம்வந்துமூண்டுக்கொண்டதுநவாப்புக்கானாலும்
நீலவிழிகண்கள்நெரியுதையா நவாப்புக்கானாலும்
நெருப்புபோலபொரிபறக்குதையா நவாப்புக்கானாலும்
மீசைபடபடவென்றுதுடிக்குதையா நவாப்புக்கானாலும்
சல்-பட்டாவுருவிகையிலேபிடித்தான்நவாப்புசைதுல்லா
அண்ணாவாடா தம்பிவாடாபங்காருநாயக்கா நீ
உனக்கு ஆனைசெத்தால்யானைதாரேன்பங்காருநாய்க்கனே
குதிரைசெத்தாலும்குதிரைதாரேன்பங்காருநாய்க்கனே
தளங்கள்செத்தாலும்தளங்கள்தாரேன்பங்காருநாய்க்கனே
சண்டாயிழுத்துவெளியிலபோடுபங்காருநாய்க்கனே
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்பங்காருநாய்க்கனும்
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்நவாப்புசைதுல்லா
ஆராருக்குப்பயணஞ்சொல்லநவாப்புசைதுல்லா
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரைகொலுவுக்குவரச்சொல்லும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான்பங்காருநாய்க்கனும்
ஓலையெழுத்தாணிகையில்பிடித்தான்பங்காருநாய்க்கனும்
ஓலையையெழுதிதயார்பண்ணினான்பங்காருநாய்க்கனும்
எழுபத்திரண்டுஅர்க்காருமாரைத்தயார்பண்ணினானும்
அஞ்சல்மேலேயஞ்சல்வைத்தான்பங்காருநாய்க்கனும்
ஓலையையெடுத்துகையிலேகொடுத்தான்அர்க்காருமாருக்கு
சலாம்வாங்கித்திரும்பினாரையா அர்க்காருமார்களும்

அர்க்கார்மார்கள்பாளையப்பட்டுக்குஓலைகொண்டுபோகுதல்.

காற்றுபோலபறக்கிறாரையா அர்க்காருமார்களும்
மேகம்போலபறக்கிறாரையா அர்க்காருமார்களும்
இரண்டுநாழியிற்போய்ச்சேர்ந்தாரையாபாளையப்பட்டுக்கு
ஓலையைக்கொண்டுபோய்கையில்கொடுத்தார் அர்க்காருமார்களும்
ஓலையைப்பிரித்துப்பார்த்தாரையாபாளையக்காரரும்
அந்தவேளையிலென்னசெய்கிறார்பாளையக்காரரும்

அவர்களுக்கேற்றபீரங்கிகுண்டுதயார்பண்ணினாராம்
அவரவர்க்கேற்றதுருப்புகுதிரைதயார்பண்ணிராம்

### நவாப்பினிடத்தில்பாளயப்பட்டார்வருதல்.

சேத்துபட்டுதாவுத்துக்காரன்கொலுவுக்குவாரானாம்
சேத்துபட்டுரங்கராவுகொலுவுக்குவாரானாம்
திருவண்ணாமலைசுபங்கிதுரையும்கொலுவுக்குவாரானாம்
திமிரிக்கோட்டைஷேக்குமுகம்மதுகொலுவுக்குவாரானாம்
வாலிக்கோட்டைஅப்துல்மாதரும்கொலுவுக்குவாரானாம்
மதுரைசீமைமலையாளத்தானும்கொலுவுக்குவாரானாம்
ஆரணிக்கோட்டைவெங்கடராயரும்கொலுவுக்குவாரானாம்
அரியலூருபெரியதுரையுங்கொலுவுக்குவாரானாம்
செங்கற்பட்டுபாளையக்காரனும்கொலுவுக்குவாரானாம்
ஆச்சிநாய்க்கன்பொம்மிநாய்க்கன்கொலுவுக்குவாரானாம்
நகிருகோட்டைபாளையக்காரனும்கொலுவுக்குவாரானாம்
எட்டியாபுரத்துபாளையக்காரன்கொலுவுக்குவாரானாம்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரும்கொலுவுக்குவந்தாராம்
ஆற்காட்டுஜங்காதவழியில்வந்துநிறைந்தார்கள்
பாளயக்காரர்வந்தசேதியைநவாப்புகேட்டானாம்
சீமைக்குநாட்டார்வந்தசேதியைகாதில்கேட்டானாம்
சிங்கக்குட்டிபோல்பாளையக்காரனைக்கண்ணில்கண்டானாம்
அந்தவேளையிலென்னசெய்கிறான்நவாப்புசைதுல்லா

### நவாப்புபங்காருநாய்க்கனைசேனைகளுக்குகிஸ்தி தயார்செய்யச்சொல்லல்.

பெரியகணக்குபங்காருநாய்க்கனைகிட்டவரச்சொன்னான்
அண்ணாவாடாதம்பிவாடாபங்காருநாய்க்கா நீ
மூன்றுமாதத்திற்குகிஸ்திகட்டடாபங்காருநாய்க்கா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரருக்குவிருதுகட்டடா நீ
அறுபதுநாயிரம்ரேக்லாபீரங்கிதயார்பண்ணடா நீ
எண்பதுகோடிபாராதுப்பாக்கிதயார்பண்ணடா நீ
அதற்குத்தகுந்தகுண்டுமருந்துதயார்பண்ணடா நீ
ஐந்நூர்பேர்சமேதாருமாருக்குசேதிசொல்லடா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்கும்கிஸ்திகட்டடா நீ
வெள்ளைகூடாரம்பச்சைகூடாரம்தயார்பண்ணடா நீ
எண்பதுகோடிபாராசிப்பாய்முஸ்தீப்புபண்ணடா நீ
கணக்கில்லாதசேனைதளத்தைதயார்பண்ணடா நீ
எண்பதினாயிரம்துருப்புசிப்பாய்தயார்பண்ணடா நீ
அந்தவேளையிலென்னசெய்கிறான்பங்காருநாய்க்கனும்

ஆனால்நல்லதாகட்டுமென்றான்பங்காருநாய்க்கனும்
ஐம்பதுகோடிபீரங்கிமருந்துதயார்பண்ணினானும்
அறுபதனாயிரந்துருப்புகுதிரைதயார்பண்ணினானும்
எண்பதினாயிரம்பீரங்கிகுண்டுதயார்பண்ணினானும்
நூறாயிரம்ரேக்கலாகுண்டுதயார்பண்ணினானும்
இருபதினாயிரம்யானைகளையும்தயார்பண்ணினானும்
ஐம்பதினாயிரம்ஒட்டகங்களைத்தயார்பண்ணினானும்
எண்பதினாயிரம்பாலாஈட்டிகள்தயார்பண்ணினானும்
லட்சத்திருநூறுசிப்பாய்மாரைத்தயார்பண்ணினானும்
அவரவர்களுக்கேற்றவஸ்துகளெல்லாம்தயார்பண்ணினும்
அறுபத்தினாலுசண்டாமாமும்தயார்பண்ணினும்
பதின்காதவழிக்குப்பாவியிருக்குநவாப்புபாளையமும்
அந்தவேளையிலெல்லைபண்ணினான்பங்காருநாய்க்கனும
நவாப்பண்டையிலோடிவந்தான்பங்காருநாய்க்கனும்
சலாமையாசலாமையாநவாப்புசைதுல்லா
பாளையமெல்லாம்தயாராச்சுநவாப்புசைதுல்லா
மாலுக்குள்ளேபுகுந்தானையாநவாப்புசைதுல்லா
காலுக்குத்தமான்போட்டானையாநவாப்புசைதுல்லா
இடுப்புக்கச்சையிறுக்கிக்கட்டினான்நவாப்புசைதுல்லா
அங்கிதயான்போட்டானையாநவாப்புசைதுல்லா
தலைப்பாவெடுத்துத்தலையில்தரித்தான்நவாப்புசைதுல்லா
கலிக்கத்துருகட்டினானையாநவாப்புசைதுல்லா
பட்டாயுருவிகையில்பிடித்தான்நவாப்புசைதுல்லா
தனக்குவளர்த்தபட்டத்துயானையைஜல்தியில்வரச்சொன்னான்
ஆனைக்கொம்புக்குகத்திகட்டினான்நவாப்புசைதுல்லா
ஆனையிடைக்குச்சிலைபோட்டான்நவாப்புசைதுல்லா
ஆனையைச்சுற்றிமுகமல்கட்டினான்நவாப்புசைதுல்லா
யானையின்மீதிலம்பாரிகட்டினாநவாப்புசைதுல்லா
அம்பாரிக்குள்ளேதொட்டில்கட்டினாநவாப்புசைதுல்லா
யானையைத்தொட்டுசலாம்வாங்கினானவாப்புசைதுல்லா
யானைகாதிலுபதேசஞ்செய்தானவாப்புசைதுல்லா
வலதுகாலைதூக்கிகொடுத்ததுபட்டத்துயானையும்
இருப்புலக்கைகையிலிருக்குதுயானைக்காரனும்
உலக்கையைபோட்டுசலாம்வாங்குதுபட்டத்துயானையும்
அல்லாகுஅல்லாகுவென்றுயானையேறினானும்

நவாப்புசேனைகள் சண்டைக்குப் புறப்படுதல்

செஞ்சிக்கோட்டைக்குப்பயணமென்றுநகாரடிக்கதாம
கணகணகணகணகணகணவென்றுநகாருமுழங்குதுபார்

பளபளபளபளபளபளவென்றுபட்டாக்கள்மின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்றுதமுறுமுழங்குதுபார்
சரசரசரசரசரவென்றுசாரிபோகுதுகுதிரை
துந்துமிபேரிகை சில்லர்சில்லரிகொந்தோமெனவே
அவுதாருமாலைவீசுகிறார்கள்நவாப்புக்காரனும்
வெள்ளைவெண்சாமரைபோடுகிறார்கள்நவாப்புக்காரனும்
சரிகையுருமாலைவீசுகிறார்கள்நவாப்புக்காரனும்
நெருங்கிக்கொண்டுவாரானையாநவாப்புசைதுல்லா
பதிங்காதவழிக்குப்பாவியிருக்குதுநவாப்புபாளையமும்
எள்ளுபோட்டால்எள்ளுவிழாதுநவாப்புபாளையத்தில்
கிள்ளினமண்ணுகீழேவிழாதுநவாப்புபாளையத்தில்
அந்தவேளையிலெங்கேவாறார்நவாப்புசைதுல்லா
திமிரிக்கோட்டையைத்தேடிவாறார்நவாப்புசைதுல்லா
ஒரேதினத்தில்வந்திறங்கினானையாநவாப்புசைதுல்லா
பங்காருநாய்க்கனைப்பக்கமழைக்கார்நவாப்புசைதுல்லா
சம்பளம்போடுராஸ்துகள்போடுபங்காருநாயக்காநீ
இறங்கிச்சம்பளங்கொடுத்தானையாபங்காருநாயக்கனும்
தண்டுக்குராஸ்துபோட்டானையாபங்காருநாயக்கனும்
அவ்விடம்விட்டுபுறப்பட்டானையாநவாப்புசைதுல்லா
ஆரணிகோட்டைகாண்டிவருகிறான்நவாப்புசைதுல்லா
அன்றிராத்திரிஅங்கேயிருந்தான்நவாப்புசைதுல்லா
அங்கிருந்துசென்றானையாநவாப்புசைதுல்லா
போடுபோடென்றுவாறானையாநவாப்புசைதுல்லா
எரிஞ்சிகொண்டுவாறானையாநவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டைமண்ணைமிதித்தான்நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டைக்கைந்துகாதவழிதேவனூருபேட்டை
தேவனூர்பேட்டையோரத்திலேசங்கராபாணியாறு
சங்கராபாணிகரையினில்வந்ததுநவாப்புபாளையமும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறார்நவாப்புசைதுல்லா
அண்ணுவாடாதம்பிவாடாபங்காருநாயக்காநீ
தண்டுசேனையைப்பிரித்துப்போடடாபங்காருநாயக்காநீ
தண்டுகடைசியில்கூடாரம்போடடாபங்காருநாயக்காநீ
தண்டுக்குமுன்னேமோர்சாபோடடாபங்காருநாயக்காநீ
மோர்சாமேலேபீரங்கியேற்றுபங்காருநாயக்காநீ
குருப்புகுதிரைசுற்றிலும்வையும்பங்காருநாயக்காநீ
ஒருபளுக்காசலுதியாய்த்திரும்பங்காருநாயக்காநீ
அந்தப்படியேயுத்தாரங்கொடுத்தான்நவாப்புசைதுல்லா
உத்தாரங்கொடுத்தநிமிஷநேரத்தில்பங்காருநாயக்கனும்
சல்திசல்தியாய்பளுத்தாதீர்த்தார்தேவனூர்பேட்டைமேலே
அந்தப்பளுத்தாகாதிலேகேட்டார்நவாப்புபாளையமும்

மரங்கள்மட்டைகள்தறித்துப்போடுகிறார்நவாப்புபாளையமும்
தேவனூர்பேட்டையைபிடித்துப்போடுகிறார்நவாப்புபாளையமும்
இனியில்லாதகொள்ளையிடுகிறார்நவாப்புபாளயமும
அந்தவேளையிலென்னசெய்கிறார்ராசாதேசிங்கு
புதுசெஞ்சியிலேபூசைசெய்கிறார்ராசாதேசிங்கு
பழஞ்செஞ்சியிலேகார்பார்பண்ணுகிறார்சிற்றப்பராசாவும்
கார்பார்பண்ணுகிறசிற்றப்பராசனகாதிலேகேட்டிடவே
அலங்கத்துமேலேயேறிப்பார்த்தான்சிற்றப்பராசாவும்
பாளையம்வந்ததைசககண்ணாலேகண்டான்சிற்றப்பராசாவும்
கிடுகிடுவென்றுபயந்துநடுங்கிகீழேவிழுந்தாராம்
கீழேவிழுந்தசிற்றப்பராசாதட்டென்றெழுந்தாராம்

### சிற்றப்பராசன்தேசிங்குராசனிடத்தில்வந்துசொல்லல்

மைந்தனருகிலோடியேவந்தான்சிற்றப்பராசாவும்
அந்தவேளையில்பூசைசெய்கிறான்ராசாதேசிங்கு
காஞ்சிவரதனைசட்டிரங்கனைப்பூசைபண்ணுகிறானும்
ஸ்ரீஅரிகோவிந்தாவென்றுபூசைபண்ணுகிறானும்
அரிநமோநாராயணாவென்றுபூசைபண்ணுகிறானும்
கண்ணைமூடிபூசைசெய்கிறான்ராசாதேசிங்கு
பூசைமுகத்தில்வந்துநின்றான்சிற்றப்பராசாவும்
என்னபூசைபண்ணினாயடாமகனேதேசிங்கு
உன்பூசைமுகத்தில்இடிவிழுந்ததுமகனேதேசிங்கு
கோட்டையைச்சுற்றிவளைந்திருக்குதுநவாப்புபாளயமும்
பேட்டைக்குப்போகவழியேயில்லைமகனேதேசிங்கு
பாதிபூசையைத்தள்ளிப்போடடாமகனேதேசிங்கு
கோப்புருபணத்தைகட்டியனுப்புமகனேதேசிங்கு
இந்தச்சேதியைகாதில்கேட்டான்ராசாதேசிங்கு
மூடினகண்ணைதிறந்துபார்த்தான்ராசாதேசிங்கு

### தேசிங்குராசன் சிற்றப்பராசாவுக்குச்சொல்லல்.

என்னபேச்சுபேசினீரையாசிற்றப்பராசாவே
ஆறுபதுவயதுசென்றவுமக்குஅறிவுகொஞ்சமில்லை
பூசைமுகத்தைக்கெடுக்கவேண்டாம்சிற்றப்பராசாவே
அரைக்கால்நாழிபொறுத்துக்கொள்ளும்சிற்றப்பராசாவே
அரைக்கால்நாழிபொருத்துக்குதிரையைவதயார்பண்ணச்சொல்லும்
வெள்ளரிக்காயவீசினாற்போல்வீசிப்போடுகிறேன்
பத்தல்பத்தலாய்கிழித்துப்போடுகிறேன்பாளயங்களெல்லாம்
சக்கைசக்கையாய்சிதைத்துப்போடுகிறேன்சேனைகளையெல்லாம்
தலைதலையாய்யுருட்டிப்போடுகிறேன்தளங்களையெல்லாம்
கதறிபதறிச்சிதறிட்டோடகரிகளைவாட்டுகிறேன்
குய்யோமுறையெனக்கூவிமாண்டிடகுதிரைகளைவாட்டுகிறேன்
இந்தப்படியாய்செய்யாமற்போனால்என்பேர்தேசிங்கா
டாறுடாறாய்கிழித்துப்போடுகிறேன்நவாப்பையானாலும்

ஆனால்நல்லநாகட்டுமென்றான்சிற்றப்பராசாவும்
அந்தவேளையிலென்னசெய்கிறான்ராசாதேசிங்கு
கண்ணைமூடிப்பூசைபண்ணுகிறான்ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்சுபங்கிதுரைதானும்
திருவண்ணாமலைசுபங்கிதுரையுப்நவாப்புமுன்னேவந்தான்

சுபங்கிதுரை நவாப்பைக்கேட்கல்.

சலாமையாசலாமையாநவாப்புமுன்னேவந்தான்
நானொருசேதிசொல்லுகிறேன்சேளும்நவாப்புசைதுல்லா
இரண்டுநாழியிற்பிடித்துக்கொடுக்கிறேன்செஞ்சிக்கோட்டையை
மூவாயிரம்வீடுகளிருக்குதேவனூர்பேட்டையில்
அரைக்கால்நாழிகொள்ளைகொடுமையாநவாப்புசைதுல்லா
நிமிஷநேரத்திற்பிடித்துதருகிறேன்நவாப்புசைதுல்லா
மாறுமாறென்றுஉத்தாரங்கொடுத்தான்நவாப்புசைதுல்லா
மூவாயிரங்குதிரைகளுடனேகொள்ளைக்குப்புறப்பட்டான்



சுபங்கிதுரை தேவனூரைக் கொள்ளையிடுதல்

தேவனூருக்குள்ளேபுகுந்தானையாசுபங்கிதுரைதானும்
இனியில்லாதகொள்ளையிடுகிறான்சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துப்போடுகிறான்சுபங்கிதுரைதானும்
மாடமண்டபமிடித்துப்போடுகிறான்சுபங்கிதுரைதானும்
ஆண்சிறைபெண்சிறைதள்ளிபிடிக்கிறான்சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுமடக்கிப்பிடிக்கிறான்சுபங்கிதுரைதானும்
பெட்டிபேழைகளெடுத்துடைக்கிறான்சுபங்கிதுரைதானும்
பொன்னுவெள்ளிகள்மூட்டைகட்டுகிறார்சிப்பாய்துரைமாரும்
அப்படிக்குச்சிறையழித்துப்போடுகிறான்சுபங்கிதுரைதானும்
கொள்ளையடித்துவெளியேவந்தான்சுபங்கிதுரைதானும்

நவாப்புபாளையம்வந்துசேர்ந்தான்சுபங்கிதுரைதானும்
இந்தப்படியிருக்கிறானையாநவாப்புசைதுல்லா
தேவனூரிலேயிருந்தஜெனங்கள் திகைத்தோடினார்கள்
குழந்தைகுட்டியைவாரிக்கொண்டுகோட்டையோடினார்கள்
காடுமலைகள்செடிகளெல்லாங்கடந்தோடினார்கள்
கோவென்றசத்தமாச்சுதையாசெஞ்சிகோட்டைவெளியில்
அந்தவேளையிலென்னபண்ணுகிறார்குடியான்மார்களும்
தலையினிற்கையைவைத்தழுகிறார்குடியானமார்களும
கோட்டைக்குள்ளேவந்தாறையாகுடியானமார்களும்
அந்தவேளையிலென்னசெய்கிறான்ராசாதேசிங்கு
அரிநமோநாராயணாவென்றுபூசைபண்ணுகிறான்
ஸ்ரீநந்தாகோவிந்தாவென்றுதியானம்பண்ணுகிறான்
சங்குசக்கரகோதண்டாவென்றுதோத்திரம்செய்கிறான்
மங்கைலட்சுமிமணாளாவென்றுமனதிலெண்ணுகிறான்
பூசைமுகத்திலேவந்துநின்றார்குடியானமார்களும்

### குடிகள் தேசிங்குராஜனிடத்தில் முறையிடல்

என்னபூசைபண்ணுகிறீரையாராசாதேசிங்கு
தேவனூரிலேகொள்ளையடிக்கிறான்சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துப்போட்டானேசுபங்கிதுரைதானும
மாடுகன்றுகளைமடக்கிப்போட்டானேசுபங்கிதுரைதானும்
அகப்பட்டசிறையழித்துப்போட்டானேசுபங்கிதுரைதானும்
வீடுபோச்சுதுவாசல்போச்சுதுராசாதேசிங்கு
பொட்டிபோச்சுதுபேழைபோச்சுதுராசாதேசிங்கு
பெண்சாதிபோச்சுதுபிள்ளைபோச்சுதுராசாதேசிங்கு
சொக்கம்போச்சுதுரோசனம்போச்சுதுராசாதேசிங்கு
நாங்களென்னமாய்ப்பிழைக்கப்போகிறோம்ராசாதேசிங்கு
கண்கள்நிறையதண்ணீர்விட்டார்குடியானமார்களும்
ஐயாநாங்களென்னசெய்வோம்ராசாதேசிங்கு
இத்தனைநாளும்சீராய்ப்பிழைத்தோம்ராசாதேசிங்கு
இன்றையகஸ்தியென்னசொல்லுவோம்ராசாதேசிங்கு
தாமரையிலையிற்தண்ணீர்போலதவிக்குறோமையா
ஊரையுமெங்களையுங்காக்கவேணும்ராசாதேசிங்கு
கதறியழுதுபுலம்புறாரையாகுடியானமார்களும்
இந்தச்சேதிகாதிலேகேட்டான்ராசாதேசிங்கு
மூடினகண்ணைதிறந்துபார்த்தான்ராசாதேசிங்கு

### தேசிங்கு குடிகளுக்கு தேறுதல் சொல்லுதல்.

பதறவேண்டாம்பதறவேண்டாம்குடியானமார்களே
பூசைமுகமுமுடியுமட்டுங்குடியானமார்களே
என்சீமையில்தேவனூர்பேட்டையொறுகொள்ளைபோச்சுது
நவாப்புசீமையடங்கலுங்கொள்ளைஉங்களுக்குவாங்கித்தாறேன்

நமதுசினமயில்தமிழ்ச்சிறையொன்றுபோச்சுது
துலுக்கன்சிறையைப்பிடித்துத்தானோன்குடிய'னமார்களே
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளைநான்வாங்கித்தாரோன்
ஒன்றுக்குநீங்களஞ்சவேண்டாம்குடியானமார்களே
பூசைமுகத்தைக்கெடுக்கவேண்டாம்குடியானமார்களே
ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறம்போனார்கள்
கண்ணைமூடிபூசைபண்ணுகிறான்ராசாதேசிங்கு
அந்தவேளையிலெவனபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குராசன்தாயாதியையாதன்சிங்குராசாவும்
ஒற்றைகுதிரைபோட்டுக்கொண்டுஒடிவந்தானெகிரோ
இராசாமுன்னேவந்தானையாதன்சிங்குராசாவும்

தன்சிங்குராசன் தேசிங்குராசன் முன்வந்துசொல்லல்.

என்னபூசைபண்ணிநீரையாராசாதேசிங்கு
தேவனூறுகொள்ளையாய்போச்சுதுராசாதேசிங்கு
கோட்டையேறிகுதிக்கிறானையாநவாப்புபாளையமும்
இரங்கர்கோவிலில்புகுந்தானையாநவாப்புபாளையமும்
அந்தப்படிக்குசொல்லிநின்றான்தன்சிங்குராசாவும்
இந்தச்சேதிகாதிலேகேட்டான்ராச தேசிங்கு
கண்ணைமுழித்துப்பார்த்தானையாசிப்பாய்தேசிங்கு
பாதிப்பூசையைத்தள்ளிப்போட்டான்ராசாதேசிங்கு
கனைத்துக்கதுபபியெழுந்தானையாசிப்பாய்தேசிங்கு
இரங்கர்கோவிலில்துலுக்கன்புகுந்கால்யெனக்கென்னபூசை
துலுக்கனைவெட்டிபூசைபண்ணுகிறேன்தன்சிங்குராசாவே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்தன்சிங்குமகாராசன்
ஆனால்நல்லதாகட்டுமென்றான்தன்சிங்குமகாராசன்
அந்தவேளைக்குயென்னபண்ணுகிறார்ராசாதேசிங்கு
சிங்காரமாலில்வந்தானையாராசாதேசிங்கு
திருமண்பெட்டியைகையிலெடுத்தான்ராசாதேசிங்கு
முத்துப்போலேதிருமணியங்கேநெற்றியிலிட்டானும்
காலுக்குகுடுத்தினிபோட்டானையாராசாதேசிங்கு
இடுப்பில்கச்சைசயிருக்கிக்கட்டினான்ராசாதேசிங்கு
சரிகையுறுமாலைதலையிற்கட்டினான்ராசாதேசிங்கு
மாருக்குக்கவசம்போட்டானையாசிப்பாய்தேசிங்கு
அங்கியெடுத்துமேலுக்குப்போட்டான்ராசாதேசிங்கு
கலிக்கத்துருயெடுத்துக்கட்டினான்ராசாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசைகத்திகையில்பிடித்தானும்
எழுதுலாம்பரிசைபாலாகையில்பிடித்தானும்
சிங்கம்போலேயுட்கார்ந்தானையாராசாதேசிங்கு
செயராமுகெங்காராமுகொலுவுக்குவந்தாராம்
சிற்றப்பதுரைதாணிசிங்குகொலுவுக்குவந்தாரம்
நத்தர்சிங்குகோபாலசிங்குகொலுவுக்குவந்தாராம்

ராமுசிங்குலட்சுமணசிங்குகொலுவுக்குவந்தாராம்
ராமுதாரிலட்சுமணதாரிகொலுவுக்குவந்தாராம்
மான்சிங்குகிரிபுசிங்குகொலுவுக்குவந்தாராம்
ஓரேகும்பலாய்க்கூடினாரையாமுந்நூறுசனமுந்தான்
ராமுராமுரேசிதாராமுமோராசாதேசிங்கு
பதில்சலாமுங்கொடுத்தானையாசிப்பாய்தேசிங்கு
சிப்பாய்மாரைக்கண்ணுகண்டான்ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையாராசாதேசிங்கு
ஐயாகேளும்ஐயாகேளும்சிற்றப்பாராசாவே
எண்பதினாயிரம்குதிரை இருக்குதுநவாப்புக்கானாலும்
லட்சம்பேர்சிப்பாயிருக்குறார்நவாப்புக்கானாலும்
மூன்னூறுகுதிரையெனக்கிருக்குதுசிற்றப்பாராசாவே
இந்தகுதிரைஎனக்குப்போதாதே சிற்றப்பாராசாவே

தேசிங்கு மோவுத்துக்காரனை யழைப்பிக்கச்சொல்லல்,

மூன்னூறுகுதிரைக்குத்துடியானவன்ஒத்தைகுதிரைக்காரன்
வழுதாவூரிலிருக்கிறானையாமாப்பிள்ளைராயனும்
இரண்டுநிமிஷத்திலழைப்பிக்கவேணும்சிற்றப்பாராசாவே
சல்திசல்தியென்றுசொன்னான்ராசாதேசிங்கு
ஆனால்நல்லதாகட்டுமென்றான்சிற்றப்பாராசாவும்
ஓலையெழுதிக்கையிலேகொடுத்தான்சிற்றப்பாராசாவும்
மூன்றுபேர்அர்க்காருமாரைசலுதியிலழைத்தானும்
ஓலையெடுத்துக்கையிலேபிடித்தார்அர்க்காருமார்களும்
சல்திசல்தியென்றுசொன்னான்சிற்றப்பாராசாவும்
சலாம்வாங்கித்திரும்பினாரையா அர்க்காருமார்களும்
போடுபோடென்றுபோறாரையா அர்க்கார்மார்களும்
செஞ்சிக்கோட்டைக்கும்வழுதாவூருக்கும்முக்காதவழிதூரம்
மூன்றுநாழியில்போய்ச்சேர்ந்தார்கள் அர்க்காருமார்களும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்மோவுத்துக்காரனும்
கலியாணமுங்கூடியிருக்குதுமோவுத்துக்காரனுக்கு
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறான்மோவுத்துக்காரனும்
கலியாணப்பந்தல்சோடித்திருக்குதுமோவுத்துக்காரனுக்கு
கர்னாபூரிபாங்காமுழங்குதுவழுதாவூருக்குள்ளே
மஞ்சள்கங்கணமுங்கட்டியிருக்கிறான்மோவுத்துக்காரனும்
சரிகையுடுப்புதரித்திருக்கிறான்மோவுத்துக்காரனும்
மேளதாளம்முழங்குதுபாருமோவுத்துக்காரனுக்கு
தாலியெடுத்துக்கையிலேபிடித்தார்மோவுத்துக்காரனும்
அல்லாவே அல்லாவேயென்றுதாலிகட்டப்போறான்
கோவிந்தகோவிந்தாவென்றுதாலிகட்டப்போறான்
ராமாராமாவென்றுசொல்லிதாலிகட்டப்போறான்

அந்தவேளையிலென்னசெய்கிறார் அர்க்காருமார்களும்
ராமுராமுசோராமுராமுரோமோவுத்துக்காரனே
உங்கள்ராசாசினேகிதக்காரன்ஓலையனுப்பிவைத்தார்
இந்தஓலையைவாசித்துப்பார்த்துஎங்களையனுப்புமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான்மோவுத்துக்காரனும்
இடதுகையில்ஓலைவாங்கினான்மோவுத்துக்காரனும்
ஓலையைப்பிரித்துப்பார்த்தானையாமோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையாமோவுத்துக்காரனும
மண்டிபோட்டுஎழுந்துட்கார்ந்தான்மோவுத்துக்காரனும்
தாளியைக்கொண்டுதட்டிலேவைத்தானமோவுத்துக்காரனும்
பட்டாவுருவிகையில்பிடித்தான்மோவுத்துக்காரனும்



மோவுத்துக்காரன் கலியாணப்பந்தலிலுள்ளவர்களை
செலவு கேட்கல்.

சலாமையாசலாமையாசபையிலுள்ளபேரே
சந்தோஷமாகசெலவுதாரும்சபையிலுள்ளபேரே
அண்ணமாரேதம்பிமாரேடலாய்த்துதுரைமாரே
பச்சைப்பந்தலில்சுகமாயிருங்கள்பட்டாணிதுரைமாரே
கத்திமுனையிலேசோறுதின்கிறகர்நாடதுரைமாரே
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும்சபையிலுள்ளபேரே
நானும்போறேன்நவாப்புதண்டுக்குள்ளேநல்லசண்டைபண்ண
எதிராளியானநவாப்புதண்டுஎதிரிலேவிழுந்ததாம்
பகையாளியானநவாப்புதண்டுபக்கத்தில்விழுந்ததாம்
எதிராளியானநவாப்பின்மேல்பிடிப்புக்கட்டிபோறேன்
சத்துருவானநவாப்பின்மேலேசண்டைக்குப்போகிறேன்
ஆற்காட்டிலுள்ளவீதிகளையெல்லாம் அத்துவஸ்தமிகப்பண்ணி
நவாப்பைவெட்டித்தாவிசட்டுகிறேன்பட்டாணிதுரைமாரே
நானிப்போதேபோய்வருகிறேன்சபையிலுள்ளபேரே
என்று-சலாம்வாங்கித்திரும்பினாரையாமோவுத்துக்காரனும்

அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள்அவனைபெற்றதாயும்
சையத்சாயபும்தாயாருமாகசலுதியோடிவந்தார்
எதிரினில்நின்றமகனைக்கண்டுஎந்திமுத்தமிட்டாள்
மகனிடமுகத்தைக்கண்ணாலேகண்டுமாதாஎன்னசொல்வாள்
வயிற்றிற்பத்துமாதம்சுமந்துமகனைப்பெற்றேனே
ஈயெறும்புஅண்டவொட்டாமல்இருந்துகாத்தேனே
தரையில்விட்டால்மண்படுமென்றுதாவிவளர்த்தேனே
மெத்தபத்திசாலியென்றுமேன்மையுற்றேனே
சற்றும்யோசனையெண்ணாமல்நீசண்டைக்குபோறேனென்றாய்
என்னகாரியம்முழுகிப்போச்சுதுஎந்தன்கண்மணியே
சந்தனம்பூசிசண்டைக்குப்போனால்சல்திகுண்டுபாயும்
கங்கணங்கட்டிசண்டைக்குப்போனால்கடுககுண்டுபாயும் [ன்
மஞ்சலுடுப்புடன்சண்டைக்குப்போனால் மகனைக்காணமாட்டே
தாலிகட்டிவிருந்துபோசித்துசந்தோஷமாயிருந்து
வந்தபேருக்குமரியாதைசெய்துமகிழ்வாயனுப்பிவிட்டு
இன்றைக்கிருந்துநாளைக்குப்போடாஎந்தன்கண்மணியே
அந்தப்பேச்சைகாதில்கேட்டான்மோவுத்துக்காரனும்
அம்மாகேளும்அம்மாகேளும்என்னைப்பெற்றதாயே
என்னிடராசசினேகிதக்காரன்எழுதியனுப்பினாரே
நவாப்புசெனமும்செஞ்சியில்வந்துஅலங்கமேறினாராம்
இரண்டுநாழியில்நவாப்பைவெட்டிரத்தக்களரிபண்ணி
ஆர்க்காடுநகர்வீதியையெல்லாம்அத்துவானம்பண்ணி
செஞ்சிராசனுக்குமகுடம்சூட்டிமய சிறையைக்கொண்டுவாறேன்
நவாப்புமகளைதாலிகட்டுகிறேஎன்னைப்பெற்றதாயே
கட்டாமற்போனால்நவாப்புகையில்கடுகசெத்துப்போறேன்
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவுஇருக்குதுதலைமேலே
பிள்ளைபிறந்தாசண்டைமுகத்தில்பேரெடுக்கவேண்டும்
மைந்தன்பிறந்தாலன்னங்கொடுத்துமகிழ்ச்சிபெறவேண்டும்
உந்தன்வயிற்றில்பிள்ளைபிறந்துஊதாரியாவேனோ
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுஎன்னைப்பெற்றதாயே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குதுபெற்றமாதாவே
இரணக்களத்திற்செத்துப்போனால்நல்லபதவியுண்டு
கத்திமுனையிற்சாவேனேயானாற்கனகபதவியுண்டு
ஈட்டிமுனையிற்சாவேனேயானால்இனியபதவியுண்டு
சண்டைமுகத்திற்செத்தேனேயானால்சல்திமோட்சமுண்டு
குண்டுமுகத்திற்செத்தேனேயானால்கோடிலாபமுண்டு
மருந்துபுகையிற்சாவேனேயானால்மகாபதவியுண்டு

என்றைக்கும்பேரிருக்கவேண்டும்யிந்தவுலகினிலே
புல்லும்பூமியுள்ளவரைக்கும்பேரெடுக்கவேண்டும்
சண்டைகெலித்துவந்தானேயானால்தாலிகட்டுகிறேன்
போரைக்கெலித்துவந்தேனேயானால்புகழ்ந்துகட்டுகிறேன்
மாண்டுமடிந்துபோவேனேயானால்மனதுகலங்காதே
சந்திரசூரியருள்ளவரைக்கும்தாயேபெற்றவளே
வருஷமொருநாள்திருநாள்செய்யமனுவிகேட்கிறேன்
உற்றுருறவோருள்ளவரைக்கும்உருசுசெய்யவேணும்
போய்வாரேன்போய்வாரேனிப்போபுன்னியவதிதாயே
அந்தப்பேச்சிகாதில்கேட்டுஅலறிவிழுந்தாராம்
மைத்தன்பேச்சுகாதில்கேட்டுமண்மேல்விழுந்தாராம்
கங்கணங்கையைப்பார்த்துப்பார்த்துக்கதறியழுதாராம்
மஞ்சலுடுப்பைபார்த்துபார்த்துமயங்கியழுதாராம்
முகத்திலொளியைக்கண்டுவருந்திமூர்ச்சையானாராம்
கலியாணப்பெண்ணைக்கண்டுமெலிந்துகலங்கியழுதாராம்
இந்தவிதிச்சோஇவ்வகைசெய்தோமென்றுநலிந்தாராம்
சந்தோஷகாரியம்தடங்கலாச்சேனத்தயங்கியழுதாராம்
பந்தலைவிட்டுவெளியிலேவந்தான்மோவுத்துக்காரனும்
குதிரைலாயத்துக்குவந்தானையாமோவுத்துக்காரனும்
முந்நூறுகுதிரைகட்டியிருக்குதுகுதிரைலாயத்தில்
முந்நூறுகுதிரைக்குமுடியானகுதிரைநீலவேணிகுதிரை
நீலவேணியருகில்வந்தானையாமோவுத்துக்காரனும்
சமூத்துக்கயிற்றைகால்கயிற்றைகத்தியால்வெட்டினானும்
நெற்றிமயிரைப்பிடித்தேறினையாநீலவேணிமேலே
பிடித்தேறினமோவுத்துக்காரனைகண்ணாலேகண்டது
பரதநாட்டியமாடிவருகுதுநீலவேணிகுதிரை
கண்ணிற்கண்டான்கோபமாச்சுதுமோவுத்துக்காரனுக்கு
கோபத்திலேசியிட்டாகொடுத்தான்நீலவேணிகுதிரை
பின்னாலேபிழுத்துப்போகுதுபாருநீலவேணிகுதிரை
பின்னாலேபோவதைக்கண்ணாலேகண்டான்மோவுத்துக்காரனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான்மோவுத்துக்காரனும்
என்னயோசனைபண்ணினாயடாநீலவேணியே நீ

நவாப்புமேலேசண்டைக்குப்போறேன்நீலவேணியே
சண்டைகெலிக்குவந்தேனேயானால்நீலவேணியேநான்
தங்கத்தாலேசீணிபோடுகிறேன்நீலவேணியேனான்
என்று-நீலவேணிக்குசலாம்வாங்கினான்மோவுத்துக்காரனும்
சலாம்வாங்கிஏறினானையாநீலவேணிமேலே
கயிற்றையவிழ்க்கநேரமில்லைமோவுத்துக்காரனுக்கு
காலுகயிற்றைகழுத்தின்கயிற்றையவிழ்க்கநேரமில்லை
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான்நீலவேணிக்கு
சிமிட்டாகொடுத்தநிமிஷநேரத்தில்நீலவேணிகுதிரை
தாண்டிதாண்டிதலைமண்டலங்கொண்டதுநீலவேணிகுதிரை
ஆறுகுளங்கள்தாண்டிவிழுகுதுநீலவேணிகுதிரை
மாடமண்டபம்தாண்டிவிழுகுதுநீலவேணிகுதிரை
கூடகோபுரந்தாண்டிவிழுகுதுநீலவேணிகுதிரை
போடுபோடென்றுபோகுதையாநீலவேணிகுதிரை
லகானுமில்லைசீணியுமில்லைநீலவேணிக்கு
குறடாயில்லைசேர்பந்தில்லைநீலவேணிக்கு
கால்கயிற்றோடேயோடிவருகுதுநீலவேணிகுதிரை
கழுத்துகயிற்றோடேயோடிவருகுதுநீலவேணிகுதிரை
பெரியபெரியகல்லு ளெல்லாம்புரட்டிப்போகுதுபார்
சின்னசின்னகல்லுகளெல்லாஞ்செந்தூளாகுதுபார்
காடுமலைகள்செடிகளெல்லாங்கலங்கிடுங்குதுபார்
காற்றுப்போலேபறந்துவருகுதுநீலவேணிகுதிரை
மேகம்போலபறக்குதையாநீலவேணிகுதிரை
குதிரைகளைப்புதெரிந்தநாழிகைக்குஅவனேதெரியவில்லை
கத்திமின்னல்தெரிந்தநாழிகைக்குஅவனேதெரியவில்லை
எரிந்துகொண்டுவாறானேயாமோவுத்துக்காரனும்
கோட்டையைச்சுற்றிவளைந்திருக்குதுநவாப்புபாளையமும்
நவாப்புபாளையங்கண்ணாலேகண்டான்மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானேயாமோவுத்துக்காரனும்
பாளையங்கிட்டநெருங்கினானேயாமோவுத்துக்காரனும்
பாளையஞ்சுற்றிப்போவோமென்றுவிரண்டுநாழிசெல்லும்
பாளையங்குறுக்கேபுகுந்தானேயாமோவுத்துக்காரனும்
ஒற்றைகுதிரையைக்கண்ணாலேகண்டார்நவாப்புபாளையத்தில்
முன்னூறுதுருப்புகுதிரையுடனேமுன்னேயோடிவந்தார்
முன்னூறுகுதிரையைக்கண்ணாலேகண்டான்மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான்நீலவேணிக்கு
கறகறவென்றுசுயலுதுபாருநீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிக்குமுன்னூறுகுதிரையும்
காணகாணபாய்விழுந்துபோச்சுதுமுன்னூறுகுதிரையும்

குதிரைவிழுந்ததைக்கண்ணாலேகண்டதுநவாப்புபாளையமும்
அல்லோகல்லோமாகுதையாநவாப்புபாளையமும்
கட்டியிருந்தகுதிரைகளெல்லாம்அறுத்துகொண்டோடுது
சோறுதிண்கிறசிப்பாய்மாரும்சுருட்டியோடுரார்கள்
பாராயிருந்தசிப்பாய்மாரும்பதுங்கியோடுரார்கள்
ஓடுகிறபேரைக்கண்ணாலேகண்டான்மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கி
நடுவேவிட்டுபிளந்தானையாநவாப்புபாளையத்தை
இவனைஎதிர்ப்பாரொருவருமில்லைநவாப்புபாளையத்தில்
இரண்டுநாழியில்வந்துசேர்ந்தான்செஞ்சிகோட்டைக்கு
சிங்காரமாவில்வந்தானையாமோவுத்துக்காரனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான்மோவுத்துக்காரனும்
ராசபேட்டிக்குவந்தானையாமோவுத்துக்காரனும்



மோவுத்துக்காரன் தேசிங்குராசனைக்காணல்.

மண்டிபோட்டுசலாம்வாங்கினான்மோவுத்துக்காரனும்
என்னகாரியம்பண்ணினீரையாராசாதேசிங்கு
இத்தனைமறதியுமக்கேனையாராசாதேசிங்கு
இரண்டுநாழிக்குமுன்னேசொன்னால்ராசாதேசிங்கு
இத்தனைநாழிநவாப்புசெனமிங்கேயிருக்குமா
சல்திசல்திபுத்தாரந்தாரும்ராசாதேசிங்கு
இந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையாராசாதேசிங்கு
கண்ணாலேகண்டான்கோபமாச்சுதுராசாவுக்கானாலும்
என்னகாரியம்பண்ணினாயடாமோவுத்துக்காராநீ
கலியாணவுடுப்புபோட்டிருக்கிறாய்மோவுத்துக்காராநீ
கங்கணங்கையிற்கட்டியிருக்கிறாய்மோவுத்துக்காராநீ

கஸ்தூரிசந்தனம்பூசியிருக்கிறாய்மோவுத்துக்காராநீ
தாலிகட்டிவந்தாயோ இல்லையோமோவுத்துக்காராநீ
சல்திசல்திசொல்லுமென்றான்ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்மோவுத்துக்காரனும்
என்னபேச்சுபேசினீரையாராசாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்மாருக்குப்பெண்டாட்டியென்னத்திற்கு
நானொருபெண்ணைத்தாலிகட்டுவேனோராசாதேசிங்கு
நவாப்பைவெட்டிநவாப்புமகளைத்தாலிகட்டவேணும்
ஆற்காட்டிலேகலியாணம்பண்ணுகிறேன்ராசாதேசிங்கு
என்கலியாணத்துக்குநீர்வரவேணும்ராசாதேசிங்கு
நல்லதிந்தப்பேச்சிருக்கட்டும்ராசாதேசிங்கு
நீர்வாரீரோநான்போகட்டோராசாதேசிங்கு
சல்திசல்தியுத்தாரந்தாரும்ராசாதேசிங்கு
கனைத்துக்கதும்பிஎழுந்தானையாமோவுத்துக்காரனும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான்ராசாதேசிங்கு
சந்தோஷம்வந்துமூண்டுகொண்டதுராசாவுக்கானாலும்
மோவுத்துக்காரனைக்கிட்டவழைத்துக்கையைப்பிடிததானும்
கையைப்பிடித்துத்தழுவினானையாராசாதேசிங்கு
தழுவிமுகத்தைத்துடைத்தானையாராசாதேசிங்கு
ஐயாகேளும்ஐயாகேளும்மோவுத்துக்காரனே
ஒருவனுய்ச்சண்டைபோடவேண்டாம்மோவுத்துக்காரனே
நானுங்கூடவருகிறேனப்பாமோவுத்துக்காரனே
இன்னொருசேதிசொல்லுகிறேன்கேளும்மோவுத்துக்காரனே
நான்-கலியாணம்பண்ணிமூன்றுவருஷம்மோவுத்துக்காரனே
பெணசாதிமுகத்தைப்பார்த்துவாரேன்மோவுத்துக்காரனே
ஆனால்நல்லதாகட்டுமென்றானமோவுத்துக்காரனும



தேசிங்குராசன் சிற்றப்பாராசன்முன் வந்துசொல்லல்.

அந்தநாழிகைக்கோடிவாறான்ராசாதேசிங்கு
சிற்றப்பாராசாகிட்டேவந்தான்சிப்பாய்தேசிங்கு
ஐயாகேளும்ஐயாகேளும்சிற்றப்பாராசாவே
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன்சிற்றப்பாராசாவே
கலியாணம்பண்ணிமூலையில்வைத்தேன்ராணியையானாலும்
நான்-பெண்சாதிமுகத்தைப்பார்த்துப்போறேன்சிற்றப்பாராசாவே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்சிற்றப்பாராசாவும்
என்னகாரியம்பண்ணினாயடாகுழந்தைதேசிங்கு
நீபிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
இராணிபிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
உன்-குதிரைபிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
சண்டைபிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
இந்த-நாளும்பிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
இன்றைக்குநீசண்டைக்குபோனால்மகனேதேசிங்கு
மாருக்குக்காயம்தைக்குமோடாமகனேதேசிங்கு
இன்றைக்கிருந்துநாளைக்குபோடாமகனேதேசிங்கு
சண்டைஜெயித்துவருவாயோடாகுழந்தைதேசிங்கு
அந்தப்பேச்சுக்காதிலேகேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையாசிப்பாய்தேசிங்கு
என்னபேச்சுப்பேசினீரையாசிற்றப்பாராசாவே
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்சிற்றப்பாராசாவே
இத்தனைநாளும்நவாப்புசனங்களிங்கேவந்ததோ
(இப்போ) கோட்டையைச்சுற்றிவளைத்திருக்குதுநவாப்புபாளயமும்
பேட்டையைக்கொள்ளையடித்தானையாசிற்றப்பாராசாவே
இரங்கர்கோயிலில்துலுக்கன்புகுந்தால்சும்மாயிருப்பேனோ
டாறுடாறாய்க்கிழித்துப்போடுறேன்நவாப்புபாளயத்தை
நவாப்பைவெட்டிசெயிஞ்சிக்குவாறேன்சிற்றப்பாராசாவே
இராசகுலத்தில்நானும்பிறந்தேன்ரோஷக்காரனாக
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுசிற்றப்பாராசாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குதுசிற்றப்பாராசாவே
(நான்)முன்வைத்தகாலைப்பின்வைப்பேனோசிற்றப்பாராசாவே
பெண்சாதிமுகந்தைப்பார்த்துப்போகிறேன்சிற்றப்பாராசாவே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்சிற்றப்பாராசாவும்
என்னபேச்சுபேசினாயடாமகனேதேசிங்கு
என்வார்த்தைநீகேட்கிறதில்லைமகனேதேசிங்கு
உன்னையெடுத்துநானும்வளர்த்தேன்மகனேதேசிங்கு
உன்னிடசோறுநான்தின்னவில்லைமகனேதேசிங்கு
எந்தன்சோறுநீயேதின்றாய்மகனேதேசிங்கு
ஆறுமாதமாகதென்றுநம்பிடகுருசொன்னார்
மூன்றுமாதமாச்சுதேயடாமகனேதேசிங்கு
இன்னம்மூன்றுமாதம்போகவேணும்மகனேதேசிங்கு

பெண்சாதிமுகத்தைப்பார்க்கவேண்டாம்மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்ராசாதேசிங்கு
கண்கள்சிவந்துகோபமாச்சுதுராசாவுக்கானாலும்
கோபம்வருவதைக்கண்ணாலேகண்டான்சிற்றப்பாராசாவும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்சிற்றப்பாராசாவும்
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும்மகனேதேசிங்கு
நடுவில்திரைபோடச்சொல்லுமகனேதேசிங்கு
திரைக்கப்பால்நீயிருந்துபேசடாமகனேதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான்ராசாதேசிங்கு
ஆனால்நல்லதாகட்டுமென்றான்சிப்பாய்தேசிங்கு
பெரியராண்மனைவாராளையாராசாதேசிங்கு

தேசிங்குராணியிடம் வருதல்.

ராணியாண்மனைவந்துநின்றான்ராசாதேசிங்கு
அதற்குமுன்னமேதிரைகட்டினார்கள்சோப்தார்மார்களும்
சோப்தார்மாரைக்கண்ணால்கண்டான்ராசாதேசிங்கு
சல்திசல்திராணியையழையுஞ்சோப்தார்மார்களே
என்றவுடனேசோப்தார்களிசைந்ததோழியரை
அழைத்துமன்னர்ராணியைநீங்கள்கூட்டிவாவென்ன
நல்லதென்றுதாதிமார்கள்நடந்தார்களப்போது

தாதிகள் இராணியையழைத்தல்.

அம்மாகேளும்அம்மாகேளும்எங்கள்மாதாவே
எங்களையாளும்ராசாவிப்போஉன்னையழைக்கச்சொன்னார்
இந்தச்சேதியைகாதில்கேட்டாள்ராணியம்மாளும்
மயிலைகுயிலைமருளச்செய்யும்மாதுராணியம்மாள்
அன்னநடையைபின்னிடச்செய்யும்அன்னைராணியம்மாள்
சந்தோஷங்கள்மிகவுண்டாகிச்சரீரம்பூரித்தாள்
மெத்தமனதிலாச்சரியமாகவியப்பினைதான்கொண்டாள்
ராசனழைத்தகாரியமறியநல ாயெழுந்திருந்தாள்
சிங்காசனம்விட்டுக்கீழேகுதித்தாள்ராணியம்மாளும்
மஞ்சனீர்சாலையில்ராணியம்மாளும்வந்துதான்புகுந்தாள்
சுத்தசலத்தினில்ஸ்நானஞ்செய்தாள்சுந்தராணியம்மாள்
கஸ்தூரிமஞ்சள்நிறந்துலங்கினாள்கனகராணியம்மாள்
இந்திரவர்ணப்பட்டுடுத்தினாள்எங்கள்ராணியம்மாள்
சீவிவகுத்துகொண்டையிட்டாள்திகழும்ராணியம்மாள்
வண்டுவிழிக்குமையிட்டாளேமாதுராணியம்மாள்
சந்திரபிறைபோலப்பொட்டுமிட்டாள்தங்கராணியம்மாள்
கச்சையிறுக்கிமுடிந்தாள்கொங்கைகாதலிராணியம்மாள்
ரத்தினத்தாலேசடைப்பிலைமல்லிகைநாயகியார்தரித்தார்
முத்துக்குச்சிகொப்புதொங்கல்முடியத்தொங்கவிட்டார்
ரவைகளிழைத்தகம்மல்ஜிமிக்கைநற்கொப்புமயிர்மாட்டி
நானிலம்புகழும்கத்திரிப்பாவல்நலமாய்தரித்தார்கள்

கண்டசரங்கள்மோகனமாலைகழுத்திற்தரித்தார்கள்
இடையிலொட்டியாணம்பலவிதகொலுசுஇனிப்பாய்கட்டினார்கள்
கலகலெனச்சுருள்கொலுசுடன்மற்றதுங்காலில்கொஞ்சிடவே
அரசனிருக்குமரண்மனைக்குள்ளேவாறாள்ராணியம்மாள்
திரைக்கப்பாலேவந்துநின்றாள்ராணியம்மாளும்
கலகலவென்றிடுஞ்சப்தம்ராசன்காதினில்தான்கேட்டான்
திரையைகெட்டியாயிழுத்துப்பிடித்தான்ராசாதேசிங்கு
திரையைப்பார்த்துக்கோபங்கொண்டாள்ராணியம்மாளும்



இராணி தேசிங்குராசனை கேட்கல்.

என்னையழைத்தகாரியமென்னநடுவிலேதிரையென்ன
இந்தப்பேச்சைக்காதில்கேட்டான்ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னசொல்லுகிறான்ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேளெந்தன்ராணியேநீ
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன்எந்தன்ராணியேநீ
உனக்குச்சொல்லிப்போகவந்தேன்எந்தன்ராணியேநீ
அந்தப்பேச்சைக்காதில்கேட்டாள்ராணியம்மாளும
என்னகாரியம்சொன்னீரையாஎந்தன்பிராணநாதா
கோட்டைவெளியேபோகவேண்டாம்எந்தன்பிராணநாதா
கோட்டையில்மெத்தபலமிருக்குதுஎந்தன்பிராணநாதா
இந்துவருஷம்சண்டைசெய்யலாம்நமதுகோட்டைக்குள்ளே
இந்தச்சேதிகாதில்கேட்டான்ராசாதேசிங்கு
என்னபேச்சுபேசினாயடிஎந்தன்கண்மணியே
பெண்புத்திசண்டைக்கேற்குமாஎந்தன்பிராணநாயகி
நானிப்போதேபோய்விட்டுவாறேன்என்பிராணநாயகியே
இந்தப்பேச்சைக்காதில்கேட்டாள்ராணியம்மாளும்
என்னபேச்சுபேசுகிறீரையாஎன்பிராணநாதரே

கலியாணம்பண்ணிமூலையில்வைத்திரென்பிராணநாதா
நான்-காணுஞ்சுகங்களொன்றுமறியேனென்பிராணநாதா
என்-சந்தோஷமெல்லாந்தணாயில்கவிழ்ந்ததோஎன்பிராணநாதா
நீர்-சண்டைக்குப்போகவேண்டாமையாஎன்பிராணநாதா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்ராசாதேசிங்கு
என்னபேச்சுபேசியனுபடிபெண்ணேநீதானும்
கோட்டையைச்சுற்றிவளைந்திருக்குதுநவாப்புடாளையமும்
நவாப்பைவெட்டிசலுதியில்வாரேன்எந்தன்ராணியே
நானிப்போதேபோய்விட்டுவாரேன்எந்தன்ராணியே
இந்தப்பேச்சைக்காதில்கேட்டாள்ராணியம்மாளும்
எந்தன்பேச்சுதடுத்துபோரீரஎன்பிராணநாதா
சண்டைபண்ணிசெயிக்கமாட்டீரென்பிராணநாதா
சண்டைபண்ணிசெயித்தாலாச்சுதுஎன்பிராணநாதா
இந்தசவுரியமிருக்கவேணும்என்பிராணநாதா
சண்டைக்குபயந்துவந்திரானால்என்பிராணநாதா
கோட்டைகதவைசாத்திப்போடுவேன்என்பிராணநாதா
அலங்கத்துமேலேபீரங்கியேற்றுவேனென்பிராணநாதா
அடியோடேநான்கொளித்திப்போடுவேனென்பிராணநாதா
ஆனால்சுகமாய்போய்வாரும்நீர்என்பிராணநாதா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையாராசாதேசிங்கு
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும்எந்தன்ராணியே
என்னிலுஞ்சமர்த்துஉனக்கிருக்குமோஎந்தன்ராணியே
எந்தன்மேலேகோபம்வேண்டாமென்பிராணநாயகியே
நானிப்போதேபோய்விட்டுவாரேன்யென்பிராணநாயகியே
கோட்டைபத்திரம்பாரத்துக்கொள்ளும்யெந்தன்ராணியேநீ
அந்தப்பேச்சைகாதில்கேட்டாள்ராணியம்மாளும்
பாக்குவெத்திலைகையிலேபிடித்தாள்ராணியம்மாளும்
இந்தாரும்தாம்பூலமென்றாள்ராணிபம்மாளும்
திரைக்குள்கையைநீட்டினானையாராசாதேசிங்கு
பாக்குவெற்றிலைகையில்வாங்கினான்ராதேசிங்கு
இராசன்கையையுள்ளுக்கிழுத்தாள்ராணியம்மாளும்
கையப்பார்த்துஅழுகிறாளையாராணியம்மாளும்
என்னகாரியப்பண்ணிநீரையாஎன்பிராணநாதரே
கையேயித்தனையழகாயிருக்குதேஎன்பிராணநாதா
உன்-முகமுமெத்தனையழகாயிருக்குமோஎன்பிராணநாதா
பாவிநான்செய்தாபாவமிதுதானோஎன்பிராணநாதா
என்றலையெழுத்துமிப்படியிருந்ததோஎன்பிராணநாதா

கையையெடுத்துகண்ணிலொத்தினாள்ராணியம்மாளும்
கதறியழுதுடலம்பினாளையாராணியம்மாளும்
கண்ணீர்சலமுங்கையிலேபட்டுதுராசாவுக்கானாலும்
கையைவெடுக்கென்றிழுத்தானையாராசாதேசிங்கு
கண்ணீர்சலமுங்கையிலேகண்டான்ராசாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினையடிஎந்தன்ராணியேநீ
இராணிவாசத்தைவிட்டுவாரான்ராசாதேசிங்கு

### தேசிங்குராணியிடம்விட்டுகொலுவுக்குவருதல்.

சிங்காரமாலிலேவந்தானையாராசாதேசிங்கு
கண்ணையுருட்டிகதம்பினானையாசிப்பாய்தேசிங்கு
சல்திசல்திகுதிரைகொண்டாரும்அர்க்காருமார்களே
சலாம்வாங்கித்திரும்பினாரையாஅர்க்காருமார்களும்
குதிரைலாயத்திற்வந்தாரையாஅர்க்காருமார்களும்
குதிரைபாகனைகண்டுசொல்லுகிறார்அர்க்காருமார்களும்
சல்திசல்திகுதிரைகொண்டாகுதிரைப்பாகரே
ஆனால்நல்லதாகட்டுமென்றான்குதிரைப்பாகரும்
நாலுகாலில்வண்டயம்போட்டார்பாராசாரிக்கு
நடுவிலேசங்குவிட்டாரையாபாராசாரிக்கு
கழுத்திலேசரப்பளிபோட்டாரையாபாராசாரிக்கு
கன்னத்துக்கண்ணாடிகட்டினார்பாராசாரிக்கு
தங்கத்தாலேசேணிபோட்டான்பாராசாரிக்கு
தலையிலேகிளித்துருவைத்தாரையாபாராசாரிக்கு
மார்புக்குச்சீருபோட்டாரையாபாராசாரிக்கு
வாய்க்குதங்கக்கடிவாளம்போட்டார்பாராசாரிக்கு
குதிரையைக்கொண்டுநிறுத்தினாரையாகுதிரைப்பாகரும்

### தேசிங்குகுதிரைவந்ததைக்காணல்.

குதிரைவந்ததைக்கண்ணாலேகண்டான்ராசாதேசிங்கு
தனக்கென்றுவளர்த்தபாராசாரியைமுன்னுக்குவரச்சொன்னான்
முன்னேவந்துநிற்குதையாபாராசாரியும்
குதிரைக்குச்சேதிசொல்லுகிறானையாராசாதேசிங்கு
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன்பாராசாரியே
சண்டைகெலித்துவந்தேனானால்பாராசாரியே
தங்கத்தாலேமுத்துதுருப்போடுகிறேன்பாராசாரியே

### குதிரைவிசனப்படல்.

சாகிறேனென்றுதெரிந்துதையாபாராசாரிக்கு
கோடுகோடென்றுஅழுகுதையாபாராசாரியும்

தலையைத்தலையைப்பார்க்குதந்தபாருசாரியும்
பூமியிற்காலைப்புரட்டுதந்தபாருசாரியும்
வாயைச்சும்மாமெல்லுதந்தபாராசாரியும்
மிரளமிரளக்கண்ணைச்சுழட்டுதுபாராசாரியும்
திரேகம்படபடவென்றாடுங்குதுபாராசாரிக்கு
வாலைச்சுழட்டிவிசிரித்தட்டுதுபாராசாரியும்
குதிரைமுகத்தைக்கண்ணால்கண்டான்ராசாதேசிங்கு

தேசிங்குபாராசாரிக்குத்திடஞ்சொல்லல்.

என்னகாரியம்பண்ணியடா பாராசாரியே
பன்னீராயிரம்வராகன்கொடுத்துஉன்னைவாங்கினேனே
முப்பதினாயிரம்வராகன்தின்றாய்பாராசாரியே
தண்ணீர்வைத்தாலாகாதென்றுசாராயம்வைத்தேனே
கொள்ளுவைத்தாலாகாதென்றுகடலைவைத்தேனே
மெத்தைபோட்டுவளர்த்தேனுன்னைப்பாராசாரியே
ஆயிரங்கட்டுபுல்லில்நல்லஒருகட்டுபுல்லையும்
பொரிக்கிப்போட்டுவளர்த்தேனடாபாராசாரியே
சண்டைமுனையிலேகாட்டிக்கொடுக்கிறாய்பாராசாரியே
சாகத்தானாபயப்பட்டாய்நீபாராசாரியே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுபாராசாரியே
பிறந்தவனைக்கேசாவிருக்குதுபாராசாரியே
சண்டைமுனையிலேசெத்தோமானால்பாராசாரியே
சல்திமோட்சங்கிடைக்குமடாபாராசாரியே
நீசெத்தவிடத்தில்நானுஞ்சாகிறேன்பாராசாரியே
ஒன்றுக்குமஞ்சவேண்டாமடாபாராசாரியே
இந்தப்பேச்சைக்காதிலேகேட்டதுபாருசாரியும்

பாராசாரிதைரியங்கொள்ளல்.

சந்தோஷமாககனைத்ததுபாருபாராசாரியும்
இராசன்முன்னேவந்துநின்றதுபாராசாரியும்
நெற்றிமயிரைப்பிடித்தானையாபாராசாரியை
வெள்ளிசமக்காளம்போட்டானையாபாராசாரிக்கு
லகானிழுத்துக்கையிலேபிடித்தான்ராசாதேசிங்கு
நாராயணாகோவிந்தாவென்றுகுதிரையேறினானும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்சிற்றப்பராசாவும்
சிற்றப்பதுரைதாணிசிங்குமேகுதிரையேறினாராம்
இராம்சிங்குலட்சுமணசிங்குகுதிரையேறினாராம்
இராமதாரிலட்சுமணதாரிகுதிரையேறினாராம்
மான்சிங்குகிரிபுசிங்குகுதிரையேறினாராம்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனுங்குதிரையேறினானும்
முந்நூறுகுதிரைபுறப்பட்டதையாராசன்முன்னாலே

இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான்பாராசாரிக்கு
சற்றிவந்துசலாம்வாங்குதுபாராசாரியும்
பாதநாட்டியமாடிவருகுதுபாருசாரியும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்ராசாதேசிங்கு
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான்ராசாதேசிங்கு
கோயில்மடப்பளிபுகுந்தானேயாராசாதேசிங்கு
என்னென்னவகையெடுத்தானேயாராசாதேசிங்கு
புனுகுசவ்வாது அத்தாசவ்வாதுகையில்பிடித்தானும்
வெட்டிவேறுமறுக்கொழுந்துகையில்பிடித்தானும்
கண்டமாலைதண்டமாலைகையில்பிடித்தானும்
பொன்னின்செம்பிலேபன்னீருமங்கேமொண்டுக்கொண்டானும்
பொன்னினாலேதிருமணியங்கேகையில்பிடித்தானும்
ஒருகாண்டிதிருவிளக்கெண்ணைகையில்பிடித்தானும்
கோயிலுக்குள்ளேபுகுந்தானேயாராசாதேசிங்கு



இரங்கநாதனைக்கண்டுதொழுதான்ராசாதேசிங்கு
பனிநீர்தன்னால்பாதம்விளக்கினான்ராசாதேசிங்கு
புனுகுசவ்வாதுஅத்தர்பன்னீர்மேலுக்குப்போட்டானும்
வெட்டிவேறுமருக்கொழுந்துமேலுக்குப்போட்டானும்
கண்டமாலைதண்டமாலைகழுத்திலேபோட்டானும்
பொன்னினாலேதிருமணியங்கேநெற்றிவிட்டானும்
தூங்காவிளக்கையேற்றிவைத்தான்ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்ரங்கநாதரே
நவாப்பின்மேலேசண்டைக்குப்போறேன்ரங்கநாதரே
சண்டைஜெயிக்கவுத்தாரந்தாரும்ரங்கநாதரே

## தேசிங்குராஜன் கதை.

சண்டைகெலித்துவந்தேனானல்ரங்கநாதரே
தம்கத்தாலேசிகரம்வைக்கிறேன்ரங்கநாதரே
சண்டைமுனையில்தப்பித்துக்கொள்ளரங்கநாதரே
எனக்குநல்லவரந்தரவேணும்ரங்கநாதரே
நன்மைதுன்மையிரண்டுமெந்தன்கண்ணிற்காட்டாயோ
நாராயணாகோவிந்தாவென்று அடியில்விழுந்தானும்
ஸ்ரீநந்தகோபாலாவென்றுசேவடிதொழுதானும்
பக்தவச்சலாகேசவாவென்றுபாதத்தில்பணிந்தானும்
சங்குசக்கரகோதண்டாவென்றுதாளடிபணிந்தானும்
மதுசூதனதாமோதராவென்றுமலரடிபணிந்தானும்
கரியமுறையவபயந்தீர்த்தவாவென்றுமலரடிபணிந்தானும்
இப்படியாகத்தோத்திரஞ்செய்துஇருகரந்தனைகூப்பி
சரணஞ்செய்துஎதிரில்நின்றான்ராசாதேசிங்கு
என்னசகுனமாகுதையாரங்காகோயிலிலே

### தேசிங்குராசன் சகுனங்காணல்.

கண்டமாலைதண்டமாலைகருகிப்போயிற்று
கழுத்திலிருந்தமுத்தாரங்கள்கழன்றுவிழுந்ததுபார்
கண்ணீர்நிறையதண்ணீர்சொரியுதுரங்கநாதருக்கு
மார்பின்மீதில்தண்ணீரோடுதுரங்கநாதருக்கு
அத்தர்சவ்வாதுபுனுகுபன்னீர்கனாந்துவிழுந்ததுபார்
நெற்றியிலிருந்ததிருமணியப்போநிலத்தில்விழுந்ததுவாம்
கழுத்திலிருந்ததுளசிமாலைகழன்றுவிழுந்தது
ஏற்றிவைத்ததிருவிளக்கங்கேதிட்டேனறவிழ்ந்தது
எதிரிலிருந்தகோபுரமங்கேயிடிந்துவிழுந்தது
பக்கத்திலிருந்தலட்சுமியங்கேபதறிவிழுந்தாளாம்
எதிரிலிருந்தகொடஸ்தம்பமிரண்டாய்விழுந்ததுபார்
கிழக்குமுகத்திலிருந்தசாமிமேற்கேதிரும்பினாராம்
இத்தனைசகுனங்கண்ணாலேகண்டான்ராசாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டதுராசாவுக்கானாலும்
மீசைபடபடவென்றுதுடிக்குதுராசாவுக்கானாலும்
உனக்கெனனகேடுவந்ததுசாமிரங்கநாதரே
நானல்லவோபயப்படவேணும்ரங்கநாதரே
நீர்சொன்னாற்பயப்படுவேனோரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனோரங்கநாதரே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுரங்கநாதரே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குதுரங்கநாதரே
நான்-இன்றைக்குசாவேன்நாளைக்குப்பிறப்பேன்ரங்கநாதரே
நீ-சாகவுமாட்டாய்பிறக்கவுமாட்டாய்ரங்கநாதரே

நீர்-ஒரேசனமெடுத்திரையாரங்கநாதரே
நானிப்போதேபோய்விட்டுவாரேன்ரங்கநாதரே
இன்னொருசேதிசொல்லுகிறேன்கேளும்ரங்கநாதரே
என்னையநியாயமாகக்கொல்லவேண்டாம்ரங்கநாதரே
முடிவுசண்டையில்கொல்லுமையாரங்கநாதரே
நாளை-செததாலும்பிழைத்தாலும்ரங்கநாதரே
உன்பாதத்திற்சேர்த்துக்கொள்ளும்ரங்கநாதரே
கும்பிட்டுக்கொண்டுவந்தானேயாராசாதேசிங்கு
கோயில்வெளியில்வந்தானேயாறாசாதேசிங்கு
கண்ணையுருட்டிகதுப்பினானேயாறாசாதேசிங்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரைமுன்னுக்குவந்தது
நாறாயணாகோவிந்தாவென்றுகுதிரையேறினாறும்
அச்சுதாபரந்தாமாவென்றுஅசுவமேறினாறும்
இரங்கர்கோயிலைவலமாகவந்தான்றாசாதேசிங்கு
இடதுகாலுச்குசிமிட்டாகொடுத்தான்சிப்பாய்தேசிங்கு
போடுபோடென்றுபோறானேயாறாசாதேசிங்கு
கோட்டைவிட்டுவெளியேவந்தான்றாசாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுதுநவாப்புபாளையமும்
பாறாசாரிவருவதைச்கண்ணாலேபார்த்ததுநவாப்புபாளையமும்
அல்லோலகல்லோலமாகுதையாநவாப்புபாளையமும்
கள்ளக்குறிச்சிக்கோடிப்போகுதுநவாப்புபாளையமும்
திருவண்ணாமலைக்கோடிப்போகுதுநவாப்புபாளையமும்
கணவாகுறிச்சிக்கோடிப்போகுதுநவப்புபாளையமும்
புலியாயிருந்தபாளையமெல்லாம்பூனையாய்ப்போச்சுது
முக்காதவழிக்குப்பரவியிருக்குதுநவாப்புபாளையமும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்பங்காருநாய்க்கனும்
நவாப்புகிட்டேவோடிவந்தான்பங்காருநாய்க்கனும்

### பங்காருநாய்க்கன் நவாப்புக்கு தேசிங்கு வருகிறதை சொல்லல்.

சலாமையாசலாமையாநவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்நவாப்புசைதுல்லா
எமன்போலவாறானேயாறாசாதேசிங்கு
சிங்கம்போலவாறானேயாறாசாதேசிங்கு
புலியைப்போலவாறானேயாறாசாதேசிங்கு
யானையைப்போலவாறானேயாறாசாதேசிங்கு
வருகுமுன்னமேவீசிப்போடுவான்றாசாதேசிங்கு
இதற்கோருபாயம்சொல்லுகிறேன்கேளும்நவாப்புசைதுல்லா
ஆலமரமுமுழுகியிருக்குதுமலையனூரேரியிலே
பனைமரமுமுழுகியிருக்குதுமலையனூரேரியிலே
பதின்காதவழிக்குப்பரவியிருக்குதுஇரண்டேரிதண்ணீர்

இரண்டேரியும்வெட்டித்திருப்புகிறேன்சங்கராபரணியிலே
தண்ணீர்மேலேவரவேமாட்டான்ருசாதேசிங்கு
சாவகாசமாய்ப்போகலாமையா நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான்நவாப்புசைதுல்லா

நவாப்பு பங்காருநாய்க்கனுக்கு ஏரியைவெட்ட
உத்திரவுசெய்தது

மாறுமாறென்றுத்தரங்கொடுத்தான்நவாப்புசைதுல்லா
சலாம்வாங்கித்திரும்பினனேயாபங்காருநாய்க்கனும்
ஐந்நூறுபேர்வேலைக்காரரைகூட்டிப்போனனும்
ஏரிக்கரைமேலேவந்தானேயாபங்காருநாய்க்கனும்
இரண்டேரியும்வெட்டித்திருப்பினன்சங்கராபரணியிலே
கீழ்மண்ணுமேல்மண்ணுகுதுசங்கராபரணியிலே
தலைக்குமேலேயோராள்புருஷன்தண்ணீரோடுகுது
பாம்புபோலபுரண்டுவருகுதுசங்கராபரணியிலே
ஏரியைவெட்டிநவாப்புபாளையம்வந்துசேர்ந்தானும்
பாளையத்தில்வந்தானேயாபங்காருநாய்க்கனும்
வருகுமுன்னமேதயார்பண்ணினன்பங்காருநாய்க்கனும்
திருவண்ணமலைசுபங்கிதுரையும்முன்னேவந்தானும்
இரண்டாங்கணவாமவுத்தான்மோவுத்துக்காரனும்
மூன்றுங்கண்வாய்வாலிகொண்டா அக்மவுத்துக்காரரும்
நான்காங்கணவாயெட்டியாபுரம்பாளையக்காரரும்
ஐந்தாங்கணவாய்ச்செங்கல்பட்டுபாளையக்காரரும்
ஆறுங்கணவாயரியலூருபெரியதுரையும்
ஏழாங்கணவாய்பாஞ்சாலங்குறிச்சிபாளையக்காரரும்
எட்டாங்கணவாராணிகோட்டைவேங்கடராயரும்
ஒன்பதாங்கணவாயூகம்வகுத்தான்ஷேக்குமுகம்மதையா
பத்துயூகம்வகுத்திருக்கின்றுன்நவாப்புசைதுல்லா
யூகத்தின்முன்னேயிருக்கிறனேயாசுபங்கிதுரைதானும்
பந்தோபஸ்தோவிருக்குதையாநவாப்புபாளையமும்
பாளயத்தினடுவிலிருக்கிறனேயாநவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறுன்ருசாதேசிங்கு
நவாப்பெங்கேயெங்கேயென்று இவனும்லந்தானம்
பக்கத்திலிருக்குஞ்சமேதார்களைக்கண்ணாலேகண்டானும்

தேசிங்குராசன் சேனைகளுக்குச் சொல்லல்

அண்ணமாரோதம்பிமாரோசமேதாருமாரே
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்சமேதாருமாரே
எனக்குத் தெய்வபலமுமில்லையடாசமேதாருமாரே
என்கைபலம்கொண்டுபோகிறேனடாசமேதாருமாரே
பாலுஞ்சோறும்தின்கிறவருனல்செஞ்சிக்குப்போங்களடா
இரத்தமுஞ்சோறுதின்கிறவருனலென்பின்னேவாங்களடா

பெண்சாதிமுகத்தில்விழிக்கிறவறானால்செஞ்சிக்குப்போங்களடா
பெண்சாதிமுகத்தில்விழியாதவறானால்யென்பின்னேவாங்களடா
சண்டைபண்ணிசெத்தோமானால்சலதிமோட்சமுண்டு
போர்க்களத்தில்செத்தோமானால் புகழுங்கீர்த்தியுண்டு
ரணக்களத்திற்செத்தோமானால்னல்லபதவியுண்டு
சாவுக்கென்றுபயப்படவேண்டாம்சமேதாருமாரே
சல்திசல்திவாருமென்றான்ராசாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவந்தான்றாசாதேசிங்கு
ஆற்றிலேதண்ணீர்வருவதைக்கண்டானறாசாதேசிங்கு
சித்தப்பனமுகத்தைத்திரும்பிப்பார்த்தான்ராசாதேசிங்கு

### தேசிங்குறாசன் சிற்றப்பறாசனுக்குச் சொல்லல்,

ஐயாகேளுமையாகேளும்சிற்றப்பறாசாவே
இரண்டுநாழிக்குமுன்தண்ணீரில்லைசங்கராபரணியிலே
இப்போ,தண்ணீர்வந்தவயணமெனனசிற்றப்பறாசாவே
நானொருசேதிசொல்லுகிறேனகேளும்றாசாதேசிங்கு
இந்தச்சீமைக்கொள்ளைக்காரனபங்காருநாய்க்கனும்
தாழனூரேறிமலைபனூரேறிதள்ளியேவெட்டினானும்
ஏரிதண்ணிபுரண்டுவருகுதடாமகனேதேசிங்கு
இரண்டுநாழியில்வற்றிப்போகுதுஇந்தஏரிதண்ணீர்
பிற்பாடுபுறப்பட்டுபோகலாமடாமகனேதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டானசிப்பாய்தேசிங்கு
கலகலவெனறுசிரித்தானேயாறாசாதேசிங்கு
என்னபேச்சுபேசினீரையாசிற்றப்பறாசாவே
தண்ணீர்க்குபயந்துஇருப்பேனோநான்சிற்றப்பறாசாவே
எனக்குபயந்துதண்ணீர்கொண்டுவந்தானநவாப்புசைதுல்லா
பயந்துபோனால்விடுவேனோநானசிற்றப்பராசாவே
என்று'கனைத்துசதும்பிதட்டினானேயாபாறாசாரியை
ஆற்றிற்குஅக்கரையிரண்டுநாழிவழிசங்கராபரணியாறு
தண்ணீர்வற்றினதைப்பார்த்தானேயாறாசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானபாறாசாரியை
பனிரண்டங்குபடிவைத்ததுகுதிரைபாறாசாரிகுதிரை
பின்னாலேபோய்வருகுதுபாருபாறாசாரியும்
பின்னுக்குவாங்கிஆற்றிலேகுதித்ததுபாறாசாரிகுதிரை
அந்தநாழிக்குக்கண்ணாலேகண்டார்சமேதாருமாரும்
நத்தர்சிங்குகோபாலசிங்குஆற்றிலேகுதித்தாறும்
சிற்றப்பதுரைதரணிசிங்குஆற்றிலேகுதித்தாறும்
றாமுசிங்குலட்சுமணசிங்குஆற்றிலேகுதித்தாறும்
றாமுதாரிலட்சுமணதாரியாற்றிலேகுதித்தாறும்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனும்ஆற்றிலேகுதித்தானும்
ஆற்றுத்தண்ணீரைபார்த்துபயந்தார்சமேதாருமாரும்
பயந்தகுதிரைதிரும்பிப்போச்சுதுசெஞ்சிக்கோட்டைக்குள்ளே
ஏழுகுதிரைஏழுராசரைதண்ணீர்கொண்டுபோச்சு

முப்பதுகுதிரைகளைஏறிவந்தார்சிப்பாய்மார்களும்
உடுப்பெடுத்துக்காயபோட்டார்சிப்பாய்மார்களும்
முப்பதுகுதிரையைக்கண்ணாலேகண்டான்ராசாதேசிங்கு
முப்பதுகுதிரையுஞ்சலாம்வாங்குதுராசாவுக்காணலும்
பதில்சலாமுங்கொடுத்தானையாராசாதேசிங்கு
முப்பதுகுதிரைக்குசர்தாரையாமோவுத்துக்காரனும்
நவாப்புபளையத்தைதிரும்புபார்த்தான்மோவுத்துக்காரனும்
கண்ணாலேகண்டானகோபமாச்சுதுமோவுத்துகாரனுக்கு
இடதுகாலுக்குகிமிட்டாகொடுத்தான்நீலவேணிக்கு
கறகறவெனறுசுழனறுவருகுதுநீலவேணிகுதிரை
ராசாமுன்னேசுற்றிவந்தானமோவுத்துக்காரனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான்மோவுத்துக்காரனும்

### மோவுத்துக்காரன் சண்டைக்குப்போகத் தேசிங்கைக்கேட்கல்.

மண்டிபோட்டுசலாம்வாங்கினான்மோவுத்துக்காரனும்
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும்ராசாதேசிங்கு
முதற்சண்டைக்குவுத்தாரந்தாரும்ராசாதேசிங்கு
சந்தோஷமாகவுத்தாரந்தாரும்ராசாதேசிங்கு
முதல்யூகத்திலிருக்கிறானேயாசுபங்கிதுரைதானும்
கடைசியூகத்திலிருக்கிறானேயாநவாப்புசைதுல்லா
இரண்டுபேரையும்வெட்டிகெலிக்கிறேன்ராசாதேசிங்கு
கிழக்குபக்கந்திரும்பினானேயாமோவுத்துக்காரனும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானேயாராசாதேசிங்கு

### தேசிங்குராசன் மோவுத்துக்காரனுக்குச்சொல்லல்.

என்னபேச்சுபேசினாயடாமோவுத்துக்காரநீ
உனக்கு-அண்ணனுமில்லைதம்பியுமில்லைமோவுத்துக்காரநீ
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறாய்மோவுத்துக்காரநீ
சண்டைமுகத்தைப்பார்த்தறியாயோமோவுத்துக்காரநீ
ஒண்டியாய்ச்சண்டைபண்ணவேண்டாம்மோவுத்துக்காரனே
நானும்நீயும்புகுந்துவெட்டுவோம்மோவுத்துக்காரனே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான்மோவுத்துக்காரனும்

### மோவுத்துக்காரன்தேசிங்குச் சொல்லல்.

என்னபேச்சுபேசினீரையாராசாதேசிங்கு
நானும்நீயும்புகுந்துவெட்டினால்ராசாதேசிங்கு
உமதுபேருண்டாகுமேயன்றியென்பேருண்டாகாது
சல்திசல்தியுத்தாரந்தாரும்ராசாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்நானுமானால்ராசாதேசிங்கு
கால்நாழிநீர்கண்ணால்பாரும்ராசாதேசிங்கு
அந்தநவாப்பின்பாளையத்தையிப்போஅதஞ்செய்யாவிட்டால்
எந்தன்பேருமோவுத்துக்காரனென்றெண்ணுவார்களோ

தூள் தூளாகதும்சஞ்செய்கிறேன் துரகம்யாவற்றும்
அணு அணுவாயதங்கன்செய்கிறேன்யானைகள்யாவற்றும்
தவிடுபொடியாய்ச்சதைத்துவிடுகிறேன் தலங்கள்யாவற்றும்
காற்றிலிலவம்பஞ்சாகச்செய்கிறேன் சனத்தபடையெல்லாம்
அரைநாழியெனக்குக்காரந்தாருமையா ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைக் காதிலேகேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையாராசாதேசிங்கு
நானென்னசொனனாலும்கேளேனென்றாய்மோவுத்துக்காரனே
சந்தோஷமாகதலையசைத்தான்ராசாதேசிங்கு
முதற்சண்டைக்குத்தாரங்கொடுத்தான்ராசாதேசிங்கு
சந்தோஷமாகசெலவுவாங்கினானமோவுத்துக்காரனும

மோவுத்துக்காரன் சண்டைக்குப்போகுதல்.

சலாம்வாங்கித்தாண்டினானையா நீலவேணிமேலே
இடதுகாலுககுசிமிட்டாகொடுத்தான்நீலவேணிக்கு
காற்றுப்போலேபறந்ததையா நீலவேணிகுதிரை
மேகம்போலேபறந்ததையா நீலவேணிகுதிரை
ஒற்றைக்குதிரையைக்கண்ணாலேகண்டானசுபங்கிதுரைதானும்



சுபங்கிதுரை போவுத்துக்காரனைக்கண்டு
தனசேனைக்குச்சொல்லல்.

அண்ணமாரேதம்பிமாரேசமேதாருமாரே
ஒற்றைக்குதிரைக்காரன்வாறானசமேதாருமாரே
வருகுமுனனமேவீசிப்போடுவானசமேதாருமாரே
சல்திசல்திபீரங்கிபோடும்சமேதாருமாரே
ஆனால்கல்லதாகட்டுமெனறுசமேதாருமரும்
சொல்லிவாயைமூடுமுனனேசமேதாருமாரும்
பளபளவெனறுபளுத்தாதீர்த்தார்சமேதாருமாரும்
பளுத்தாசத்தப்காதிலேகேட்டுநீலவேணிகுதிரை
குண்டுக்குமேலேசாணுயரம்வே[illegible]யாய்ப்பறந்தது

நடுத்தண்டிலேவந்துவிழுந்ததுநீலவேணிகுதிரை
தண்டைசுற்றிப்பார்த்தானையாமோவுத்துக்காரனும்
தண்டுக்குசைகைபூதினானையாசுபங்கிதுரைதானும்
மோவுத்துக்காரனைக்கண்ணாலேகண்டார்சிப்பாய்துரைமாரும்
மூவாயிரங்குதிரைவளைந்ததுமோவுத்துக்காரனமேலே
லகானிழுத்துகையிலேபிடித்தானமோவுத்துக்காரனும்
பட்டாவுருவிகையிலேபிடித்தானமோவுத்துக்காரனும்
ஆகாயவாணியைச்சாட்சிவைத்தானமோவுத்துக்காரனும்
பூமிதேவியைசாட்சிவைத்தானமோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கப்போ
சிங்கம்போலேவாறானையாமோவுத்துக்காரனும்
புலியைப்போலேபுகுந்தானையாமோவுத்துக்காரனும்
துண்டம்துண்டமாய்தூக்கிவெட்டுகிறானமோவுத்துக்காரனும்
தலைதலையாயுருட்டிப்போடுகிறானமோவுத்துக்காரனும்
சப்பைசப்பையாய்கிழித்துப்போடுகிறானமோவுத்துக்காரனும்
கண்டந்துண்டமாய்புகுந்துவெட்டுகிறானமோவுத்துககாரனும்
கால்மாடுதலைமாடாய்போகுதுபாருநவாப்புபாளையமும்
அந்தவேளையிலெனனபண்ணுகிறானசுபங்கிதுறைதானும்
மூவாயிரம்பம்போஸ்பிரங்கிதயார்பண்ணினானும்
சுற்றிலுமிருந்தசிப்பாய்மாரும்பளுத்தாதீர்த்தார்கள்
அத்தனைகுண்டுக்கும்தப்பிவருகுதுநீலவேணிகுதிறை
ஒருகுதிரைமேல்ஆயிரங்குதிரைவந்துவளைந்தது
ஆயிரங்குதிறைபைதாண்டிவிழுகுதுநீலவேணிகுதிரை
ஒருகத்திமேலேஆயிரங்கத்திவந்துவிழுந்தது
ஆயிரங்கத்தியைதள்ளிவெட்டுகிறானமோவுத்துக்காரனும்
மருந்துபுகையிலேபுகுந்துவெட்டுகிறானமோவுத்துகாரனும்
தலைதெரியாமற்புகுந்துவெட்டுகிறானமோவுத்துக்காரனும்
கிழக்குபக்கந்திரும்பினானையாமோவுத்துகாரனும
அங்கேயிருந்தஆயிரங்குதிரைவந்துவளைந்தது
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானமோவுத்துகாரனும்
கறகறவெனறுசுழனறுவருகுதுநீலவேணிகுதிரை
குதிறைசுழனறதிமீஷநேரத்திற்குமோவுக்துகாரனும்
வடக்குபக்கந்திரும்பினானையாமோவுத்துகாரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிறைவந்துவளைந்தது
குதிறைகள்வந்ததைக்கண்ணாலேகண்டானமோவுத்துகாரனும்
இடதுகாலுககுசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கு
கறகறவெனறுசுழனறறதுபாருநீலவேணிகுதிறை
குதிரைசுழனறதிமிஷநாழிகைக்குமோவத்துகாரனும்
கண்கள்சிவந்துபொறிகள்பறக்கமோவுத்துகாரனும்
கனைத்துகதும்பிமீசையுருவியேமோவுத்துகாரனும்

கத்தியெடுத்துவீசினனேயாமோவுத்துகாரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரைடாருப்விழுந்தது
மேற்குபக்கதிரும்பினனேயாமோவுத்துக்காரனும்
அங்கேயிருந்த ஆயிரங்குதிரைவந்துவளைந்தது
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டானமோவுத்துகாரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கு
கறகறவென்றுசுழன்றதுபாருநீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்குமோவுத்துகாரனும்
குடல்சரிந்திடவேசிலகுதிரைகள்வந்துவிழுந்ததுபார்
தலைகள்துண்டாய்சிலகுதிரைகள்தத்திவிழுந்ததுபார்
கால்களிருபிளவாய்சிலகுதிரைகள்கதறிவிழுந்ததுபார்
மார்கள்பிளந்திடவேசிலகுதிரைகள்மாய்ந்துவிழுந்ததுபார்
மண்டைகள்திறந்துமூளைகள்சிதறிடமடிந்தனசிலகுதிரை
இப்படியாகச்சிதைந்துதறித்துஇம்சைகள்செய்தபின்பு
சிந்தைமகிழ்ந்துசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கப்போ
அங்கேயிருந்துதண்டில்புகுந்ததுநீலவேணிகுதிரை
தண்டில்புகவேசந்தோஷமானனமோவுத்துகாரனும்
பாளையங்களைகண்ணாலேகண்டானமோவுத்துக்காரனும்
கொசுக்கள்போலேதேய்ப்பேனென்றானமோவுத்துகாரனும்
தூசுபோலூதிவிடுவேனென்றானமோவுத்துகாரனும்
பதறைபோலேபறக்கடிப்பேனென்றானமோவுத்துகாரனும்
மெத்தகதைரியங்கொண்டுதிரிகிறானமோவுத்துகாரனும்
அரிந்தரிந்துபோட்டானேயாமோவுத்துகாரனும்
முன்வீச்சுக்காயிரம்விழுந்ததுநவாப்புபாளையமும்
பின்வீச்சுக்காயிரம்விழுந்ததுபாருநவாப்புபாளையமும்
தெற்கேயிருக்கசுபங்கிதுரையைக்கண்ணாலேகண்டானும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறானமோவுத்துக்காரனும்
ஆனைக்கூட்டங்கள்மெத்தவிருக்குதுசுபங்கிதுரையண்டை
ஆனைவேடிக்கைப்பார்த்துவாறானமோவுத்துகாரனும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டானசுபங்கிதுரைதானும்
ஆயிரம்யானையைமுன்னேதூரத்தினனசுபங்கிதுரைதானும்
ஆனைவருவதைக்கண்ணாலேகண்டானமோவுத்துகாரனும்
கலகலவென்றுசிரித்தானேயாமோவுத்துகாரனும்
பாலாவுருவிகையிலேபிடித்தானமோவுத்துகாரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தானநீலவேணிக்கு
யானைக்குமேமேலேசாணுபரம்பதிர்ந்துபாய்ந்தது
குதிரைபோகிறவேகத்தாலேகுத்திசாய்கிறானும்
கறகறவென்றுசுழன்றுவருகுதுநீலவேணிகுதிரை
கால்மாடுதலைமாடாய்குத்திசாய்கிறானமோவுத்துகாரனும்
கடகடவென்றுபுறண்டுசாகுதுயானைகளானலும்
ஆயிரயானையைகுத்தியுருட்டினனமோவுத்துகாரனும்

தேற்கேயிருந்தசுபங்கிதுரையைக் கண்ணாலகண்டானும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
முன்னங்காலை தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
சல-பாலாவுநவிகையில்பிடித்தான மொவுத்துக்காரனும்
அல்லாகுஅல்லாகுவென்று போட்டான்பாலாதன்னாலே
முன்னேயிருந்தமாவெட்டியானும நிலத்தில்விழுந்தானும்
மாருக்குப்பாலாயிழுத்துப்பிடித்தான் மொவுத்துக்காரனும்
அந்தவேளைக்குச்சலாம்வாஙகினான் சுபங்கிதுரைதானும்
ஓடிப்போகிறேனோடிப்போகிறேன் மொவுத்துக்காரனே
இந்தப்பேச்சைக்காதில்கேட்டான் மொவுத்துக்காரனும்
ஓடிப்போகிறசிப்பாய்மகனும் சண்டைக்கேன்வந்தான்
சவுரியமில்லாதவனே நீயும் சண்டைக்கேன்வந்தாய்
இனியில்லாதகோபமாச்சுது மொவுத்துக்காரனுக்கு
வலதுகையைபிடித்தானைய்யா மொவுத்துக்காரனும்
வலதுகையுந்தானுமாகவே பூமியில்விழுந்தானும
இடதுகைபால்சலாம்வாங்கினான் சுபங்கிதுரைதானும்

சுபங்கிதுரை மோவுத்துக்காரனை வணங்கிகேட்கல்

நானொருசேதிசொல்லுகிறேனகேளும் மொவுத்துக்காரனே
உந்தன்மேலேசண்டைக்குவரவில்லை மொவுத்துக்காரனே
உன்னைநானும்பார்க்கவந்தேன் மொவுத்துக்காரனே
பெண்சாதிபிழந்தேன்தெண்டமையா மொவுத்துக்காரனே
பிள்ளையிழந்தேனல்லாவறிய மொவுத்துக்காரனே
ஊரிழந்தேன்பதியுமிழந்தேன். மொவுத்துக்காரனே
நீ-சொன்னபடிநானுங்கேட்பேன் மொவுத்துக்காரனே
சோறுகூடநான்தின்னவில்லை மொவுத்துக்காரனே
நானிப்போதேயோடிப்போறேன் மொவுத்துக்காரனே
இப்போதென்னைவிட்டுவிடவேணும் மொவுத்துக்காரனே
அந்தவேளையிலிரக்கம்வந்தது மொவுத்துக்காரனுக்கு
ஆனால்நல்லதாகட்டும்போடா சுபங்கிதுரையேநீ
ஒற்றைகைபோடே ஓடிப்போனான் சுபங்கிதுரைதானும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் மொவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
நவாப்பெங்கேயெங்கேயென்று இவனும்வாரானும்
குதிரைவருவதைகண்ணாலகண்டது நவாப்புபாளையமும்
அல்லோலகல்லோலமாகியோடுது நவாப்புபாளையமும்
அங்கேயிருந்துதண்டில்புகுந்தான் மொவுத்துக்காரனும்
திரிக்கோட்டைஷேக்முகம்மது வந்தெதிர்த்தானும்
ஷேக்குமுகம்மதைக்கண்ணாலகண்டான் மொவுத்துக்காரனும்
கலகலவென்றுசிறித்தானையா மொவுத்துக்காரனும்
கண்ணாலகண்டான்கோபமாச்சுது நவாப்புபாளையத்தை

கத்தியெடுத்துநீலவேணியைக் கலங்கதட்டினானும்
தட்டினவுடனேநீலவேணியும் தண்டில்பாயுதபார்
பாய்ந்தவுடனேஷேக்முகம்மது பாலாயெடுத்தானும்
பாலாயெடுத்துமொவுத்துக்காரனைப் பாய்ந்துகுத்தினானும்
குத்தினகுத்துமொவுத்துக்காரன் கொண்டையில்பாய்ந்தது
பாய்ந்தயீட்டியையவலதுகையாலே பத்தியெடுத்தானும்
கோபமிகவும்பொங்கிவந்தது மொவுத்துக்காரனுக்கு
சிவ்வென்றெழும்பிஷேக்முகமது கையைப்பிடித்தானும்
கத்தியெடுத்துஷேக்குமுகம்மது கழுத்தைவெட்டப்போனான்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான் ஷேக்முகம்மதையா

ஷேக்முகம்மது மோவுத்துக்காரனைஇரங்கிக்கேட்கல்

சலாமையாசலாமையா மொவுத்துக்காரனே
என்னுயிர்பிழைத்தால்உம்மிடபேரையெங்குஞ்சொல்லுவேனான்
அறியாமல்சண்டைக்குவந்தேனையா மொவுத்துக்காரனே
சண்டையின்னதென்றறியேன்நானும் மொவுத்துக்காரனே
தெரியாமற்படிக்குவந்துவிட்டேன் மொவுத்துக்காரனே
தாயும்நீரேதந்தையும்நீரே மொவுத்துக்காரனே
எந்தன்றலையைக்காக்கவேணும் மொவுத்துக்காரனே
தெய்வமும்நீரேதேசிகநும்நீரே மொவுத்துக்காரனே
அடிமையென்னைஆதரிக்கவேணும் மொவுத்துக்காரனே
தஞ்சமென்னைகாக்கவேணும் மொவுத்துக்காரனே
என்றுவணங்கிசலாம்செய்தானந்த ஷேக்முகம்மதுவும்
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் மோவுத்துக்காரனும்
பகையாளிகூடசண்டைக்குவந்தால் பாலன்விடுவேனோ
ஈட்டியெறிந்தகையையிப்போ என்னிடவாளாலே
கண்டதுண்டமாய்வெட்டியெறிந்தான் மொவுத்துக்காரனும்
கத்திபிடித்தசிப்பாய்மார்களை கரணையாடிவாரான்
சலாம்வாங்கினசிப்பாய்மார்களை ஓடிப்போகச்சொன்னான்
பதினெட்டுவயதுபாலனையா மொவுத்துக்காரனும்
ஒருகாலமும்சண்டையறியான் மொவுத்துக்காரனும்
எண்ணூறுபிரம்குதிரையைவெட்டினான் மொவுத்துகாரனும்
ஆயிரம்யானையைவெட்டினானையா மொவுத்துகாரனும்
கைகளெல்லாமோய்ந்துபோச்சுது மொவுத்துக்காரனுக்கும்
இரத்தகவுலுகம்மிக்கொண்டது மொவுத்துக்காரனுக்கு
களைகள்வந்துமூடிக்கொண்டது மோவுத்துக்காரனுக்கு
ராசாவண்டையில்போகவேணுமென்று குதிரைதிருப்பினானும்
சந்தோஷமாகதிருப்பினானையா மொவுத்துக்காரனும்
பரதநாட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
ராஜாமுன்னுக்குவாரானையா மொவுத்துக்காரனும்
அந்தவேளைக்குபதுங்கியிருந்தார் தப்பினகுண்டுக்காரர்
இரட்டைகுண்டுபோர்பண்ணி டுப்பென்றுசுட்டாரும்

டுப்பென்றசத்தம்திரும்பிப்பார்த்தான் மொவுத்துக்காரனும்
அந்தகுண்டுநெற்றிப்பட்டது மொவுத்துக்காரனுக்கு
அல்லாமீர அல்லாமீரயென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
அரிகோவிந்தாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
வைகுந்தபதவிசேர்ந்தானையா மொவுத்துக்காரனும்

மொவுத்துக்காரன் இரந்ததைக்கண்டு
நீலவேணிகுதிரை விசனப்படல்

சுற்றிசுற்றிவருகுதையா நீலவேணிகுதிரை
முகந்துமுகந்து அழுகிறதையா நிலவேணிகுதிரை
கண்ணில்நிராய்பெருகிவருகுது நிலவேணிக்கு
கடகடவென்றுபுறண்டழுகிறது நிலவேணிகுதிரை
மொவுததுக்காரன்விழுந்தசேதி நவாப்புகேட்டானும்

மோவுத்துகாரன் இறந்தபின்நவாப்பு பங்காருநாய்க்கனை
நிலவேணியைக்கொண்டு வரச்சொல்லல்.

அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாய்க்காநி
மொவுத்துக்காரன்விழுந்துபோனான் பங்காருநாய்க்காநி
நிலவேணியைக்கொண்டுவரவேணும் பங்காருநாய்க்காநி
அந்தசேதிகாதில்கேட்டான் பங்காருநாய்க்கனும்
குதிரைபிடிக்கஆயிரங்குதிரை அனுப்பியேவைத்தானும்
ஆயிரங்குதிரைவந்துவளைந்தது நிலவேணியை
குதிரையையெல்லாம்சுற்றிப்பார்த்தது நிலவேணியும்
கனைத்துகதும்பியெழும்பினதுபாரு நிலவேணியும்
கரகரவென்றுசுழன்றுதைக்குது நிலவேணியும்
இடசாரிவலசாரியாகவந்ததுபாரு நிலவேணியும்
வந்துபாய்ந்துதைத்ததுபாரு நிலவேணியும
காலினலேயெட்டியுதைக்குது நிலவேணியும்
வாலினலேவீசியடிக்குது நிலவேணியும்
வாயினலேவிழுந்துகடிக்குது நிலவேணியும்
வீறிட்டுக்கொண்டுவிழுந்துசாகுது நவாப்புதன்குதிரை
மூலைக்குமூலைதுறத்தியுதைக்குது நிலவேணியும்
காலுதையாலேவிழுந்துசெத்தது அன்பதுகுதிரைகள்
விக்கிமுக்கிதிக்கிட்டுசாகும் குதிரைகளனந்தமாம்
சொக்கியொடுங்கிநெக்கிட்டுச்சாகும் குதிரைகளநந்தமாம்
ஆயிரந்துருப்புசிப்பாய்மாரும் அடியோடேபோனர்கள்
குதிரைவிழுந்ததைகண்ணாலேகண்டது நிலவேணிகுதிரை
இராசாபக்கம்போவோமென்று நிலவேணியும்

மோவுத்துக்காரன்குதிரை தேசிங்குராசனிடம்வருதல்.

இரண்டுதாண்டிலேவந்துநின்றது ராசாமுன்பாக
கண்ணிறையதண்ணிகலங்கியிருக்குது நிலவேணிக்கு
குதிரைமுகத்தைக்கண்ணால்கண்டான் ராஜாதேசிங்கு

அண்ணமாறேதம்பியாரே சமேதாருமாரே
என்னுடன்வளர்ந்ததம்பிதானு மிறந்துபோய்விட்டான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது சமேதாருமாரே
குதிரையைவந்துகட்டிக்கொண்டான் ராசாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினுயடா நிலவேணியேநீ
என்னிடவுயிர்க்குசாயமாச்சுதே நிலவேணியேநீ
அவன்-செத்தவிடத்தைக்காட்டுவாயடா நிலவேணியேநீ
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டது நிலவேணியும்
இராசன்முன்பாகநடக்குதுபாரு நிலவேணியும
மொவுத்துக்காரன்செத்தவிடமவந்தது நிலவேணிகுதிரை

மோவுத்துக்காரனிறந்ததைப்பார்த்து தேசிங்குராசன்விசனப்படல்.

மோவுத்துக்காரன்முன்னேவந்தான் இராசாதேசிங்கு
மண்டிபோட்டுவுட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் ராஜாதேசிங்கு
முகத்தோடேமுகம்வைத்தானையா ராஜாதேசிங்கு
கதரியழுதுபுலம்பினானையா ராஜதேசிங்கு
கோடிகோடென்றுகதறினானையா ராஜாதேசிங்கு
என்னைவிட்டுநியெப்படிபோனாய் மொவுத்துக்காரனே
எனக்குநல்லயிடந்தேடிவையும் மோவுத்துக்காரனே
நவாப்பைவெட்டிநானும்வருகிறேன் மொவுத்துக்காரனே
தனக்குத்தானேதயிரியமானான் ராஜாதேசிங்கு
பெரியகுழியாய்வெட்டச்சொன்னான் மொவுத்துக்காரனுக்கு
லட்சம்பொன்னுதானங்கொடுத்தான் ராசாதேசிங்கு
குழியிலேதூக்கிவைத்தானையா மொவுத்துக்காரனையும்
குழிக்குமுன்னேவந்துநின்றது நிலவேணியும்
மண்டிபோட்டுபடுத்ததுபாரு நிலவேணிகுதிரை
பட்டாவுருவிகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
இரண்டுதுண்டாகத்தீர்த்தானையா ராஜாதேசிங்கு

மோவுத்துக்காரனுடன் அவனதுகுதிரையை புதைத்தல்

குதிரைபைக்கூடப்போட்டுபுதைத்தானையா ராஜாதேசிங்கு
பெரியகோரியாய்கட்டச்சொன்னான் ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னசொல்லுகிறான் ராசாதேசிங்கு
நாருயணகோவிந்தாவென்றான் ராசாதேசிங்கு
அண்ணமாரேதம்பிமாரே ஜமேதாருமாரே
நானொருசேதிசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
நான்போகட்டோநீர்வாரீரோ சமேதாருமாரே
ஓடிபோகிறசிப்பாய்மாரைப் துரத்திவெட்டவேண்டாம்
பதுங்கியிருக்கின்றசிப்பாய்மாரைப் பார்த்துவெட்டவேண்டாம்
ஏழைஎளியபிச்சைக்காரரை யெதிர்த்துவெட்டவேண்டாம்

உங்களை-எதிர்த்தசிப்பாய்மாரை டாறாய்த்தீத்திடுங்கள்
அந்தப்பேச்சைகாதில்கேட்டார் சமேதாருமாரும
ஆனால்நல்லதாகட்டுமென்றார் சமேதாருமாரும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
எதிரேவந்துநின்றதுபாரு பாராசாரிகுதிரை

## தேசிங்குராஜன்சண்டைக்குப்போகுதல்.

கனைத்துக்கும்பியெழும்பினானையா ராஜாதேசிங்கு
லகானிழுத்துக்கையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
பரதநாட்டியமாடிவருகுது பாராசாரிகுதிரை
குதிரைவருவதைகண்ணால்கண்டான் நவாப்புசைதுல்லா
அண்ணாவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கானீ
குதிரைவருவதைக்கண்ணால்பாரும் பங்காருநாய்க்கானீ
சல்திசல்திபீரங்கிதிருப்பு பங்காருநாய்க்கானீ
சொல்லிவாயைமூடுமுன்னமே பங்காருநாய்க்கனும்
சுருக்காய்பளித்தாதிர்த்தானையா பங்காருநாய்க்கனும்
பளித்தாசத்தம்காதில்கேட்டது பாராசாரிகுதிரை
குண்டுக்குமேலேபறந்துதையா பாராசாரிகுதிரை
நடுத்தண்டிலேவந்துகுதித்தது பாராசாரிகுதிரை
இரண்டாங்கணவாசேத்துபட்டு தாவுத்துக்காரனும்
குதிரைசேனைக்குசைகையூதினான் தாவுத்துக்காரனும்
ஊதினவுடனேசூழ்ந்துகொண்டார் சிப்பாய்மார்களும்
முப்பதினாயிரங்குதிரைவளைத்தது ராஜாவையானாலும்
அந்த-குதிரையெல்லாம்சுற்றிப்பார்த்தான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
லகானிழுத்துகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
இரண்டுகையிலேபட்டாவாங்கினான் ராசாதேசிங்கு
ஆகாயவாணியைசாட்சிவைத்தான் ராசாதேசிங்கு
பூமிதேவியைசாட்சிவைத்தான் ராஜாதேசிங்கு
சந்திரசூரியரைசாட்சிவைத்தான் ராஜாதேசிங்கு
ரங்கநாதரைசாட்சிவைத்தான் ராசாதேசிங்கு
ராமுராமுரேதேவாவென்று போட்டானொருவெட்டு
துண்டுதுண்டாய்வெட்டுகிறான் ராசாதேசிங்கு
தலைதலையாய்உருட்டிப்போடுகிறான் ராசாதேசிங்கு
டாறுடாறாய்கிழித்துப்போடுகிறான் ராசாதேசிங்கு
இனிஇல்லாமல்புகுந்துவெட்டுகிறான் ராசாதேசிங்கு
வெட்டொன்றுக்குஎட்டுதுண்டமாய் டாறாய்விழுந்தது
செயராமுசெங்கராமு புகுந்துவெட்டுகிறார்கள்
ராமுசிங்குலட்சுமணசிங்கு புகுந்துவெட்டுகிறார்கள்
சிற்றப்பதுரைதரணிசிங்கு புகுந்துவெட்டுகிறார்கள்
மூன்றரைநாழிமூலைக்குமூலை புகுந்துவெட்டுகிறாரும

இருபத்தொருகுதிரையோடே புகுந்துவெட்டுவாரும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் தாவுத்துக்காரனும்
பதினாயிரம்பீரங்கிகுண்டு பளிந்த தீர்த்தாராம்
இருபதினாயிரம்ரேக்கலாகுண்டு எகிரிவிட்டாரும்
அந்தக்குண்டுக்குதப்பிவருகுது பாராசாரிகுதிரை
குண்டுசெந்திலேநுழைந்துபோகுது பாராசாரிகுதிரை
முப்பதினாயிரம்துப்பாக்கிகுண்டு முடுகிவிட்டாரும்
அந்தகுண்டுக்குதப்பிவருகுது பாராசாரிகுதிரை
நெருப்புமாரியாயபொழிகிறானையா தாவுத்துக்காரனும்
அந்தகுண்டுக்குந்தப்பிவருகுது பாராசாரிகுதிரை
குண்டுக்குமேலேபறக்கிறதையா பாராசாரிகுதிரை
குண்டுவிழுந்துநவாபபுபாளையம் கூவிமாளுதுபார்
ஒருகுதிரைமேலேஆயிரங்குதிரை வந்துவிழுந்ததுபார்
ஆயிரங்குதிரையுந்தாண்டிகுதிக்குதுபார் பாராசாரிகுதிரை
ஒருகத்திமேலேஆயிரங்கத்தி வந்துவிழுந்ததுபார்
ஆயிரங்கத்தியுந்தள்ளிவெட்டுகிறான் ராசாதேசிங்கு
கலகலகலகலகலகலவென்று கத்திகள்மின்னுதுபார்
மிகுமிகுமிகுமிகுமிகுமிகுவென்று பீரங்கிபறக்குதுபார்
மடமடமடமடமடமடவென்று ரேக்கலாகுண்டுகளும்
திமிதிமிதிமிதிமிதிமிதிமியென்று துப்பாக்கிகுண்டுகளும்
மேல்குண்டுக்குகீழேபாய்கிறது பாராசாரிகுதிரை
கீழ்குண்டுக்குமேலேபாய்கிறது பாராசாரிகுதிரை
குண்டுக்குநடுவிலேபுகுந்துபாயுது பாராசாரிகுதிரை
இத்தனைகுண்டுக்குதப்பிவருகுது பாராசாரிகுதிரை
மருந்துபுகையிலேபுகுந்துவெட்டுகிறான் ராசாதேசிங்கு
தென்னங்குலைபோலேகுவித்துப்போடுகிறான் ராசாதேசிங்கு
சோளத்தட்டையறுத்தாப்போலே யறுத்துப்போடுகிறானும்
வாழைத்தண்டைவீசினாப்போலே வீசிப்போடுறானும்
கரகரவென்றுசுழன்றுவருகுது நவாப்புபாளையமும்
கரணைகரணையாய்விழுந்துபோகுது நவாப்புபாளயமும்
கண்டமட்டும்சாடுகிறானையா சிப்பாய்தேசிங்கு
பதினைந்துநாழிகைமிகவும்மாச்சுது நவாப்புபாளயமும்
சோறுசோறென்றுதுடிக்குதையா நவாப்புபாளயமும்
பாணிபாணியென்றுதவிக்குதையா நவாப்புபாளயமும்
தாயில்லாபிள்ளைபோல்தவிக்கிறார் நவாப்புபாளயமும்
இனிஇருந்தால்பிழைக்கமாட்டோம் தேசிங்குகையினால்
என்று-கள்ளக்குரிச்சிக்கோடிப்போகுது சிறிதுபாளையமும்
ஆரணிகோட்டைக்கோடிப்போகுது சிறிதுப்பாளையமும்
ஓடிப்போகிறசனத்தைக்கண்டான் ராசாதேசிங்கு
குதிரையைநிறுத்திசிரித்தானையா ராஜாதேசிங்கு
அந்தவேளையிற்கண்ணால்கண்டான் தாவுத்துக்காரனும்

இருபதினாயிரம் துருப்புகுதிரை யேவியேவிட்டானும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
படபடவென்றுதுடிக்கிறதுமீசை ராசாவுக்கானும
கோபத்தினாலேசிரித்தானையா ராசாதேசிங்கு
இனியில்லாதகோபம்பிறந்தது ராசாவுக்கானும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரிகுதிரை
கரணைகரணையாய்விழுந்துபோகிறது நவாப்புபாளையமும்
குதிரைசுழன்றமிஷநாழிக்குத் துருப்புகுதிரைகளும
கால்மாகிதலைமாடாய்விழுந்துபோகிறது துருப்புகுதிரைகளும்
இருபதினாயிரங்குதிரையங்கேகடாருய்விழுந்தது
இரண்டாயிரம்யானையங்கே யேவியேவிட்டானும்
ஆனைவேடிக்கைப்பார்க்கிறானையா ராசாதேசிங்கு
இரும்புலக்கையைவாங்கியடிக்குது பட்டத்துயானையும்
கரகரவென்றுசுழட்டியடிக்கிறது யானைகளானாலும்
வீறிட்டுக்கொண்டோடிவருகுது யானைகளானாலும்
ஆனையைப்பார்க்கிலுமசானுயரம்பாய்கிறது பாராசாரிகுதிரை
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
ஆனையின்மேலேதாண்டிவிழுது பாராசாரிகுதிரை
பாலாவுருகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
குத்திகுத்திசாய்த்துபோடுகிறான் ராசாதேசிங்கு
உலக்கைபோட்டுசலாம்வாங்குது பட்டத்துயானைகளும்
மண்ணைக்கவ்விசாகிறதையா மதத்தயானைகளும்
இரத்தங்குடித்துசாகிறதையா சிலதுயானைகளும்
குடல்கள்சரிந்துசாகிறதையா மதத்தயானைகளும்
மஸ்தகம்பிளந்துசாகிறதையா மதங்கொண்டயானைகளும்
உதைத்துக்கொண்டுசாகிறதையா சிலதுயானைகளும்
கறகறவென்றுசுழன்றுசாகுது கருத்தயானைகளும்
இரண்டாயிரம்யானையங்கே டாருய்விழுந்தது
யானைவிழுந்ததைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
யானையின்மேலே அம்பாரிவைத்து அவனுமிருக்கிறானும்
அங்கேயிருந்ததாவுத்துக்காரனைக் கண்ணாலேகண்டானும்
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலை தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பாலாவுருவிபோட்டானையா ராசாதேசிங்கு
முன்னேயிருந்தமாவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குப்பாலாயிழுத்துப்பிடித்தான் ராசாதேசிங்கு
அந்தவேளைக்குச்சலாம்வாங்கினான் தாவுத்துக்காரனும்
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் ராசாதேசிங்கு
நானிப்போதேயோடிப்போறேன் ராசாதேசிங்கு

அந்தவேளையில்கோபம்பிறந்தது ராசாவுக்கானாலும்
நவாப்புக்கேற்றசினேகிதக்காரன் தாவுத்துக்காரனும்
நாராயணாகோவிந்தாவென்று போட்டானேபாலவை
செத்துப்பட்டுதாவுத்துக்காரனும் நிலத்தில்விழுந்தானும்
நிலத்தில்விழவேநவாப்புசனமும் நிமிஷமிருக்கவில்லை
கண்டபடியோடிப்போச்சுது நவாப்புபாளயமும்
தாவுத்துக்காரனும்செத்தசேதி நவாப்புகேட்டானும்
இனிஇல்லாதபயம்பிடித்தது நவாப்புக்கானாலும்
இனியிருந்தால்தலையேபோகும் தேசிங்குகையாலே
ஓடியோடியொளிக்கிறானையா நவாப்புசைதுல்லா
மலையடிகாடுமூலையோரத்தில் நவாப்புமொளித்தானும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராசாதேசிங்கு
இருபத்திரண்டுவயதுள்ளபாலன் ராசாதேசிங்கு
அம்பதினாயிரம்குதிரைவெட்டினான் சிப்பாய்தேசிங்கு
எண்பதினாயிரமசேனைவெட்டினான ராசாதேசிங்கு
இரண்டாயிரமயானைவெட்டினான் ராசாதேசிங்கு
கைகளெல்லாமோய்ந்துபோய்சது ராசாவுக்கானாலும்
இரத்தகவுலுகப்பிகொண்டது ராசாவுக்கானாலும
நவாப்புபாளையஞ்சுற்றிப்பார்த்தான் ராசாதேசிங்கு
இவனைப்பார்த்துப்பதுங்கிறார்கள் சிப்பாய்மார்களும்
எடுத்தபீரங்கியெடுத்தார்போலே போட்டுவோடுகிறார்கள்
தன்னிடசெனத்தைகண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
குண்டுமநத்தில்விழுந்துசெத்தது ராசாசெனமுந்தான்
ஐந்துகுதிரைமிச்சமிருக்குது ராசாவுக்கானாலும்
ஐந்துகுதிரையைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
செஞ்சிக்கோட்டைக்குப்போவோமென்று குதிரைதிருப்பினானும்
அறுபத்தினாலுசண்டாமாரும டாறாய்விழுந்தது
ஐந்துகுதிரையோடேவாறான் ராசாதேசிங்கு
சங்கராபரணிக்கரையேறிவந்தான் ராசாதேசிங்கு
குதிரையைவிட்டுகீழேகுதித்தான் ராசாதேசிங்கு
முழங்கால்வரையிற்றண்ணீரங்கே பிடித்துவோடுகிறது
கத்தியைக்கழுவிஉறையிலேவிட்டான் ராசாதேசிங்கு
மூன்றுகைதண்ணீர்குடித்தானையா ராசாதேசிங்கு
மரத்தினிழலிலேயுட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குத்தாயாதியையா தன்சிங்குமகாராசன்
ஒற்றைக்குதிரைபோட்டுகொண்டு ஓடிவந்தானெதிரே
ராமுராமுரேசீத்தாராமுரே ராசாதேசிங்கு
கீர்த்தி நம்பிவந்தவயணமென்ன ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராசாதேசிங்கு

நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் தன்சிங்குராசவே
நவாப்புசெத்துபோனானையா தன்சிங்குராசாவே
நீர்-வந்தவயணமென்னசொல்லும் தன்சிங்குராசாவே
என்னபேச்சுபேசினீரையா ராசாதேசிங்கு
செத்துப்போனவன்சேத்துப்பட்டு தாவுத்துக்காரனும்
மலையடிவாரமூலையோரத்தில் நவாப்புமொளித்தானும்
சொச்சத்தோடேவிட்டுப்போகாதே ராசாதேசிங்கு
சல்திசல்திபுறப்படுமென்றான் தன்சிங்குராசாவும்
இந்தப்பேச்சைக்காதில்கேட்டான் சிப்பாய்தேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
எனக்குவளர்த்தபாராசாரியை முன்னுக்குவரச்சொல்லு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
முன்னுக்குவந்துநின்றதுபாரு பாராசாரியும்
நாராயணாகோவிந்தாவென்று குதிரையேறினானும்
ஐந்துகுதிரையோடேபோகிறானையா ராசாதேசிங்கு
அவன்-மார்பிலிருந்தரங்கநாதர் வழியிலேநின்றாராம்
அவன்-தோளிலிருந்தரங்கநாதர் தூரத்தில்நின்றாராம்
இரங்கநாதரைகண்டுதொழுதான் ராசாதேசிங்கு
அரி அரிகோவிநதாவென்றான் ராசாதேசிங்கு
அப்பாகேளுமஅப்பாகேளும் குழந்தைதேசிங்கு
இத்தனைசண்டைபண்ணினாயோடா குழந்தைதேசிங்கு
இன்றையசண்டைநிறுத்திப்போடடா மகனேதேசிங்கு
நாளைச்சண்டைவைத்துக்கொள்ளடா மகனேதேசிங்கு
நானுங்கூடவருகிறேனடா மகனேதேசிங்கு
அந்தவார்த்தையைக்காதில்கேட்டான் சிப்பாய்தேசிங்கு
கையையெடுத்துதொழுதானையா ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ரங்கநாதரே
என்னைவிட்டுநீர்பிரிந்துபோனீர் ரங்கநாதரே
என்னிடபலமும்பாதிபோச்சுது ரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்போனோ ரங்கநாதரே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு ரங்கநாதரே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது ரங்கநாதரே
நான்-போய்வருகிறேன்போய்வருகிறேன் ரங்கநாதரே
சல்திஎனக்குவுத்தாரந்தாரும் ரங்கநாதரே
இப்படிசொல்லிவருகினையா ராசாதேசிங்கு

## நவாப்புதோன்றமல்லனை தேசிங்குராசனிடத்திற்கு சமாதானத்திற்கு அனுப்புதல்



போனராசாதிரும்பினசேதி நவாப்புகேட்டானும்
தோன்றமல்லனையனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
சமாதானத்திற்கனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
மூன்றுகுதிரையோடேவருகிறானையா தோன்றமல்லனும்
சமாதானத்திற்குவருகிறானையா தோன்றமல்லனும்
நாமத்தைப்போட்டுவருகிறானையா தோன்றமல்லனும்
தேசிங்குமுன்னேவருகிறானையா தோன்றமல்லனும்
குதிரைவிட்டுகீழேகுதித்தான் தோன்றமல்லனும
மண்டிபோட்டுசலாம்வாங்கினான் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் ராசாதேசிங்கு
ஒன்பதுகோடிசீமையுமக்கு நவாப்புதாரேனென்றார்
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நவாப்புதாரேனென்றார்
ஒருசிறைக்குஒன்பதுசிறை நவாப்புதாரேனென்றார்
சமாதானமாயபோய்வாருமையா ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
என்னப்பேச்சுபேசினாயடா தோன்றமல்லண்ணா
இன்றைக்கிருக்கும்சமாதானம அன்றைக்கிருக்கவேணும்
என்னுடன்வளர்ந்தமோவுத்துக்காரன் அவனேபோனானும்
நவாப்புக்கேற்றபிராணசிநேகிதன் தாவுத்துக்காரன்போனான
இரண்டுசீவனுக்கென்னிடசீவன் என்னத்துக்கிருக்கிறது
உன்கையில்பலமிருநதால் செஞ்சிக்கோட்டையுனக்கு
என்கையில்பலமிருந்தால் ஆற்காடுயெந்தனுக்கு
சல்திசல்தியோடிப்போடா தோன்றமல்லண்ணா
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி யோடியேவாரானும்
தோன்றமல்லனைகண்டித்தசேதி நவாப்புகேட்டானும்

வெங்கடராயரை அனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
ஐன்னூறுகுதிரைதயார்படுத்தினான் வெங்கடராயரும்
பாளையம்வருவதைகண்ணாலேகண்டான் சிப்பாய்தேசிங்கு
பட்டாவுருவிகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
பாளையங்குறுக்கேபுகுந்துவெட்டுகிறான் ராசாதேசிங்கு
மண்டைமண்டையாய்த்தள்ளிவெட்டுகிறான் ராசாதேசிங்கு
வெங்கடராயரைகண்ணால்கண்டான் ராசாதேசிங்கு
ஆனையின்மீது அம்பாரிவைத்து அவனுமிருக்குறானும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பட்டாவுருவிவோங்கினானையா ராசாதேசிங்கு
ஓங்கினபட்டாவிழுந்ததேயானால் அவனேபோய்விடுவான்
வாய்பேச்சுபேசவில்லை வெங்கடராயரும்
மார்பிலிருந்தபூநூலைகாட்டினான் வெட்கடராயரும்
பூநூல்போட்டபிராமணனையா வெங்கடராயரும்
பூநூலைக்கண்ணால்கண்டான் ராசாதேசிங்கு
அவனைவிட்டுஅப்பால்போனான் ராசாதேசிங்கு
அரிந்தரிந்துவீசிப்போடுகிறான் ராசாதேசிங்கு
வாலிக்கோட்டைஅவுலதாரும் ரண்டாய்விழுந்தானும்
கள்ளக்குறிச்சிகானுசாயபு டாறாய்விழுந்தானும
மதுரைசீமைமலையாளத்தானும ரண்டாய்விழுந்தானும்
திண்டிகல்லுகொலுமுகத்தானும் ரண்டாய்விழுந்தானும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரும் துண்டாய்விழுந்தாரும்
அவரைச்சேர்ந்தபாளையமெல்லாம் அடியோடேவிழுந்தாராம
ஆனையின்மேலேதொட்டிலைவைத்து அவனுமிருக்குறானும்
நவாப்பைகண்டுசிறித்தானையா ராசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
சல்-பாலாவுருவிபோட்டானையா ராசாதேசிங்கு
முன்னேயிருந்தமாவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாறுக்குபாலாயிழுத்துபிடித்தான் ராசாதேசிங்கு
அந்தவேளைக்குச்சலாம்வாங்கினான் நலாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
உந்தன்மேலேசண்டைக்குவரவில்லை ராசாதேசிங்கு
ஒன்பதுகோடிசீமைதாரேன் ராசாதேசிங்கு
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான்தாரேனையா
ஒருசிறைக்குஒன்பதுசிறை நான்தாரேனையா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் ராசாதேசிங்கு
சல்-யென்னபேசுபேசினாயடா நவாப்புசைதுல்லா
இன்றைக்கிருக்கிறசமாதானம் அன்றைக்கிருக்கவேணும்

என்னுடன்வளர்ந்தபிராணசினேகிதன் மோவுத்துக்காரன்போனான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது மோவுத்துக்காரனோடே
உனக்கிசைந்தபிராணசினேகிதன் தாவுத்துக்காரன்போனான்
இரண்டுசீவனுக்கென்னிடசீவன் என்னத்துக்கிருக்கிறது
என்கையிற்பலமிருந்தால் ஆற்காடென்னுது
உன்கையிற்பலமிருந்தால் செஞ்சிகோட்டையுன்னுது
நூற்றெழுபத்திரண்டுபாளயப்பட்டு உனக்கேயானாலும்
அந்தஎழுபத்திரண்டில்சேர்ந்ததடா செஞ்சிகோட்டையும்
செஞ்சிகோட்டைபணமுனக்கு குறைந்துபோச்சுதோ
இதோபணமும்வருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
சல்-பாலாவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
ஈட்டிவருகுதுவாங்கிக்கொள்ளும நவாப்புசைதுல்லா
தப்பித்துக்கொள்ளும்தப்பித்துக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
யானைவயத்தில்தொட்டில்கட்டி அவனுமிருக்கிறானாம்
தொட்டிலிருந்தமாவெட்டியானும் யெட்டிப்பார்த்தானாம்
அவனுக்குமேமேகால்வைத்திருக்கிறது பாராசாரிகுதிரை
வலதுகாலைவோங்கிவெட்டினான் மாவெட்டிகாரனும்
வலதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
மூன்றுகாலோடேகீழேபுகுந்தது பாராசாரிகுதிரை
மூன்றரைநாழிசண்டைபண்ணுகிறான் ராசாதேசிங்கு
மூவாயிரஞ்சனங்களுமங்கே டாறாய்விழுந்தது
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுததான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைதலைமேமே
நிமிஷகாழிக்தகுதிரையிருந்தால் நவாப்புபோய்விடுவான்
இ—துகாலைவெட்டினானையா பாராசாரியை
இரண்டுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
இடதுகாலும்விழுந்துபோனதை ராசாபார்த்தானாம்
குதிரைவிட்டுக்கீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
இரண்டுகையிலும்பட்டாவாங்கினான் ராசாதேசிங்கு
குதிரையைவெட்டியழுதானையா ராசாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராசாவுக்கானாலும்
நவாப்புபாளையம்புகுந்தானையா சிப்பாய்தேசிங்கு
எங்கேயிருந்தசிப்பாய்மாரும் ஏகமாய்கூடினார்கள்
பதுங்கியிருந்தசிப்பாய்மாரும் பதறியோடிவந்தார்
கலகலகலகலகலகலவென்று கத்திசண்டைகளும
சல்-கொக்குத்திரளில்ராஜாளிபூந்தாற்போல்புகுந்துவெட்டுகிறான்
வெள்ளரிக்காயைவீசினாப்போலே வீசிப்போடுகிறான்
டாறுடாறாய்த்தீர்த்துப்போடுகிறான் நவாப்புபாளயத்தை
கைப்பிடியாகப்பிடிக்கச்சொன்னான் நவாப்புசைதுல்லா

அதற்கவனும்பயப்படமாட்டான் சிப்பாய்தேசிங்கு
இருந்தபாளையமெல்லாம்விழுந்தது தேசிங்குகையாலே
நவாப்பின்மேலேதிரும்பினனையா ராசாதேசிங்கு
நவாப்புவோடிவொளித்தானையா நடுவானபாளையத்தில்
நவாப்பைசுற்றிப்பார்த்தானையா ராசாதேசிங்கு
நடுத்தண்டிலேதெரிகிறதுபாரு நவாப்புபாளயமும்
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராசாவுக்கானுலும்
சல்-கொக்கரித்துதண்டில்நுழைந்தான் சிப்பாய்தேசிங்கு
ஆனமட்டும்சாடுறானையா நவாப்புபாளயத்தை
நவாப்புசனங்கள்போனவழி நானுஞ்சொல்லமாட்டேன்
ஆனைகுதிரைசேனைகளெல்லாம் அடியோடமாண்டுதுபார்
முழங்கால்மட்டும்ரத்தமுமங்கே நிலத்திலோடுதுபார்
மண்டிபோட்டுஉட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
இவனுக்கெதிரியாரையுங்காணேம் நவாப்புபாளயத்தில்
என்னுயிர்வாங்கயெனக்குஎதிரி யாரையுங்காணேனே
என்னுயிரோடேசெஞ்சிகோட்டைக்கு நான்தான்போவேனே
சல்திசல்திசக்கரமனுப்பும் ரங்கநாதசுவாமி
இனிமேலிருக்கஞாயமில்லை ரங்கநாதசுவாமி
கோவிந்தாநாராயணாவென்று கும்பிட்டென்னசெய்தான்
கத்திசுழட்டிஆகாயமெறிந்தான் ராசாதேசிங்கு
மார்பைவிரித்துமண்மேல்படுத்தான் ராசாதேசிங்கு
அப்போமூன்றுசத்தம்போட்டானையா ராசாதேசிங்கு
கிருஷ்ணாராமாகோவிந்தாவென்று கீழேவிழுந்தானும
ஸ்ரீரங்காரங்காவென்றுசொல்லி பிராணனைவிட்டாரும்
ராசாவிழுந்ததைக்கண்ணாலேகண்டான் நவாப்புசைதுல்லா
ஆனைவிளைவிட்டுகீழேகுதித்தான் நவாப்புசைதுல்லா
தூக்கியெடுத்துமடிமீதில்வைத்தான் நவாப்புசைதுல்லா

நவாப்புதேசிங்குராசனையெடுத்துமடிமீதில்வைத்து

வியசனப்பட்டல்

ஐயாகேளும்ஐயாகேளும் ராசாதேசிங்கு
எண்ணாயிரங்குதிரைமாண்டுதே அப்பாதேசிங்கு
மூவாயிரங்கோடிதுரைகள்மாண்டாரே ராசாதேசிங்கு
உயிருக்குப்பயந்துஓடிவொளிச்சண்டா அப்பாதேசிங்கு
உடனேதிரும்பிவூருக்குபோகாமல் ஐயாதேசிங்கு

பொன்னான திருமேனியைப் பொடியாக்கிவிட்டாயே அப்பாதேசிங்கு
தங்கத்திருமேனி தரையில்விழுந்தாயே ஐயாதேசிங்கு
பாவிநான்வந்துபழிகாரனானேன் பாலாதேசிங்கு
உன்னைப்போலசூரத்துஒருவருமில்லையே ஐயாதேசிங்கு
நீ-ஒருவனிருந்தால்உலகத்தையாள்வாய் அப்ப தேசிங்கு
நான்பாவியிருந்துபலனென்னசொல்லும் ஐயாதேசிங்கு
உலகத்தில்நிந்தனையொருவனேயானேன் அப்பாதேசிங்கு
மண்பூமிவேண்டாமல்பொன்பூமிபோனாயோ அப்பாதேசிங்கு
பொன்னுபூமியிலுந்தனபுகழும்நடக்குமோ ஐயாதேசிங்கு
இப்படிசொல்லியழுகிறானையா நவாப்புசைதுல்லா
கதறியேமெத்தஅழுகிறானையா நவாப்புசைதுல்லா
களைகள்வந்துமூண்டுகொண்டது நவாப்புக்கானும்
கூடவந்தசேனைகளெல்லாம் கோவென்றழுதார்கள்
களைகள்தெளிந்துயெழுந்துட்கார்ந்தான் நவாப்புசைதுல்லா
அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாய்க்காநீ
குதிரைக்குக்கோரிகட்டச்சொல்லடா பங்காருநாய்க்காநீ
கோடிதிரவியம்தானங்கொடடா பங்காருநாயக்காநீ
பட்டத்துபல்லக்குக்கொண்டுவாடா பங்காருநாய்க்காநீ
பஞ்சணைமெத்தைகள்போட்டுபரப்படா பங்காருநாய்க்காநீ
அந்தட்சணமேசெய்தானையா பங்காருநாய்க்கனும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் ராசாவையானும்
பார்த்தழுதுபல்லக்கில்வைத்தான நவாப்புசைதுல்லா
நீயேவாடா நீயேவாடா தோன்றமல்லண்ணா
செஞ்சிகோட்க்குப்போய்விட்டுவாடா தோன்றமல்லண்ணா
தூக்கியெடுத்துதோள்மீதில்வைத்தார் சமேதாருமாரும
போடுபோடென்றுபோறாரையா சமேதாருமாரும்
செஞ்சிகோட்டைநெருங்கிவந்தான் தோன்றமல்லனும்

### தேசிங்கு இறந்ததை ராணிகேட்கல்

அந்தச்சேதிகாதிலகேட்டாள் ராணியம்மாளும்
அலங்கத்தின்மேலேறிப்பார்த்தாள் ராணியமமாளும்
மார்புக்குகாயம்பட்டதேயானால் கோட்டைக்குவரச்சொல்லும்
தோளுக்குகாயம்பட்டதேயானால் திரும்பிபோகச்சொல்லும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
மாருக்குக்காயமபட்டதென்று உத்தாரங்கொடுத்தானும

கோட்டைக்குள்ளேபுகுந்தானையா தோன்றமல்லனும்
பல்லக்கையிறக்கிவைத்தானையா தோன்றமல்லனும்
சலாம்வாங்கித்திரும்பினானையா தோன்றமல்லனும்
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி தைரியமானாராம்
ஆலங்கத்தின்மேலேயிருந்தராணியம்மாளு மிறங்கியேவந்தாளாம்
ராணியம்மாளழுகிறசத்தஞ் செஞ்சியில்கேட்டது
செஞ்சிகோட்டைசனங்களெல்லாஞ் சேரவோடிவந்தார்
ராசாபக்கத்தில்வந்தாளையா ராணியம்மாளும்

இராணிதேசிங்குராஜனைப்பார்த்துப்புலம்பல்.

என்னசொல்லிபுலம்பினாளையா ராணியம்மாளும்
எந்தன்பேச்சைதடுத்துபோநீரே யெந்தன்பிராணநாதா
உந்தனெழுத்துமிப்படியிருந்ததோ யெந்தன்பிராணநாதா
உன்னிடஉயிருக்குகாயமாச்சுதே யெந்தன்பிராணநாதா
என்னிடஉயிருயினிமேலிருக்குமா யெந்தன்பிராணநாதா
நானுங்கூடவாரேனையா யெந்தன்பிராணநாதா
அக்கினிகுழியைவெட்டச்சொன்னாள் ராணியம்மாளும்
சந்தனக்கட்டைகுங்குமகட்டை சவுக்கமாய்போடச்சொன்னாள்
முழுகிஸ்தானம்பண்ணாளையா ராணியம்மாளும
தலைநிறையபுஷ்பஞ்சூட்டினாள் ராணியம்மாளும்
மஞ்சள்பாவாடையுடுத்தினாளையா ராணியம்மாளும்
மடிநிறையதாம்பூலம்வைத்தாள் ராணியம்மாளும்
ரங்கநாதரைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
பூமிதேவியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
ஆகாயவாணியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
அக்கினிகுழியைசுற்றிவந்தாள் ராணியம்மாளும்
கண்கள்குளிரராஜாவைபார்த்தாள் ராணியம்மாளும்
இராஜாவுடனேதீயில்குதித்தாள் ராணியம்மாளும்
தேவதுந்துமிமுழங்குதையா செஞ்சிக்கோட்டைக்குள்ளே
புஷ்பவிமானம்வந்துநின்றது ராஜாவுக்காணலும்
இருவரும்கூடியேறினாரையா புஷ்பவிமானத்தில்
புஷ்பமாரிபொழிந்துதையா செஞ்சிகோட்டைக்குள்ளே
வைகுந்தபதவியடைந்தாரையா ராஜனும்ராணியுமாய்
ஸ்ரீரங்கர்பாதஞ்சேர்ந்தாரையா ராஜாதேசிங்கு

வாழி

தேசிங்குராசன்கதையைப்படித்தவர் செழித்துமிகவாழி
கேட்டவர்கள்யாவரும்சம்பத்துடையவராய்க் கிளைத்துமிகவாழி

புத்திரசம்பத்துடையவராய்க் கிளைத்துமிகவாழி
மாடுகன்றுமனைவியுமுண்டாம் வையத்தோர்வாழி
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம்யாவும் மூசியாமலேவாழி
சந்திரசூரியர்களிருவருமே தழைத்துமிகவாழி
இந்திரனிந்திராணியட்ட கின்னரர்எல்லோரும்வாழி
முப்பத்துமுக்கோடிதேவர் முனிவர்களும்வாழி
நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் தாமும்மிகவாழி
செங்கெழிமிகுந்தசெஞ்சிநகரம் செழித்துமிகவாழி
சொன்னமொழிதவருத்தேசிங்குராசன் சுகமாய்மிகவாழி
பலகலையுணர்ந்தபாவலர் பண்பாய்மிகவாழி
நலமுடனிந்தசரிதையை படித்தவர்நன்றாய்வாழ்கவே
ஊழியூழியுலகிலுள்ளவர் உகப்பாய்வாழ்கவே
வாழிவாழிநான்குமறையு மெண்ணாளும்வாழ்கவே
கலியுகமளவுமம்பாவிளக்கம் கதித்துவாழ்கவே

## கலிவிருத்தம்.

தீரவீரதேசிங்கு சரிதையை
பாருளோர்தினம் பாடிமகிழவே
ஏர்கிகர்அருணகிரி வேளிநால்
கூருமச்சிற்கொடுத்து விடுத்தவே

## அருசீரடி ஆசிரியவிருத்தம்

அண்டமதுயீரேழு உந்திக்குள்ளே
ஆதரித்தயெங்கைபிரான் ரங்கர்வாழி
பண்டுமனுமுறைப்படியே செஞ்சிகாட்டை
பாலித்ததேசிங்கு குடையோன்வாழி
யெண்டிசையுமரிந்துயிதைக் கவியாய்ச்செய்த
யேருடையான்புகழேந்தி யின்னம்வாழி
கண்டிதனைவாசிக்கும் புவியுளோர்கள்
கதிர்மதிபோலென்னாளும் வாழிமாதோ

## தேசிங்குராஜன்கதை

முற்றிற்று.

---